[illegible]
[illegible]

E.D.R.C. 3310
RRivo 80 4.1884.

O-,891 MMI,A
M84
116809

பிஸ்மில்லாகிற்றகுமானிற்றகீம்.

அந்தமாநகரையாண்ட

அம்மனாசிபுகுமாரனாகிய

# அப்பாசுநாடகம்.

இராமநாதபுரம்

இரவுன்லாப்புக்கடை

பவெமுகம்மதுஇபுறுகீம் சாகிபு

அவர்கள்

ஆதனயாசவியற்றியது.

இஃது,

விரணைத்தோட்டம்,

கோவிந்தநாயகரால்பரிசோதிப்பித்தபடி

திருநெல்வேலிப்பேட்டை

வக்காளம்-முகம்மதுராவுத்தர்

குமாரர்

மகுதனாபிராவுத்தரவர்களால்

திருவொற்றியூர்

திருசப்பமுதலியார்-குமாரர்

பரசுராமமுதலியாரது

பப்பிரமரூந்திராக்ஷசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம்பதிப்பு-காப்பி-௲.

௧௮௯௫.

இந்தப்புத்தகம் கவர். பொருந்தியகவர்ன்மெண்டில்

ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது.

உ

## சாற்றுக்கவிகள்.

இராகம்-கலியாணி ரூபகதாளம்.

பல்லவி.

அப்பாசநாடகம்போ லெப்பாயிப்பாரிலுண்டோ-
அப்பாதெரிந்துசெப்பாய்

அநுபல்லவி.

தப்பாத்தபோதனரும்-சங்கத்தமிழ்வலோரும்
சாதுர்யமெனச்சொல்ல-தருந்தகதையாம்நல்ல — அப்பா

சரணங்கள்.

நீடும்புகழ்சேர்திருநெல்வேலிப்பேட்டையென்று
நிகரில்சீமைமுழுதும்நிகழ்த்தும்பிரபலமன்று
பாடும்புலவோர்க்குப்பொற்பணமளந்துகொடுக்கும்
பரிவின்மிகுமுகம்-மதுரவுத்தர்பெறு
தருவைநிகர்கரதல்மருவுமரு
தனாவுத்தரிசை-யெனத்தன்சொந்த
தனங்கொடுத்துஇசைவித்துச்சிறந்த — அப்பா

நாகநாட்டைப்பழிக்குங்நகராய்ச்சொலுமிராம
நாதபுரத்திற்கல்வி நன்றுயுணர்ந்தமேதம
மாகவாழ்த்திசிர்-ப-வெ-முகம்மதிபுருகிம்
நாடகத்தமிழ்நடையிலெழுதசா
நாடியெழுதிததாளமமைவுற
நவரசக்கதையைமுதமிதுவென
புவியின்மிக்கவர்க்குதவுமதிசன — அப்பா

வாமதுருரும்வடிவார்பிறைவளரொத்தி
மாநகரிருசப்பமரிபன்செய்தவமுற்றி
பரமசிவமேயென்றுபஜிக்கும்படியுதித்த
பாக்யனதிக-கிலாக்கியனுயர்கன
யோக்யன்தவறிலா-வாக்யகதிகுல
பாகிராமப்பிரபு-டகன்றண்பாப்
பிரபமுத்திராசந்தஅச்சிற்பதித்திட்ட — அப்பா

——()——



பிஸ்மில்லாஹிற்றகுமானிற்றகீம்.

## இந்நூலின்சரித்திரச்சுருக்கம்

——0——

நெடியகடல்சூழ்ந்த பூலோகத்தின்கண் மஹாசிறப்புற்றோங்கிய தேசங்களிலொன்றாகிய அந்தமாநகரை அரசாட்சிசெலுத்துகின்ற இராஜமரியாதைபூஜித மஹாராஜராஜஸ்ரீ அகமதுஷாவென்னும் அரசரானவருக்கு எல்லாப்பாக்கியமுநிறைந்து புத்திரபாக்கியமில்லாமல் மனமகிழ்ச்சியான துருதைந்து எழைமிசக்கின்முதலாகிய அகுளர்களுக்குச் சயிர்க்குவிருந்தென்னும் முப்பத்திரண்டு தருமமுதலாகிய சக்காத்கமிந்து பள்ளிமுதலிய சாவடிப்போட்டி குடிகளிடத்தில் ஆறிலொருகடமைவாங்கி நிறைநிசெலுத்திநீதத்துடனே எல்லாருடையமனதிற்கு யோர்குறைவின்றிதன்னுயிர்போல்மன்னுயிரையுங்காத்து அரசுசெலுத்தி வருகிறநாளையில் அல்லாகுத்புகாலுக்குத்த ஆலாயுடையவுதவியால் ஒருபுத்திரன்பிறக்க அதற்கு அப்பாசென்னும் பெயர்வைத்துவளர்ந்து சாமர்த்தியனுயிருக்கிறநாளையில் அகமதுஷாவென்பவரும் அவர்மனைவிமதியாதும் தனதுபுத்திரனைப்பார்த்து காயமறைந்து இச்சப்பூலோகத்திலுள்ளவர்களும் நயக்குறைகளில்லென்று பெருமையடைந்திருக்கையில் (பெருமையடைந்தவர் சிறுமையடைவார்களென்கிற பழமொழிப்போல்) அதிருயகனுடைய விதிப்படி அப்பாசென்பவர் காட்டிற்போய் வேட்டையாடின விடத்தில் அவருக்குத்தாகமேலிட்டுப் பிரளமிக்கையில் காளைகள்சலந்தேடிப்போனவிடத்தில் ஒர்பாம்பிருக்கவிருந்தது அதைத்தெரியாமல் தண்ணிரென்றெடுத்துக்கொடுக்க அதைக்குடித்தவுடனே வெறிபிடித்ததால் அச்சேதியை அகமதுஷாவறிந்து ஓர்வைத்தியரால வெறிதீர்க்கச்செய்திருக்க அந்தகாலத்திலுள்ள சிலபெரியோர்கள்கூடி பார்க்கப்படி இக்குழந்தையை அந்தகரைவிட்டுக் காட்டிற்குப்போய்வரும்படியாய்ச்சொல்ல அதுபோல அகமதுஷாவும் அவர்மனைவிமதியாதும் இவர்கள்புதல்வனப்பாசம் அந்தகரைவிட்டுக்காட்டிற்போகும்போது பொருள்கள்முதலான யாவற்றையுங்கள்ளர்கள் பறித்துக்கொண்டுபோகப் பின்புபாலவனங்களிற்போய் உணவுமுதலிய ஆகாரங்களுக்குவருத்தப்பட்டு நடக்கிறதற்கு முடியாமல் தங்கள்தமதிருவரையும் அப்பாசதோளிற்றூக்கிக்கொண்டு நடக்கையில் காலில்கல்லிடறிவிழுந்து மூர்ச்சையாகித்தெளிந்தெழுந்து மிகவும்வருந்திநடக்கையில் சிந்தாதிகதைத்தைக்கண்டு ஒருநாள் பிச்சைபெற்றுக்கொண்டு மதுராசாலையில் நின்றுகுப்போய் வேலையகப்படாமல் ஒருதிண்ணையில் அப்பாசபடுத்திருக்க அந்தநகரத்தையாளும் அரசனுடைய பயிர்ப்பட்டியானது ப

## இந்நூலின்சரித்திரச்சுருக்கம்.

நந்து இவர்ம[illegible]யில்வந்திருக்க அதைப்பிடித்து விற்பனைசெய்தானவுந் காருமென்று ருவிதியில் விலைகூறிநிற்கையில் அவ்லூரையாளுந் தாசிதாசனுடையகாவற்காரர்கள் பயிரிப்பட்சியையும் அப்பாசையுங்கண்டு கட்டிப்பிடித்து காசிதாசனிடத்தில்விட அவர் இவர்வரகரத்தைப்பல்லாக்கிட்டு அகமதுசாவையும் அமர்மனைவியையும் அழைத்துவந்து மூவர்களுக்கும் விருந்துமுதலானதுமளித்துப் பிரியமாயிருக்கையில் அப்பாசுதாசிதாசனிடத்தில் ஆயிரம்பொன்னும் ஒருகுதிரையும்வாங்கிக்கொண்டு அதற்கீடாகதாயுந்தகப்பனையும் வைத்துவிட்டு அவர்களைவிட்டு ஒருசத்திரத்திற் றங்கியிருக்கையில் இந்தத்தாசிதாசன் தன்மனதிலொருகபடத்தையெண்ணி ஒருசேவகனிடத்தில் ஒருவோலையெழுதிக்கொடுத்து இதுபோலேசெய்யென்றனுப்ப அவனும் அப்பாசுமன்னன் தங்கியிருக்கிறமடம்போய்ச்சேர்ந்து ஒன்றுக்கொன்று விசாரித்துசோர்வுபார்த்து ஓலையின்பிரகாரமுடிக்கலாமென்றிருக்கையில அகஸ்மாத்தாய் காற்றுமழையும்வந்து சேவகனையும் அவன்பரியையும் அடித்துக்கொண்டுபோய்விட அவன்சோளிப்பையும் ஓலைச்சுருளும் அப்பாசு கையிலகப்பட அதைப்பார்த்துப் பிரலாபித்துக் கிழித்து ஓர்கிணற்றிற்போட்டுவிட்டு அதிசீக்கிரத்திற் சீனதேசத்தில் ஓர்கிழவிவீட்டிற்றங்கி அவ்வூராளும் பகுவிராஜன்மகள் பிரபாவெனன்பவளசொல் மசலாவுக்குப்பொருட்சொல்லி அவளைத்தோர்க்கும்படிச்செய்து அவளையும் நிக்காவென்னுங்கலியாணமுமுடித்து தன் தாய்தகப்பனிருக்கும் பதிக்குப்போய்ச்சேர்ந்து அவர்களையுங்கூட்டிக்கொண்டு முன்சாமிரமுவிழ்ந்த பாலைநிலத்தில் புதிதாயொருபட்டணமும் பள்ளியுமுண்டாக்கிஅதகளிற்குடியேற்றி கீர்த்தியுமுண்டாகும்படிச்செய்து தனதேசமாகிய அந்தமாநகரிற்போய் அகமதுசாய்புக்கு இரண்டாவதுபட்டமுங்கட்டி தேசதேசத்தரசர்கள்முதலான குடிபடைகளும் அவர் ஆக்கியாபித்தபடி நடந்துகொண்டு வைபவமுத மங்களசரமாய்வாழ்ந்துகண்டு சுகபோகமாயிருந்தகிஸ்ஸாவை இக்காலம் சிற்றறிவுடையசிறியேனாகிய இராமநாதபுரம் இரவுண்சாப்புக்கடை-ப-செ-முகம்மது இபுறாகிம்சாகிபென்பவன் யாவர்களும் வாசித்துப்படித்து ஆனந்தமகிழ்ச்சியடையும்படியாய் நாடகாலங்காரமாய்ச்செய்தேன் இதில் யாதேனும் எழுத்துக்குற்றம் சொற்குற்றம் பொருட்குற்றமிருப்பினும் அதுகளைத்திருத்தி அல்லாவுக்காக மனப்பொறுதலைக்கொள்ளவேண்டுமென்பதற்கையாமிராது.

இங்ஙனம்,
இராமநாதபுரம்
இரவுண்சாப்புக்கடை
ப-செ-முகம்மதுஇபுறாகிம்சாகிபு.



பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர்றஹீம்.

# அப்பாசு நாடகம்.

காப்பு.

கடவுள்துதி-விருத்தம்.

மருகாமுந்தமானை மகிழ்ச்சிபோடரசுசெய்த
திருவளரகம்மதுசா தேபுவின்குமாரனை
பெருமையப்பாசுநாடகந்தனைப்பேசுதற்கு
கருவினுட்கருவாயுள்ள கர்த்தனைக்கருதுவோமே.

இதுவுமது.

பந்தமாய்சீனமாளும் பகுவீரவாசன்பெற்ற
சுந்தரிபிரபாவென்னுந் தோகைசொல்மசலாதன்னை
அந்தமாய்வென்றநல்லப் பாசுநாடகத்தைப்பாட
எந்தனையாளும்வல்ல விநாயகனுங்காப்புத்தானே.

இதுவுமது-அறுசீரடியாசிரியவிருத்தம்.

ஆதமிமுதலாசல்வம்பநிவிலப்பூல்லாமவோய்வந்த
நீதநபிறசூலின்பொன்னடியையெந்நாளும்நெஞ்சில்வைத்து
மாதவஞ்சேர்நால்யார்கள்பதப்பதத்தைமறவாமற்றினந்துதித்து
சோதிமசஹுதைவிமுகித்தின்றன்னடியைப்போற்றித்துதிசெய்வேனே

அவையடக்கம்.

மங்களஞ்சேர்ந்தமாநகரையாண்ட
மன்னனகமதுசாகிப் மகவாய்வந்த
சிங்கமெனுமப்பாசுநாடகத்தைச்
சிறப்புள்ளவுலகமதிற்சிறியேன்பாட
எங்குமுளபெரியோர்கள்கற்றுணர்ந்தோர்
யிக்கவியிலேதேனும்பிழையிருந்தால்
சங்கையில்லாமதைத்திருத்தியனைப்பொறுக்கச்
சாற்றினேனவர்களையான்போற்றிவேனே.

ஆக்கியோன்பெருமை.

பூர்ச்சந்திரவளக்குடையின்றங்கு மிரபலவப்பாசுநாடகத்தைப்
புகலுமிசுலாப் பஞ்குனியிருபத் திரண்டினிலிசைத்திடத்தவக்கி
யாத்திறந்தெளிரு மேதகுவெகுதானியவிடபமுமத்தறெய்தி
வனையிலுமிராம நாதபுரத்தில் சைகயிருக்குமூண்சாப்பெண்டு

காய்சினமிலா-ப-செ-முகமதிபுரூசிம்பாடினேன்பறவைசூழ்வைய
கவிஞர்மற்றுள்ளோர் கருத்தினிலின்பக் களிகறவாய்மடுத்தன்ன
எச்சிலாதிந்தநாடகத்தமிழை யிகழிலென்மதியமுள்ளளவும்
யாவருமெளிதிலுணர்ந்திகபரமா மினியவாழ்வடைந்துவாழ்குவரே.

தோடயம்-இ-ம்-நாட்டை.

வல்லஅந்தமாநகரை வரிசையுடனன்டிருந்த
செல்வனப்பாசியினுடகச் செழுந்தமிழைச்சொலவே
எல்லவருந்தொழுதேற்று மிறையவுமைமனத்திருத்தி
அல்லும்பகற்றொழுதிறைஞ்சி யநத்துயரையொழிப்பாம்
பாங்கமாய்ச்சீனகர் பருவீராஜன்பெற்ற
எந்திழையாமிகர்பானே யேய்த்தகதைசொலவே
சார்ந்தமொடுதருமநெறி சார்ந்தபெரியோரிதய
பூர்த்தவிசிலினிதிருக்கும் பொருளீசிதம்பணிவாம்
அகமதுசாபெற்றசுத னப்பாசுநாடகத்தை
மகிதலத்தில்மனமகிழ்ந்து மதாமுடன்சொலவே
சுகநலத்தைச்செகத்தெவர்க்குஞ் சொரிந்தருளுமுகம்மதுந
பிகரின்மலர்ப்பததுணையை நிதமுந்துதித்திடுவாம்
திருநிறைந்தவிறசூலின் திருவருளாலிக்கதையை
அருமையுடனம்புவியி லாசையுடன்பாட
பெருமைபெற்றபுவியிலுள்ள பெரியோர்கவிவாணரிதில்
உரியபிழையிருந்தாலும் முளம்பொறுத்துக்கொள்வீர்

பொது-விருத்தம்.

ஆதிகன்னபிமாருக்கும் அரியவனிறசூலுக்கும்
வேதமாமறையுணர்ந்த மிருபெரியோர்களுக்கும்
சிதவப்பாசுநாடகஞ்சொலுஞ்சிறியோருக்கும்
மாதவாசலியார்க்கு மகிழ்ந்துமங்களஞ்சொல்வேனே

மங்களம்-இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்.
பல்லவி.
மங்களம்-நித்ய-மங்களம்-சுப மங்களம்.
அநுபல்லவி.
இன்னிலமுற்றும்புகழு மன்னவ னப்பாசுக்கு (மங்களம்)
சரணங்கள்.
மங்களமிறையோனுக்கும் வள்ளலிறசூல்தனக்கும்
சங்கைநபிமார்களுக்குந் தரணியிலுள்ளோருக்கு மங்களம்
செல்வாசலியார்களுக்குந் திகழுசனுசைனுக்கும்
வல்லமுகியித்தீனுக்கும் வாழுங்காதிரொலிக்கு மங்களம்



எங்கும்புகழ்தங்கிடுநெல் பொங்கும்செல்வேலியூர்வாழும்
வங்காளமதுதனர்க்கு மாநிலமுள்ளவருக்கு மங்களம்
அச்சியற்றப்பாடிவைத்து அகிலத்துள்ளோர்கடந்த
முச்சகம்போற்றும்-ப-செ-முகம்மதிபுறுசேழுக்கு மங்களம்
செப்பருமொற்றியூரிருசப்பமுதலியார்தந்த
ஒப்பிலாப்பாசிரா மப்பிரபுவினுக்குநல்ல மங்களம்
தர்மவானன்னவன்சொந்த தன்னிதியால்வைத்தபாப்
பிர்மவிலாசமெனுமச் செந்திரந்தனக்குநித்ய மங்களம்

கட்டியக்காரன்வருகிற-பொது-விருத்தம்.

மாதமும்மாரிபெய்ய வாழ்ந்திடுமந்தமானில்
வேதமேதவறிடாத வேந்தகமதுசாய்தன்றன்
பாதமேபணிந்துபோற்றிப் பணிவிடையேவல்செய்யும்
நீதவான்கட்டியக்கார னிமிஷத்திற்றோன்றினானே
வசனம்.
அஹோதெப்படியென்றால் அந்தமாநகரை அரசாட்சிசெலுத்தும் இராசமாணிய ராஜஸ்ரீயான அகமதுசா அரண்மனைவாசல்காக்கும் கட்டியக்காரன்வருகிறவிதங்காண்க.

கட்டியக்காரன்வருகிற-தரு-இராகம்-மோகனம்-அடதாளம்.
பல்லவி.
கட்டியக்காரனும்வந்தானே-ஒய்யாரமான
கட்டியக்காரனும்வந்தானே
அநுபல்லவி.
கட்டியக்காரனும் வந்தான் காலிற்சட்டைபணிந்து
மட்டிலாப்பணிகள்பூண்டு மன்னகமதுசாவாசற் கட்டி.
சரணங்கள்.
சரிகைகலைப்பாகைக்கட்டி-தங்கக்கடகங்கள்மாட்டி
இருகையும்வீசிக்கொண்டு-எட்டிநடைநடந்து கட்டி.
கண்டவர்நடுங்கயி ரு-கண்களையுருட்டிக்கொண்டு
இன்றுமுண்டாகவேதான்-இடையென்றகட்டிக்கொண்டு கட்டி.
பற்றலர்நடுங்கிடவே-பல்லைக்கடித்துக்கொண்டு
சுற்றியேமீசைமுறுக்கி-துலக்குந்தடியுங்கொண்டு கட்டி.
கட்டியக்காரன்-பறையறைபவனுக்குச்சொல்-விருத்தம்.
முந்தியகட்டியக்காரன் முரசறைபவனைக்கூவி
அந்தமாய்க்கொலுவுக்கிப்போ அரசனார்வாராரென்று
விந்தைசேர்ந்தமானில் விளங்கிடுஞ்சனங்கட்கெல்லாம்
தந்திமேன்முரசமேற்றித் தாக்கியேவிருது கூர்வாய்

வசனம்.

அகோகேளும்பின்னாய் முரசறைபவனே—இந்த அந்தமாநகரை யரசாட்சிசெலுத்தும் இராஜாதிராசனான நமது அகமதுசாவானவர் இப்போது கொலுவுக்குவருகிறபடியால் இந்நகரத்திலுள்ளவர்களுக்கெல்லாம் வீதிகள்தோறும் அலங்கிர்தஞ்செய்யும்படியாய் ஆக்கியாபித்து வாரும்பின்னாய் (மு-சொ-வ-ப்) நல்லதுமகாபாக்கியங்கட்டியகாரனே.

முரசடிப்பவன்சொல்—தரு—இ—ம்—நாதநாமக்கிரிகை—அடதாளம்.

அணியிதில்வருமன்னரே எங்கள்
அகமதுசாகொலுவில்வருகிறார்—நீங்கள்
தானதருமமெத்தச்செய்யுங்கள் சந்தத்
தாலைக்கால்கள்நாட்டிவையுங்கள்
பச்சைப்பரியில்வருமன்னரே நமது
பார்த்திபர்கொலுவுக்குவருகிறார் இப்போ
பச்சைக்கிரீடமுடிவணியுங்கள் நல்ல
மேன்மையானபணிபுனையுங்கள்
மானவகமதுசாவருகிறார்-கொங்கர்
வங்கர்கலிங்கர்சொச்சிதெலுங்கரே—உயர்
ஞானஜோதிகட்டிபணியுங்கள் இந்த
நகரெங்குஞ்சிங்காரஞ்செய்யுங்கள்
குங்குமச்சந்தனக்கோதைபோல் நம்
கொலுவுக்ககமதுசாவருகிறார்—நீங்கள்
சந்தத்தால்நிறைகுடம்வையுங்கள்—தெருவில்
சாரக்கரும்பைநாட்டிவையுங்கள்
பலாவிருத்திறந்தபெண்களே—எங்கள்
பார்த்திபர்கொலுவுக்குவருகிறார்—நீங்கள்
தலைவணியல்லைமிற்சேருங்கள்-இந்தத்
தானியாசர்வமார்பாருங்கள்

அகமதுசா—கொலுவுக்குவருகிற—பொதுவிருத்தம்.

தானதர்மவேதமுறைபார்த்தப்பா
தழைத்தோங்கவந்தயாநகரையாளும்
மானமுள்ளவகமதுசாமன்னவேம்
மந்திரியார்காவலர்கள்மருங்கிற்சூழ
சேனைபொலிகொடியாடமேளதாளம்
திமிதிமென்றேமுழங்கிவரக்கவரிவீச
கானமுள்ளகவிவாணர்கவிகள்கூற
கனகரத்னக்கொலுவதனிற்றன்வாராரே



கட்டியன்சொல்—பொதுவசனம்.

அகோதெப்படியென்றால்-இராஜமானியராஜபூசித மகாராசராசஸ்ரீ கமது அகமதுசா கொலுவுக்குவருகிறபடியால் இச்சபையிலுள்ள யாவர்களும் ஒன்றும்பேசாமல் ரெம்ப அதபுடனே எச்சரிக்கையாயிருக்கவேண்டியது.

அகமதுசா கொலுவுக்குவருகிற-தரு.

இ-ம்-தோடி-மிசுரதாளம்.

சந்திரவட்டக்குடைநிலக்க-தவளசாமரையிலங்க
சிந்தையில்நெறிதவறாச்-செல்வராசன்கொலுவில்வந்தார்
தாளமேளம்விருதுபொங்க-சந்திரவுடைவாள்கைத்தங்க
அலர்புகழ்சிம்மாசனத்தில்—அகமதுசாகொலுவில்வந்தார்
மந்திரிமார்புடைசூழ-மன்னமண்டலிகர்தாழ
அந்தமுள்ளராசரோடு-அகமதுசாகொலுவில்வந்தார்
தாதியர்கடனமாட-நக்கபட்டுவான்கள்பாட
மாதயஞ்சேரகமதுசா-மன்னவர்கொலுவில்வந்தார்

அகமதுசா-மந்திரிக்குச்சொல்-விருத்தம்.

என்னுடன்கொலுவிருக்கும் இயல்புமந்திரியேகேளாய்
மன்னர்மன்னவர்களெல்லா மகிழ்திறைகட்டுறாரா
இந்நகர்தன்னிலுள்ளோர் எழிலுடனிருக்கின்றாரா
நன்னயமுடனெனக்கு நவிலுவாயறியத்தானே

வசனம்.

அகோகேளுமந்திரி நமதுநகரத்தைச்சேர்ந்த தேசங்களிலிருக்கு மன்னமன்னர்கள் திறைகட்டிவருகிறார்களா இந்நகரத்திலுள்ளயாவர்களும் வேதமுறைதவறாமல் நீதத்துடனிருக்கிறார்களா அதைநானறிய விபரமாய்ச்சொல்லுமந்திரி—மந்திரிசொல்வசனம்—அப்படியே சொல்லுகிறேன்தவுலத்தாகியசிரோமணியே

மந்திரி—இராசனுக்குச்சொல்—விருத்தம்.

சங்கீயாதரிகுமியல்புளவரசேகேளீர்
சங்கையாய்மன்னரெல்லாந் தான்திறைகட்டிவாரார்
மங்களசமேதமயிம் மாநகர்தனிலுள்ளோர்கள்
அங்கமாய்நெறியார்க்கத்தில் சோர்விலாதிருக்கின்றாரே

வசனம்.

அகோகேளுங்கள் இராசராசர்களுக்கெல்லாம் சிம்மமேருவே நமது தேசத்திலுள்ள இராசாதிராசர்களெல்லாம் யாதேனுங்குறையில்லாமல் திறைகட்டிவருகிறார்கள் இந்நகரிலுள்ளபேர்களனைவரும் தங்களுடைய சாகரநெறிக்குள்ளிருந்து வேதமுறைமைப்படி குறைவில்லாமல் நடந்துவருகிறார்கள் அரசர்கள்துதிக்குமன்னனாகிய சிரோன்மணியே.

இராசன்—மந்திரிக்குச்சொல்—மட்டுவிருத்தம்.

நல்லதப்படியாகட்டும் நாட்டியப்பெண்கள் தம்மை
வல்லநசபைக்கிப்போது வரவழைத்திடச்செய்வாயே

வசனம்.

நல்லதுமந்திரி நம்மிடசபையில் நடனஞ்செய்யும் ஸ்திரிகளை அதிசீக்கிரத்தில் வரவழைப்பாய்மந்திரி-(ம-சொல்-வ-ம்) மகாபாக்கியம் இதோ வரவழைக்கிறேன் ராசசிரோன்மணியே.

மந்திரி—கட்டியனுக்குச்சொல்-மட்டுவிருத்தம்.

கட்டியக்காரகேளாய் கடுகிச்சென்றுநாட்டியப்
பட்டபஸ்திரீகள்தம்மைப் பரிவுடனழைத்துவாடா

வசனம்.

அகோகேளுங்கட்டியக்கார நம்மிடகொலுவில்நடனஞ்செய்யும் நாட்டியப்பெண்களை அழைத்தாரும்பிள்ளாய்-(கட்-சொ-வ-ம்) மகாபாக்கியம் இதோ அழைத்துவருகிறோம்மந்திரியே

கட்டியன்—நாட்டியப்பெண்களுக்குச்சொல்-விருத்தம்.

திங்கள்சேர்முகத்தினுரே தெரிவையர்க்கரசியேகேள்
உங்களையரசனிப்போ துவப்புடனழைத்ததாலே
மங்கையரெல்லாமொன்றாய் மகிழ்வுடன்பணிகள்பூண்டு
துங்கமாக்கொலுமுன்பாகத் துரிதமாயவருகுவீரே

வசனம்.

அகோகேளுங்கள் பரதநாட்டியஞ்செய்யாநின்றநடனமாதர்களே இராசாதிராசனென நமது அகமதுசா உங்கள்பேரில்மனங்களிகூர்ந்து அழைத்துவரும்படியாய்ச்சொன்னார் ஆகையால்நீங்களெல்லாரும் ஆடையாபரணமலங்கரித்து உடனே அதிசீக்கிரமத்தில் வாரும்பெண்களா (நடன-சொ-வ-ம்) அப்படியே வருகிறோமப்பாகட்டியக்கார

நடனப்பெண்கள்வருகிற-பொது-விருத்தம்.

கங்கையினிற்கலைமுழுகியபிறைச்சசி
காந்திபெறப்பின்னியதிற்குச்சுக்குஞ்சி
செங்கைவளைகிலுகிலெனவாடைபூணித்
திவ்வியமார்முகமிலங்கையுந்தீட்டி
தங்கமணியாபரணமேனிபூண்டு
தனதனைலுத்தரிகைபுடைதாங்கள்கட்டி
மங்கையர்களிருபுறமுஞ்சோடுசோடாய்
மன்னவர்முன்நடனஞ்செய்யவருகின்றாரே



வசனம்.

அதோசெப்படியென்றால்—இந்தப்பிரகாரம் கட்டியன் நடனமாதருக்குச்சொல்லஅவர்கள் ஆடையாபரணமுதலாகியஅணிந்து அநேகமாக கொலுவுக்குவருகிறார்கள்.

நடனப்பெண்கள் கொலுவுக்குவருகிற—தரு.

இ-ம்—காம்போதி—அடதாளம்.

பல்லவி.

நாடகசாலைப்பெண்வந்தாரே—நடனஞ்செய்ய
நாடகசாலைப்பெண்வந்தாரே

அநுபல்லவி.

நாடகசாலைப்பெண்வந்தார்—பாடகச்சிலம்புகொஞ்ச
சோடுசோடாகக்கூடி—பாடிநடனஞ்செய்ய நாட்டி.

சரணங்கள்.

தெத்திமித்திமிததிமென்ன—வைத்தெப்பதக்கஞ்சுமின்ன
சுருதிபேசிருவிழி—நத்திபோநடனஞ்செய்ய நாட்டி.
முகஞ்சசந்திரனுக்கு—மோகனமாலைமின்ன
நந்தமுகத்துக்கு—நடனவல்லமையாக நாட்டி.
அந்தமாககலையாரும்—அகமதுசாவின்முன்னே
விந்தையாயுடன்குலுக்கி—பெண்ணவேதனைநடந்து நாட்டி

நடனமாதர்கள் நடனஞ்செய்யும்—ஜோடி—தரு.

இ-ம்—தன்னியாசி—திரிபுடைதாளம்.

பல்லவி.

பெருகுதேமருக்கிளையா—ஆசைவிரகவெள்ளம்
பெருகுதேமருக்கிளையா

அநுபல்லவி.

தகவேறுமெங்களரசேயுனது
தயவுமகிழ்ந்துதருகனை பெருகுதே

சரணம்.

கச்சினில்தனங்கள்மீறுதே—என்துரையேயிப்போ
காமன்கணைக்கவலைமீறுதே
இச்சையாயமிர்தமூறுதே—என்துரையேகோடி
மிடையினிற்கலைகள்சோருதே
எனசெய்வேனுருவிதமாய்வருந்தி
இருந்திருவரும்பொருந்தவேமனம்
கொஞ்சியேயிதழமிர்தமூறுதே
மெய்க்கைதுமயிர்சிலிர்க்குதேவெள்ளம் பெருகுதே

இராசன்—மந்திரிக்குச்சொல்-விருத்தம்.

என்னிடமனதுக்கேற்ற பிரபுமந்திரியேகேளாய்
நன்மைபருணத்தாரான நடனமாதர்களுக்கிப்போ
சொர்ணமுட்புனிதமாடை யலங்கமேலமேன்மேவிக்க
மன்னிவேடிக்கைசெய்ய மல்லனையழைப்பிப்பாயே

வசனம்.

அகோவாரும் அமீர்மந்திரி இப்போது நமக்குமுன்பாக நடனஞ்செய்தமாதர்கள் மனமகிழும்படியாய் வேண்டியஅபரணமுதலிய வெகுமதிகளைக்கொடுத்தனுப்பிவிட்டு வேடிக்கைமுதலிய மல்லுத்தஞ்செயகின்ற மல்லர்களை அதிசீக்கிரமத்தி லழைப்பிப்பாய்மந்திரி. (ம-வ-ம்) அப்படியே உங்களுத்திரவின்பிரகாரம் நடனமாதர்களுக்கு இனுங்கொடுத்தனுப்பிவிட்டுமல்லர்களைவரவழைக்கிறேன் அரசசிகாமணியாகியதயாலத்தே

மட்டு—விருத்தம்.

பரிசிலைப்பெற்று—பாவையர்சென்றபின்
வரிசையாய்மல்லர்கள்—வருமாறுதச்சொல்வாம்

வசனம்.

அகோதெப்படியென்றால் அமீர்மந்திரியானவர் அரசன் உத்திரவின்பிரகாரம் நடனமாதர்களுக்கு வெகுமதிகள்கொடுக்க அவர்கள் பெற்றுக்கொண்டுபோனதின்பின மல்லர்கள் கொலுவில் வேடிக்கைசெய்ய வருகிற விதங்காண்க,

மல்லர்கள்வருகிற-பொதுவிருத்தம்.

சுத்திசேடமுஞ்சூரி கனத்ததோர்பாலாயிட்டி
சுக்கியோபிடையிற்சேர்த்து தலங்குசல்லடமும்போட்டு
வெற்றிசேராசன்முன்னே விதவிதக்கொடிவித்தை
சுற்றியேலாகையோடு தோன்றினாமல்லர்தாமே

வசனம்.

அகோதெப்படியென்றால் அகமதுசாகொலுமுன்பாக பதினெட்டாயுதங்களும் இடையிற்கட்டிக்கொண்டு மல்லகளேட்டிகள்வருகிறவிதங்காண்க.

மல்லர்கள்வருகிற—தரு—ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

மல்லர்கள்வந்தாரே—கொலுமுன்னே
மல்லர்கள்வந்தாரே

அநுபல்லவி.

மல்லர்கள்வந்தாரே உல்லாசமாகவே
சல்லாபவித்தைகள் சல்லாபமாய்த்திடும் மல்லர்



7

சரணங்கள்.

அந்தமாகராஜும் அகமதுசாய்ப்புக்கு
வித்தையாய்ச்சலஞ்செய்து வேடிக்கைகாட்டவே மல்லர்

இந்திரஜாலங்கள் மந்திரவித்தைகள்
சுந்தரராசன்முன்—வித்தையாய்க்காட்டிட மல்லர்

ஒருவர்க்கொருவர்மல்லு-உபர்மாட்டத்திக்கொண்டு
கருதுமரசன்முன்னே—சுத்திவித்தைகள்காட்ட மல்லர்

பொதுவிருத்தம்.

வந்ததோர்மல்லர்தாமும் மல்லுத்தம் பலவுஞ்செய்ய
அந்தகமதுசாகாது மகமகிழ்ந்தவர்களுக்கு
சுந்தரப்பணிகளாடை சொருகடனீந்தப்பின்னால்
மந்திரிதம்மைப்பார்த்து வகைபலசொல்லலுற்றார்

வசனம்.

அகோதெப்படியென்றால் இவ்விதமாக வேடிக்கள்முதலிய பலவித்தைகள்செய்த மல்லர்களுக்கு வெகுமதிகொடுத்தபின்பு அகம்மதுசாயவர்கள் தனது மந்திரியாகிய அமீரைப்பார்த்துச் சொல்லுகிறவிதங்காண்க

அகம்மதுசா-மந்திரிக்குச்சொல்—விருத்தம்.

என்னுடன்கொலுவிருக்கு மெழிலமீர்மந்திரிகேளாய்
இந்நாள்முழுதியான எனக்குப்பின்னொருகுழந்தை
தன்மையாயில்லாத்தாலே தவிக்குமெனமனதுக்கேற்ற
நன்மையவசனந்தன்னை நவிலுவாய்ப்பிரதானியே

இதுவும்—அகம்மதுசாசொல்—தரு—இ-ம்—சாவேரி—ஆடதாளம்.

மந்திரியமீரேகேளும் வாழ்வதுநீர்மேற்குமிழி
இந்தவுலகத்திருந்து ஏற்கவேயரசுசெய்தேன்
வணங்காதமுடியரசைவந்தடிவணங்கச்செய்தோம்
இணங்காதமருவலர்முன் எழுந்துபட்டபொருதிவென்றோம்
வென்றோம்வெகுதேசமெல்லாம் விருதுசெய்துகம்பநாட்டி
கொன்றுதிறைகொண்டுவந்தோம்கொற்றவனென்பேரும்பெற்றோம்
இப்படியேநாமிருக்க எமக்குப்பின்னரசையாள
எப்படிபோபுத்திரனிலையே என்னசெய்வேன்மந்திரியே
பிள்ளையில்லாப்பாவியென்று பூலோகத்தரசரெல்லாம்
எள்ளவில்லாவுலகதனில் என்னபாவஞ்செய்தோமோதான்

பொது—விருத்தம்.

இப்படியரசன்றனு யேங்கியேபுலம்பும்போது
மெய்ம் புகழ்மந்திரிகேட்டு மிகுகியாய்மனமகிழ்ச்சொல்வான்
செய்புரையகறுனக்கு நோயமாய்ப்புத்ரனிவான்
தாபமில்லையென்றன்வாக்கியந் தானதர்மஞ்செய்யென்றார்.

வசனம்.

அதோ செப்படியென்றால் இவ்விதமாக அப்பமதுசா புத்திரனில்லா
தால் யேங்கிப்புலம்பி அமைச்சரோடுசொல்ல மந்திரிஅமிரெனபவர் அவ
னைப்பார்த்து தருமமுதலிய சற்காரியஞ்செய்தால் அல்லாகுத்தஆலா பு
த்திரனைக்கொடுப்பானென்றுசொல்ல அதையரசன்கேட்டு இனிநடக்கிறவி
தத்தைக்காண்க.

அப்பமதுசாசொல்—தரு.

இ—ட—அசாவரி—திரிபுடைதாளம்.

மந்திரியமீருசொல் தந்திரமானதை
மன்னனப்பமதுசாபெறும்
சுந்தரன்கேட்டுத்தன் னுள்ளமகிழ்ந்து
துலங்கியவான்றாலம் புகுந்தனரே
மனைபுகுந்தமது வாசனுஞ்சொந்த
மனைவியையழைத்தருகிருத்தியே
தனதிடவமைச்சன்சொல் விதமேதர்ம
தானஞ்செய்யவேணு மென்றிட
அரசன்சொல்லியபோது மனைவியுமந்த
நாருமப்படிச்செய்வோமென
பிரியமாய்ப்புருஷ னுமனைவியும்வெகு—
பிரபல்யமாய்த்தர்மஞ்செய்தனர்
அந்தமாகவீதி யடங்கலுமந்த
ஐம்பொன்னூற்பள்ளிகள்கட்டியே
எந்தச்சகிலமுள்ளவனைவர்க்கு
மேகமாகத்தர்மஞ்செய்தனர்
பூஞ்சோலைநீர்ப்பந்தல் வைத்தனர்மிகு
பிரியமாய்த்தடாகஞ்செய்தபின்
மாஞ்சோலைக்கிளிமொழி யாளுமேராஜ
மன்னனுந்தொழுதுகொண்டிருந்தனர்
பத்திபக்தியாகக் கொடுப்பதும்நல்ல
பரிவுடன்தருமங்கள் செய்வதும்
சிற்றைகலக்குமகம்மதுசாய்பொரு
செல்வனுக்காத்தர்மஞ்செய்தவர்



8

பொது—விருத்தம்.

தானதர்மங்கள்செய்து தடாகங்கள்வெட்டிப்பள்ளி
ஆனதுங்கட்டிவேதம் அன்புடனோதச்செய்ய
வானவெருபோற்றும் வல்லவன்கிருபையோர்தி
யாலிமாரூமரசன் மனைவியுங்கெர்ப்பமானாள்

இதுவுமது.

கெர்ப்பமும்வளர்ந்தஆதி கிருபையாலுதரந்தங்கி
செப்பெனுந்தனங்கள்விம்மித்தேகமும்பசந்துசுகங்கள்
மைப்பொழுமுடல்பெருத்து வாய்வெளுத்திடைபெருத்து
கர்ப்பெணுமயிலாட்டின்பால் கர்ப்பமும்வளர்ந்தன்றே

இதுவுமது.

திருத்தமாய்க்கர்ப்பநோயைச் சேயிழைமாதர்க்கோத
உரித்துடன்தாயிமார்களுளமகிழ்வருந்தந்திர
கருத்துடன்சேறச்சொல்லக்காரிகைகர்ப்பமப்போ
வருத்தமாய்வலிப்பதாலே மங்கையும்புலம்புவாளே

அரசி—கர்ப்பவேதனைப்படுகிற—தரு.

இ—ம—பிலாஹரி—அடதாளம்.

அரிமார்வயிற்வலிக்குதடி யன்னமேயென்னசெய்வேன்—தங்கள்
அங்கம்நோகுது என்குஞ்சோருது மங்கையேயென்னசெய்வேன்
காரன்மோளந்தன்கண் ணிருட்டு திரண்டுநாவுலர்ந்துதே—இது
என்னபாதகமிந்தநோதகம் வந்ததாதகந்தோழி
மைநகள்சென்றிடியாந்தபோருது கருத்தாய்மொழிதாயாருகே—இப்போ
தடுக்குதடிநாண நடுக்குதவெர்வைவிடுகுது ஏன்செய்வேன்கோழி
குருதிசிந்தபின்மேல்வயிற்றைச் சுருட்டிபொருகும்வலிக்குதே—இதேந
சோபமாகுதுதாபமீறுது நாவறட்டுதென்செய்வேன்
குந்திருக்கவுங்கூடவில்லையே கோதையேயெனக்கோதடி—நெஞ்சில்
குத்துதேதலை சுற்றுதேவலி பற்றுதென்செய்வேன்தாதி
வயிற்றில்வந்திடும்பிள்ளையீனது மலக்கமுந்தோதான்—கண்ணை
வாட்டுதேகுரங்காட்டுதேஸ்திரங் காட்டுதேயென்னசெய்வேன்

பொது—விருத்தம்.

கருப்பமுமுற்றிநின்மேல் காலெடுத்துவந்தோனி
விருப்பமாயப்புளிப்புமாக வேவியதுந்தோக
தரிப்பிலாவிசனந்தாமே தாதியமோடிச்சொல்ல
மருப்புவார்குழலிதாக முந்நவமாதவந்தாள்

வசனம்,

அதோதேப்படியென்றால் இந்தப்பிரகாரம் அகம்மதுசாய்புமனைவியானவள் அல்லவுதவிபினாலே கர்ப்பமுண்டாகி பத்துமாதமுநிறைந்து பிரசவவருத்தப்படுகிறவேளையில் தாதிகள்மூப்பிகளோடி மருத்துவச்சிக்குச்சொல்ல அவள்வருகிறவிதங்காண்க.

மருத்துவச்சிழவி வருகிற-நாடி-தரு,

இ-ம்-காம்போதி-ஆதிதாளம்,

பல்லவி,

கிழவிவந்தாள்-மருத்துவக்-கிழவிவந்தாள்,

அநுபல்லவி.

கிழவிவந்தாள்-பழையவளென்று
கிறுக்குத்தடிகை-வலுக்கவேயூன்றிக் — கிழவி

சரணம்,

நரைத்திருந்தலையும்-மெள்ளமெள்ள
நடுக்கிடுங்காலையும்
பருத்திமுலையும்-அழுக்குப்
படிந்ததோர்கலையும
குறைந்தமேனியும் விரைந்தபேச்சுமாய்
குளறிக்குளறி யீர்மருத்துவக் — கிழவி

பொது-விருத்தம்,

மந்தாபுயத்தோனை மன்னகமதுசாய்புக்குச்
சொந்தமாமனைவியர்க்குச் சூலானந்தயர்வதாலே
சுந்தாத்தாதிமார்கள் தொண்டையடிவருடிநிற்க
வந்திடுமருத்வயாது மங்கைமுன்னிருந்துகேட்பாள்

மருத்துவக்கிழவி-ஆசிக்குச்சொல்-விருத்தம்,

ஆரடியாசியேகேள் ஆத்திரப்படநீவேண்டாம்
பாரினிற்பாலராலே படுமவஸ்தைகளிப்போது
சேரினிலெந்தனோடு நினக்குள்ளகுறிகள்தன்னை
கூறடியொளிக்காதிப்போ குணமதாமெந்தனோடே

வசனம்,

அடியம்மா ஆசியேகேள் இப்போதுபிள்ளைநோயால் வருத்தப்படுகிறாய் பதறாதகாரியமென்கிறது இப்போது உனக்குள்ள குறிகுணங்களை ஒளிக்காமல் என்னுடனேசொல்லுவாயடியாசியே.



ஆசிமருத்துவச்சிக்குச்சொல்-தரு.

இ-ம்-ஆரபி-ரூபகதாளம்.

பல்லவி.

நோகுதேயெங்கும்-ஏகவியா
யாகுதேயெங்கும்

அநுபல்லவி.

தோகையேவயிற்றில்-தோதகந்தானேநோ — நோ

சரணங்கள்.

வலிக்குதே-முதுகுவலிக்குதே-துவாலிநோவிக்குதேபாராய் — நோ
அடமடி-அரவப்படமடி-பானிநீக்குடமடியாராய் — நோ
என்செய்வேன்சொல்லதுஞ்சுதே மருத்துவச்சியேயிப்போ — நோ

ஆசிவசனம்,

அடியம்மாபாட்டி மருத்துவமாதே நானென்னசெய்வேனடியம்மா.

மருத்துவமாதுசொல்-வசனம்.

அடியம்மாஆசி-பதறாதடியம்மாபதறுதே-இன்னம்நாழிகையில் மைந்தன்பிறப்பான் வருத்தப்படாமலிருடியம்மாஆசி.

ஆசிபிரசவவேதனைப்படுகிற-தரு.

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

அம்மாநோகுதேயம்மாநோகுதேமருத்துவஅம்மாநோகுதே
ஆயிரந்தேள்கொட்டினதுபோல்-மன்னாங்கமெல்லாநோகுதம்மா

ஆசி-வசனம்.

அடியம்மாநானென்னசெய்வேனடிமருத்துவமாதே

மருத்துவமாதுசொல்-வசனம்.

அடியம்மா-பத்தெட்டுப்பெற்றபெண்களெல்லாம் பதறிக்கொண்டிருக்கையில் நீதலைச்சன்பிள்ளைக்காரிதானே-உனக்கு வலிக்காமலும் உளைக்காமலுமிருக்குமா-கொஞ்சம்மனதைப்பொறுத்திருடியம்மா ஆசி.

மேற்படி-தரு.

கெத்தியிற்புருவமெல்லாம் முத்துமுத்தாய்வேர்க்குதம்மா
பத்திபெரியுதம்மா-பாங்குள்ளமருத்துவமாதே

வசனம்.

அடியம்மாசம்பவருத்தமாயிருக்கிறதே — ஒருவேளை உயிர்போய்விடுமோ தெரியவில்லையேயம்மா மருத்துவமாதே

மருத்துவச்சிசொல்வசனம்.

அடியம்மா அரசி — நீயொன்றுக்கும் யோசிக்காதே — காசியிருந்துபோன பிள்ளைக்கோ யானைவுகொடுக்கின்றதே — அப்படியிருக்க உன்வயிற்றிலிருக்குங் குழந்தை வெளியேவருகிறகாலமானபடியால் — உனக்காமலும் வலிக்காமலும் துனக்காமலுமிருக்குமா — அப்படியொன்றுக்கும் பயப்படாதே — உன்னுயிர்போகமாட்டாது — சுமதேசுந்திக்கொண்டிருமம்மா அரசி.

மேற்படி — தரு.

குந்தியிருக்கையிலே — குதிகால்கள் நோகுதம்மா
எந்தாயே மருத்துவச்சி — இதற்கென்னசெய்வேனம்மா

வசனம்.

அடி பாவி நீ என்னத்தைச்சொன்னாலும் எனக்குமனஞ்சகிக்கவில்லையேயம்மா அடிமருத்துவமாதே

மருத்துவச்சிமறுசொல் — வசனம்.

அடியம்மா பனைதப்பொறுத்திருக்கத்தான் வேணும் அதனாலென்றால் — பிள்ளைபிறக்கிறசமையமாயிருக்கிறது — அதுவெளியேவந்தவுடனே உன்னுடையவருத்தமெல்லாம் நீங்கிப்போகும் — அது — நீ வருத்தப்பட்டதையும்பார்த்தால் பிள்ளை சற்றுநேரத்திற்போய்ச் சொருகிக்கொள்ளப்போகுது — சற்றே கயிற்றைப்பிடித்துப் பல்லைக்கடித்து இம்பிக்கொமையடியம்மா அரசி.

மேற்படி — தரு.

கயிற்றைப்பிடிக்கையிலே கைகள்ரெண்டுஞ்சோருதம்மா
வயிற்றைவலிக்குதம்மா வகைபொன்றுமறியேன்
அடியம்மம்மா — அம்மம்மா — அம்மம்மா — அம்மா

வேறு — தரு.

அம்மா வயிற்வலிக்குதிந்த அவதிக்கென்னசெய்வேன்
இம்மாதிலக்கணிலேயிம்மாயிற்குமருந்திலேயோ
அடி அம்மம்மா — அம்மம்மா — அம்மம்மா அம்மா
அம்மாவயிற்வலிக்குதிந்த

மேற்படி வேறு — தரு.

அம்மமாசேயென்செய்வேன் — ஆதிநாயனேயென்செய்வேன்
மருத்துவமாதேயென்செய்வேன் — அடிமச்சிமாசேயென்செய்வேன்
அம்மாவயிற்வலிக்குதிந்த — அவதிக்கென்னசெய்வேன்

16



பொதுவிருத்தம்.

வருத்தமாயசன்தேவி மனமதுபதறிநிற்க
திருத்தமுடன்தாதிமார்கள் கவலையாற்செய்துநிற்க
மருத்துவமாதாறும் வகைபலசொல்லிநிற்க
அருளாகமதுசாவுக்கு அருஞ்செல்வன்பிறந்ததன்றே

வசனம்.

அகோ தெப்படியென்றால் அந்தமாநகரையாளும் அகம்மதுசாமனைவியானவள் மிகவருத்தத்துடனே பிரசவவேதனைப்பட்டுத் தாதியார்களும்நிற்க மருத்துவமாதா மருத்துவம்பார்க்கக்கோடிசூரியப்பிரகாசம்போலே புத்திரன்பிறந்தவிதங்காண்க.

பிள்ளைபிறந்த — தரு — இராகம் — அடாணா — சாப்புதாளம்

பல்லவி.

மைந்தன்பிறந்தானே — மருமலர்சந்திரவுதயம்போலவே
மைந்தன்பிறந்தானே

அநுபல்லவி.

மைந்தன்பிறந்தானே சிந்தைகளிகூரவே
மன்னாகமதுசா — மனைவிவயிற்றினில் — மைந்தன்

சரணங்கள்.

லட்சணமுள்ளதானதால் — அதிகப்பொன்
ஊசியினில்வார்த்ததுபோல்
பச்சைமின்கிளி — முச்சுடர்தனக்கிப்
வச்சிரமார்பினில் — இச்சையுமங்கனி — மைந்தன்

பொன்னகர்மண்டலத்தில் — இருப்போரு
மின்னலொளிசூழ்ந்தாற்போல்
பன்னுமதியமூர்த்தன்னை நிகில்வந்துயர்
பின்னமில்லாமலே — மன்னனுளங்களிக்க — மைந்தன்

புத்திரன்பிறந்திலங்க — அகம்மதுசா
எங்கிச்சுஞ்சர்க்கரைவழங்க
வெத்தியப்பாறென்னும் — வித்தாரப்பேருமிட்டு
சித்ர அந்தயாமைச் சிறப்புடன்றுள்வதற்கு — மைந்தன்

பொதுவிருத்தம்.

பிறந்திடேபிள்ளைதன்னைப் பிரியமாயகம்மதுசா
சிறந்திடக்கண்டு இன்பத் திரைபெருங்கடலின்மூழ்கி
அருந்தவத்தோர்களுக்கு மந்தமாகருள்ளோர்க்கும்
குறைந்திடத்தனைகப்புதம் கொடுத்தனனேகந்தானே

## இதுவுமது.

அனேகமாய்த் தானதர்மம் அசமஞ்சராசன்புரிசெய்து
களமுடன்மகன்றனக்குக்கருதாப்பேரப்படிக்கு
மகையமர்கிழக்கப்பாசி யென்றுபேர்காயமிட்டு
தனயனைக்கொடுக்கவாங்கித் தாதிதாலாட்டினாளே

## தாலாட்டுகிற-தரு-நீலாம்புரிராகம்.

ஆரிவரோஆரிவரோ ஆணைசேஆரிவரோ

பாரிலுள்ளமன்னரெல்லாம் பட்சமுடன்தாம்துதிக்க
சேரிசாழமார்தாலாட்டும் திருமரோகன்வளராய் — ஆரி

பிள்ளையில்லாவசம்மஞ்சா பெருந்தவத்தால்வந்துதித்த
வள்ளலெனுமப்பாசு மன்னவோகன்வளராய் — ஆரி

ஆதிபருளால் அசம்மஞ்சாசெய்தவத்தால்
நீதமுடன்வந்துதித்த திருமனோகன்வளராய் — ஆரி

சினகராளும் நிரன்பருவீரசன்
மாணமிகர்பானை மணமுடிக்கவந்தவரோ — ஆரி

## பொதுவிருத்தம்.

தையலர்பாலன்றன்னைத் தாலாட்டிவளர்க்கும்போது
வையகத்துள்ளோரெல்லாம் வந்துமேயெடுத்தணைத்து
பையவேமுத்தமிட்டுப் பட்சமாயிருக்குநாளில்
ஐயமில்லாதப்பாசுக் கைந்துமேவயதாச்சங்கே

## இதுவுமது.

கர்த்தனெனுரும்வேதங் கற்பிக்கவேண்டுமென்று
வெத்திசேர்வெலைவிடத்தில் விரைவினிலோதிவைக்க
முத்தினுமோதிருசு மூப்பதுமுகித்தபின்பு
பத்துடனுயிலுமும் பாவனைப்பாருநித்தாலே

## இதுவுமது.

வேதமுமோதிக்கல்வி விசைபொருள்பதிறுவிர்மும்
போதரவாகத்தேர்ந்த பூபனப்பாஜென்போர்க்கு
மாதமும்வளரச்செல்வம் வாறுமேவளருநாளில்
சேர்தமிழ்சொல்லும்வாத்திமிஷத்தினிலவந்தாரே

## வசனம்.

அகோதெப்படியென்றால் இவ்விதமாக அசம்மஞ்சாவுக்குப் பிறந்த குழந்தைக்கு அப்பாசுளன்கிறநாமகரணந்தரித்துத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டிச் சீராட்டிப் பிறைவளர்வதுபோல்வளர்ந்து ஐந்துவய



தாகிலெப்ப்பகன்றுநித்தெரிக்க வேதமுதலிய பதினறுநிற்கும் கலிகள் உக்கும் அறிக்வெதனிக்கமைய அதிகப்பட்டிருக்கிற காலையில் முத்தமிழோதிவைக்கும்படியா யசாரக்கியாபிகத வல்லபமுள்ள வாத்தியாருமிறவிதங்காலக.

## வாத்தியார்வருகிற-தரு-இ-ம-தோடி-அடதாளம்

### பல்லவி.

வாத்தியார்வந்தார்பள்ளிக்கூட — வாத்தியார்வந்தார்

### அநுபல்லவி.

சாத்திரப்புத்தகம்சேர்த்தியாகவெகுச்சா — (வாத்தி

### சரணங்கள்.

பணிகள்துலங்க-மார்பில்ரத்னப்-பதக்கமிலங்க
கணிகையர்மனங்களிகொள்ளவேசங்கீத
கலையையுணர்ந்தசனவானெனனுஞ்சான்றிர — (வாத்தி

கையில்நன்னூலும் — சிறப்புடன்
கழறுந்தொன்னூலும்
மெய்யினில்வெண்ணீறும்விளங்கவேலசதன்ய
மேன்மையாம்வஸ்துவைநியானிக்குமன்னிய — (வாத்தி

பிரம்புக்கைக்கொண்டு — அரியதோர்
பிரணவத்தைக்கண்டு
தாரணியிலுண்டானதனயர்கூட்டமீடி
சட்டமாயசம்மஞ்சாய்ப்புமகனைத்தேடி — (வாத்தி

## அசம்மஞ்சாஉபாத்திக்குச்சொல்-விருத்தம்.

வந்திடும்வாத்தியாரைவடிவசமஞ்சாபார்த்து
எந்தன்றன்பிள்ளைக்கிப்போ இலக்கியவிலக்கணத்தைச்
சிந்தையிலுணரச்செய்யென்றேசொலவப்பாசுக்கு
அர்த்தமாய்நூலினைத்துமறிவிக்கச்சென்றார்தாமே

## வசனம்.

அகோதெப்படியென்றால் வாத்தியாரானவர் அசம்மஞ்சாவைக்கண்டுகொள்ள அவர்வேண்டிவெகுமதிகளைக்கொடுத்துத் தன்பிள்ளைக்குத் தமிழ் ஓதிவைக்கும்படிச்சொல்ல அதுபோல் அப்பாஜி என்னும் அரசர

த்தும் சகலகலைக்கியானமும் ஓதிவைத்து மேன்மேலும் பரிசு பெற்றுத் தனதிடம்போய்ச்சேர்ந்தபின்பு நடக்கிறவிதங்காண்க.

பொதுவிருத்தம்.

வேதமுத்தமிழுமோதிவிவாங்களறிந்தபின்பு
சாதனையானையேற்றக்கணிப்புரவியின்றனேற்றம்
கீர்த்தியாமாசதந்திரம்திருபருக்குளறங்கற்று
விதமாயிருக்கும்போதவினைந்திடும்வாறுசொல்வாம்

வசனம்.

அகோதெப்படியென்றால் வேதமுதலியதுனையேற்றம் குதிரையேற்றம் வில்வித்தைமுதலியராசதந்திரமும்கற்று வல்லவனென்றுபேர்பெற்றிருக்கிறகாலையில் நடக்கிறவிதம் காண்க

பொதுவிருத்தம்.

இப்படியிருக்கும்போது இயல்புள்ளவகம்மதுசா
செப்பருமன்னர்போறுசெல்வப்பாசுகீர்த்தி
யெப்புவிதனிலுமேலாயிருப்பதினாலெனக்கு
ஒப்பிடவெவர்களுண்டோவுரைத்திடுவென்றேயென்றார்

வசனம்.

அகோதெப்படியென்றால் அகம்மதுசாவானவர் தனதுமனைவியாளைப் பார்த்துச் சிலபெருமையானவார்த்தைகள்பேசினார். அதேதன்னவென்றால் தனதுபிள்ளை அப்பாசுயினுடைய வல்லமைத்திறங்களனைத்தையும் சொல்லி இனிநமக்கு இந்தபூலோகத்தில் உள்ள எவர்களும் எதிரிகளோவென்று சொல்லிக்கொண்டிருக்க மேல்நடக்கிறவிதம்காண்க.

இராயமது-விருத்தம்.

பெருமைகள்பேசப்பாசுபெற்றவப்பாசுப்போ
ஒருமையாய்த்தந்தைதாயோடொருமொழிபுகன்றான்
அருமையாய்வேட்டையாடியதிசிக்கிரம்வருவேனென
விருப்பிடியாத்தந்தைதாயும்போய்வாவென்றாரே

வசனம்.

இந்தப்பிரகாரம் தாயும்தகப்பனும் பெருமைபேசிக்கொண் டிருக்கையில் அப்பாசுஎன்னும்பிள்ளையானவன் தன்தாய்தகப்பனைப் பார்த்து நான்வேட்டையாடிவருகிறேனென்று கேட்க அவர்களும்வரும்விதி யறிந்திடாமல்சென்றுபாவியாகவும் பெருமையடைந்தவர் சிலமையடைய



சென்றுவாருமெனப்போலவும் அவர்கள்விடைகொடுத்தனுப்ப அப்பாசுவே ட்டைக்குப்புறப்படுகிறவிதம்காண்க,

பொதுவிருத்தம்.

ஐயம்பெறகம்மதுசாவிடத்தினில்விடைகள்பெற்று
சையம்பெறுபடைகள்நான்குநடத்திடவப்பாசோடு
செயம்பெறுமந்திரிசேர்ந்துஇங்கிட்போகசம்மதித்து
விப்புறங்காட்டில்வேட்டையாட்டிடச்சென்றாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் தகப்பனாரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அப்பாசுவானவன் நால்வகைச்சேனையோடும் மந்திரிபிரதானிகளோடும்பிரயாணப்பட்டு வேட்டையாடக் காட்டுக்குப்போகிற விதம் காண்க.

அப்பாசுவேட்டையாடப்போகிற-தரு

இராகம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

ஆடுவம்வாரீர்-வனவேட்டை-ஆடுவம்வாரீர்

அநுபல்லவி.

நாடும்கடனைக்கரிகரிகள்பரிகள்வேட்டை (ஆடு)

சரணங்கள்.

சிங்கம்கரடிபுலிசெந்நாய்மரையிருகம்
செழிப்புறும்வலைவிரைந்துமிகக்கும்கோரூப்களும்
சங்கரிக்கவருவோமென்றுஅப்பாசுமன்னன்
சாற்றிபேவேகமாய்க்கூறுவன்போலவே (ஆடு)

கட்டுக்காடைபுடனேசிட்டுக்குருவிகளும்
காலுங்கோழிக்கிளைகாட்டுப்பன்றிகளும்
மட்டுக்கிக்கிதுஞ்சென்றுஇனைக்காமலேயின்று
எல்லாமொருமிக்கக்கொல்வோமிக்கணமதில் (ஆடு)

சிறுகண்வரிபெருங்கண்வரிசிக்கானவலைகளை
தீவிரமாய்க்கட்டும்இலக்கண்ணக்கயிற்றாலும்

பெருந் தவித்தாளம்புர்பாக்காணப்பொற்கனையும்
பதனமாகவெடுத்துப்பரிவாய்வாருமிப்போதே (௩௭)

பொதுவிருத்தம்.

செகதலங்கள்புகழ்வீர அப்பாசேந்திரன்
சேனையொடுவனவேட்டையாடிப்பின்பு
நகரமதற்கேகின்றசமயந்தனனில்
நாவறட்சி தாகமதுமிகவேயாக
விகிதமதாய்மைச்சரொடுமற்றோர்தாமும்
விரைந்தோடித்தண்ணீரைத்தேடும்போது
பகர்முனையொருதோப்பில்மரத்திலேறிப்
பார்மடமதில்மதுவிருக்கக்கண்ணிற்கண்டார்

இதுவுமது.

கண்டவுடன்மதுவதனைத்தண்ணீரென்று
கருத்ததனில்நினைத்ததனையெடுத்துவந்து
மண்டலத்தோர்தாம்புகழுமப்பாசேந்திர
மன்னனிடமதனிற்கொடுக்கவாங்கி
பண்பினிதிப்பயனதனையறியாத்தாலே
பட்சமுடன்சலமெனவேபருகினத்தால்
மன்னடைமட்டும்வெறியேறிக்கீழேவிழுந்து
மயங்கினான்மதுவதனாற்றயங்கினானே

வசனம்

அகோதெப்படியென்றால் அப்பாசுமன்னன் தந்தைதாயிடத்தில்விடைபெற்றுக்கொண்டு நால்வகைச்சேனைகளோடும் காட்டுக்குப்போய்வேட்டையாடி தன்னகரசதாக்குத்திரும்பும்போது தண்ணீர்தாகத்தினால்தாறணமே பரதவிக்கிறபோது மந்திரிமுதலானசேனைகள் நான்குபுறத்திலுமோடித் தண்ணீர்தேடும்போது ஒருதோப்பில் மரத்தினடியில் ஒருபாண்டத்தில் கள்ளிறக்கிவைத்திருந்தது அதைத்தண்ணீரென்பதாய்த்தூக்கிக்கொண்டுவந்து அரசனுக்குக்கொடுக்க அதைவாங்கிமுன்னின்ன தெரியாதாலும் தாகவிடாயினாலும் அவனோடுவாங்கிப் புசிக்கவே கள்ளின் வெறிதலைமண்டைக்கேறிக் கீழேவிழுந்து பிதற்றிக்கொண்டிருக்கையில்தக்கிறதிதங்காண்க.

பொதுவிருத்தம்.

அடவியில்விழுந்துசோர்ந்துவுறியப்பாசிருக்கச்
சடுதியில்நுதரோடித்தந்தையர்தமக்குச்சொல்லு



ஓடிவந்து தன்னகொந்துசோர்ந்தகன்றாசவேந்தன்
கடவிடன்னறுண்டெழுந்து கதறியேபுலம்பலுற்றார்

வசனம்.

அகோதெப்படியென்றால் காட்டிலிருக்கத்தினால் தண்ணீரென்று அப்பாசுராசனேருடிதுமயங்கிக்கிடந்து வெறிதலைமண்டைக்கேறிப் பிதற்றிக்கொண்டிருப்பதைக்கண்ட இவதூதர்கள் அந்தமாநகரத்திற்குப்போய் அசம்மதுசாவுக்குச்சொல்ல அதைக்கேட்டவர்புலம்புகிறவிதங்காண்க

அசம்மதுசாபுலம்புகிற—தரு—இ—ம—காம்போதி—ஏகதாளம்.

பல்லவி.

இதுவென்னவிதிவசமோ—மகன்றனக்கு—இறைவன்விதித்தவிதி

அநுபல்லவி.

சதியோநானறியேன்தனயன்படும்விதி
மதிமோசம்போயல்லோவன்றிற்கனுப்பினவந்தேன் (௩௮)

சரணங்கள்.

சோதிமைமறந்தேனோ—வநதினிட
தொழுமையிகழ்ந்தேனோ
வேதநெறிகள்தப்பியிருந்தைனைநினைந்தேனோ
நீதிநெறிகள்தப்பியினைகள்செய்தேனோ (௩௯)

சாஸ்திரம்பார்த்தேனோ—உனவின்முன்னர
சனைக்கோபந்தேடுந்தேனோ
வார்த்தைப்பொடுசொல்லிப்புளியமைவிட்டேனோ
வல்லவனேவர்தத்திநாலிலே பங்குவிட்டேனோ ௪௦

சொன்னசொல்மறந்தேனோ—பிரியாரைத்
தொந்தரைசெய்தேனோ
விராமலவதற்றுவைடந்தேனோ
துரையாகினாள்புளியபத்துசெய்தேனோ (௪௧

பொதுவிருத்தம்.

மன்னரகமுதராதனதெந்துதாம்புலம்பி
அந்தகரோர்சூழ்ந்துவர அடவிதனிலதாமேகி
தன்னையந்தெப்பாசுராசன்படுந்துயரை
இன்னவநுதுகண்டுதுபுலம்பிச்சொல்வார்

வசனம்.

அதெப்படியென்றால் தூதுவர்கள் வந்துசொல்ல அகமதுசாவேட்டை யாடப்போனபோ தந்நகரத்திலுள்ளோர்கள் குழப்பமுண்டாகி தன்மகன்மைக்கண்டு காட்டுக்குப்போய் அப்பாசுமன்னன் தாயைக்கண்டு தன்மகனைக்கண்டு மயங்கித் தியங்கியிருக்கிறவிதங்காண்க.

பொது-விருத்தம்.

அந்நகரத்தோருமெல்லாம் அகமதுசாவைக்கண்டு
பந்தலாகக் கனிப்பலைக்கிடந்துக்கொண்டு
வெகுதூரநுங்கன்று மாதரன்மைந் தசெல்ல
சுந்தரத்தாய்கள் நடந்தமுது மேபுலம்புவாளே

வசனம்.

இவ்விதமாக அகமதுசாமகனைக்கண்டு புலம்பிப் பிரலாபித்து இருபல்லக்கில் வைத்துக்கொண்டு சகசதாகப்பாதியென்னும் நால்வகைச்சேனைகள் குழப்பிரயாணப்பட்டுக் காட்டைவிட்டு நகரம்போய் அரமனைக்குட்சேர அப்பாசுவினுடைய தாய்கண்டு புலம்புகிற விதங்காண்க.

தாய் புலம்புகிற-தரு-இ-ப-நீலாம்புரி-அடதாளம்.

கண்ணிகள்.

அகிறதும்மனேயென்றும்—அருந்தப்பிலாவமேனே
சோதிப்பேசுடரொளிப்ப—சொல்லவொண்ணுவல்லவனே

மக்களில்லாதிருந்த—மைந்தனென்னைப்பெற்றதற்கு
அக்கனேயுன்னருமாற்றந்த—அப்பாசுதிக்கானகத்தில்

வந்ததென்னயறியாமல்—மகனுக்குவிடைகொடுத்து
அந்தவனந்தனில்வேட்டை-அருள்மகனையனுப்பினேனே

என்னபிழைநான்செய்தேனோ-வந்தவென்னபிழைசெய்தாரோ
முன்னுதவேற்குமாரனே—மொழிபவொண்ணாப்பெரியவனே

எங்களுக்களித்தபிச்சை—எழில்மகனைக்காத்தருள்வாய்
சுன்னையுள்ளநாயகனே—தனிமகனைக்காத்தருள்வாய்

பத்தினியாளிவ்விதமாய்—பகர்ந்துறவாயிகவுங்கேட்டு
சித்தமதுதான்கலங்கித்—தியங்கியேயிருந்தகானோ



பொது-விருத்தம்.

நாரிகைபுலம்பிச்சோர்ந்துதனியாயிருக்கும்போது
மாதனைசம்மதுசாவன்னையைத்தைரியமொழிந்து
சாமந்திரியையழைத்துத்தங்கமகன்தன்னிலிருந்து
பாரில்மேல்வெற்றிவைத்தியர்களைத்தருவீரென்றாரே.

வசனம்.

அதேதெப்படியென்றால் அப்பசுசாகனை மாளப்பண்ணிக்கொண்டு போய்ச்சேர்க்கத் தாயார்புலம்புகிற யாரத்தைக்கண்டு பிரலாபித்து அகம்மதுசாவென்பவனையழைத்து மந்திரியை வரவழைத்து பரிதிமாதேரப்பிரப்பதற்குப் பண்டிதர்களைக்கொணர்ந்து தூதுவிடுத்திருத்தியமந்திரி சொல்ல மந்திரி அனுப்பியவிதங்காண்க.

பொது-விருத்தம்.

மன்னவனுரைக்கக்கேட்டமந்திரியெழுந்துபோற்றி
எங்கிருந்தாலுமெட்டு பெறுவைத்தியர்க்குச்சொல்லி
அன்னவர்வைத்தியப்பையைப்பக்குவமைக்கொண்டு
தன்னிற்சபைக்கிப்போதுவரக்கினில்வருகின்றாரே

வசனம்.

அதேதெப்படியென்றால் அப்பமதுசாவானவர் பண்டிதரை அழைக்கச்சொல்லி அதுபோல்மந்திரிவைத்தியருக்குச்சொல்லவைத்தியர் அப்பாசுக்குண்டானவெற்றிதேர்ப்பிரயப்படியாய்க்கண்டு சொல்வதற்கு அரமனைக்குள்வைத்தியர்வருகிறவிதங்காண்க.

வைத்தியர்வருகிற-தரு-இ-ப-சங்கராபரணம் -ரூபகதாளம்.

பல்லவி.

பண்டிதர் வந்தார்-வியாதிதீர்க்கும்-பண்டிதர்வந்தார்.

அநுபல்லவி.

பண்டிதர்வந்தாரே—சம்பு மாபெய்க்கவே.
பிரணத்தண்டநோயை—தானேதீர்ப்பேனென்று பண்

சரணங்கள்.

நீராகநோய்களெல்லாம்நொடியினில்
தீர்த்திடுவேனென்று
பாரமான்சித்திரைப்புப்பற்பங்களும்
தானேபக்கத்திலேசெய்து
நாராயணர்மருந்துப்பையைப்பிடித்துக்கொண்டு
தனையனைப்பாதநோயைத்தானேத்தீர்ப்பேனென்று பண்

மேதினிதன்னிலுள்ளவயித்தியர்க்கு
மேலானவரென்றும்
சாதனமந்திரங்களறிந்திட்ட
சாமர்த்தியனென்றும்
நிதமாகவேசைந்நாடியைப்பார்த்து
நிபுணத்துடன்சொல்லவேவிபுணனென்று — பல்

கற்றுக்குட்டியொருவனவருடன்
கையைப்பிடித்துக்கொண்டு
தந்தியழைக்கப்போனவேலைக்காரர்
தம்முடன்கூடவர
சித்தங்கலங்கியிருக்குமகமதுசா
சமூகத்தில்விரைவாகவே — பல்

பொதுவிருத்தம்.

வந்தபண்டிதனப்போமன்னனைவணங்கிநிற்க
அந்தமாதகமையாளும்அகமதுசாயும்பார்த்து
எந்தன்புத்திரனுக்குற்றவியல்புளநோயைத்தீர்த்து
சிந்தையின்வருத்தந்தன்னைத்தீர்த்திடச்செய்வாயென்றார்

இறவுமது-விருத்தம்.

வாதிமப்பாசனையைவயித்தியர்தாம்பிடித்து
நாடியைப்பார்த்துமேலாம்ராசருக்கிதனைச்சொல்வார்
சாதிம்வியாதியிதேனுமல்லசார்ந்தபேய்குன்மமல்ல
காடிகட்குடித்ததாலேதனவெறிநோயிதென்றார்

இறவுமது-விருத்தம்.

கட்குடிவெறிநோயென்றுதனவயித்தியன்சொற்கேட்டு
நட்புமந்திரியைப்பார்த்துநடந்ததைச்சொல்லுமென்ன
பெட்புறுமப்பாசேந்திரன்பிரலாபிக்கத்தாகத்தாலே
மட்கலசேன்றெண்ணிமதுவினைக்கொடுத்ததாமே

இறவுமது-விருத்தம்.

அந்தவைத்தியர்சொற்சொல்லுமமைச்சர்சொற்சொல்லும்பார்த்து
சந்தேகநீங்கிராசன்தக்கவயித்தியனைநோக்கி
வந்தநோய்வெறியைத்தீர்த்துமனமகிழ்செய்வீரென்ன
பந்தமாய்ப்புளிப்புச்சேர்த்துக்கொடுத்திடப்பறந்ததன்றே

வசனம்.

அதோதெப்படியென்றால் தூதுவர்கள் ஓடிப் பண்டிதனை அழைத்துவர அவர் அகமதுசாவின் சமுகத்திலே வந்துவணங்கி நி



ற்கதன்மகனுக்குவந்தநோயப்பாரென்றுஅவர்சொல்ல அப்பாசனையைப்பிடித்துநாடிபார்த்து இதுவியாதியல்ல கட்குடித்த வெறி யென்றுசொல்ல இராசனுக்குச்சந்தேகமுண்டாகி வேட்டைக்குக்கூட்டிப்போனமந்திரியைக்கேட்க அம்மந்திரிசொல்லியது அப்பாசமன்னன் வேட்டையாடித்தாகவிடாய்கொண்டிருக்க தண்ணீரைக்கொண்டுவரப்போனவர்கள் மண்பாத்திரத்திலிருந்த கள்ளைத்தண்ணீரென்றெண்ணி அரசனுக்குக்கொண்டுவந்துகொடுக்க அரசனதைவாங்கிப்புசித்தவுடனே இவ்விதமாய்வெறிநோய்வந்ததென்று சொல்ல இருவருடையவார்த்தையுமொன்றாயிருந்ததென்றெண்ணி அதற்குத்தக்க அவிழ்தங்கொடுக்கும்படி சொல்ல அதற்குச்சரியான புளிப்புமுதலியவஸ்துக்கள்கலந்துகொடுக்க அந்தவெறிநோய்தீர்ந்து எப்போதும்போல சுபாவமாக அப்பாசமன்னனிருந்தாரென்றறிக.

பொது-கொச்சகம்.

அப்பாசுகட்குடித்துஅவெறிநோய்தீர்ந்ததன்பின்
செப்பும்வயித்தியர்க்குத்திரவியமது
ஒப்பில்வெகுமானமாங்களித்திந்தேகியபின்
அப்புரவூரார்மெய்யுமந்தர்ம்கம்பேசினரே

இறவுமது-விருத்தம்.

அந்தமாதகமையாளும்அகமதுசாயின்புத்ரன்
பந்தமார்க்கத்துக்காகாப்பழுதுறுங்கள்ளுதன்னை
அந்தமாய்க்குடித்திருக்கஅதற்மோசேதப்பாடில்லாமல்
விந்தையாயிருப்பதாலே விசாரிக்கப்போவோமென்றார்

வசனம்.

இவ்விதமாக அப்பாசகட்குடித்த வெறிதீர்வதற்கு வயித்தியர் அவிழ்தங்கொடுக்கப் புசித்து வியாதிநீங்கி வயித்தியருக்கு இனங்கொடுத்தனுப்பியபின் அவ்வூரிலுள்ளசிலபெரியமனுஷர்கள் ஒன்றுசேர்ந்து அகம்மதுசாபின்னை கள்ளைக்குடித்தசங்கதியைக்குறித்து மார்க்கப்படி அவர் தண்டனைசெய்யாதிருக்கிறபடியால் அதைநாமவரிடத்திற்போய்க்கேட்க வேண்டுமென்று போய்ச்சேர்வாருங்களென்று அவர்கள் ஒருமித்து

ஊரிலுள்ளபெரியோர்கள்வருகிற—தரு

இ—ம்—தோடி—தாளம்—ஆதி,

பல்லவி.

வந்தார்பெரியமனிதர்- அகமதுசாமுன்
வந்தார்பெரியமனிதர்

அனுபல்லவி.

இந்நகரிலுள்ளவர்கள்பிழைசெய்தாலும்
பந்தமாய்த்தெண்டனைசெய்யும்பார்த்திபர்கள்நாங்களென்று
வந்தார்பெரியமனிதர்

சரணங்கள்.

சட்டைசருபுத்தணிந்து- இடுப்பதனில்
நக்ககட்டாரிபுனைந்து
அட்டகனங்கள்செய்யுந்துடுக்கரைவணங்கச்செய்யும்
அட்டதிசைபோற்றும்அகம்மதுசாய்பைநாடி. வந்

தேசத்தரசர்போற்றும்—அகம்மதுசா
திசக்கொலுவைத்தேடி
நேசமுடனென்றுக்கொன்றுநிர்ணயங்கள்பேசிக்கொண்டு
பாசமதாய்க்கூடிக்கொண்டுபார்த்திபன்சமுகமதில் வந்

மார்க்கவிதிதெரிந்தோர்—அந்நகருள்ளோர்
எர்க்கும்படிநடந்தோர்
ஆர்க்குஞ்சரியதாக அழகாய்நடப்போமென்று
பார்க்குள்புகழ்படைத்தபகாகமதுசாமுன் வந்

அகமதுசாய்புக்குப்பெரியமனுஷாள் சொல்லுகிற—விருத்தம்.

எங்களுக்கரசர்கோவேயெவர்களும்புகழிராச
சிங்கமேவெற்றிமாலைத்தினம்புனைந்திடுவோய்கேளீர்
உங்களுக்கெளியோர்நாங்களுரைக்கும்விண்ணப்பந்தன்னை
இங்கிதத்துடனேகேட்டுஇசைந்தருள்செய்குவீரே,

வசனம்.

அகோசேனும் இராசர்கள்போற்றுகின்ற சிம்மமேருவே நாங்கள்சொல்லுகிறவிண்ணப்பத்தைக்கேட்டுஅதற்குப்பதில்மொழி சொல்லவேண்டு சிரோமணியானதவுலத்தே,



இராசன் சொல்—வசனம்.

ஆனால்வாருங்கள் ஊரிலுள்ளபெரியோர்களே என்னிடத்தில் நீங்களென்னசொல்லுகிறீர்களோ அதுபோலநடந்துகொள்ளக்காத்திருக்கிறேன் சொல்லுங்களுராரே

பெரியோர்களுக்கும்அகம்மதுசாவுக்குந்தர்க்கதரு
இ-ம்-தோடி-ஆதிதாளம்.

எங்கும்பிரசங்கமாய்ச்சேங்கோல்செறிசெலுத்துமன்னர்கோவே—இந்த
இயலந்தநகர்தனில்வாழ்ந்திருந்திடுமெங்கள்கோவே
பொங்கமாய்நாங்கள்புகழ்ந்துகேட்குங்கேள்விக்குமன்னர்கோவே இப்போ
பொருத்தமாய்க்கேட்பீரேல்திருத்தமாயிருந்திடுமரசர்கோவே

அகம்மதுசா சொல்—தரு.

இந்நகரதனிலெங்களுமிருந்திடுமனிதர்களே உங்கட்
கென்னலாருங்காரியமேதோவதனைச்சொல்லு மனிதர்களே
சிதைமயங்காமற்றேறியிருக்கின்றமனிதர்களே இப்போ
தந்தரங்கமேதேனுமுண்டேலதனைச்சொல்வீர் மனிதர்களே

பெரியோர்கள்சொல்—தரு.

மன்னரேயும்மிடம்வந்துகேட்குங்கேள்விராசர்கோவே நமது
மார்க்கப்படிநடப்பீரென்றுசொல்லவந்தோம் ராசர்கோவே
இந்நிலந்தன்னிலெவர்குற்றஞ்செய்தாலும்ராசர்கோவே அந்த
ற்றதண்டனைசெய்து இயல்பாட்டத்திலவந்தீர் ராசர்கோவே

அகம்மதுசா சொல்- தரு,

இப்போதுங்களுக்கென்குற்றஞ்செய்தேன்மனிதர்களே அதை
என்னுடன்சொன்னாலெழிலாய்நடத்துவன் மனிதர்களே
அப்புறமென்சொல்லையறிந்துபார்த்திடுங்கள்மனிதர்களே இப்போ
தொப்பியேநீங்களுறுதியாய்ச்சொல்லுங்கள் மனிதர்களே

பெரியோர்கள்சொல்-தரு.

அந்தமாநகர்தன்னையாண்டுவருகின்றராசர்கோவே உன்ற
னரும்புதல்வன்மதுவையருந்தியிருப்பதால் ராசர்கோவே
எந்தவிதமாக இருந்திவைத்திருக்கின்றீராசர்கோவே அவரை
ற்றதண்டனைசெய்துகாட்டுக்கனுப்பிவிடும் ராசர்கோவே

அகம்மதுசா சொல்-தரு.

காட்டுக்கனுப்புமென் றுகருத்துடன்சொல்லிடுமனிதர்களே — எந்தன்
கருத்துக்கலங்கிநலம்பெயர்குதே — மனிதர்களே
கேட்டைக்குறைப் பாவிவிடாய்த்துத்தாகமாகியேனிதர்களே — அங்கு
ம்ற்மதுவையுண்டமகனுமென்னபிழை — மனிதர்களே

பெரியோர்கள்சொல்-தரு.

பீழைபென்னவென்றுநீபேசுவதுசரியோமன்னர்கோவே — உமர்
பெற்றஅவுசாமையைத்தடிந்ததறியீரோ — மன்னர்கோவே
மறைமுகிற்சமுன்னாமன்னாகமதுசாமன்னர்கோவே — உமது
மகனையித்துவருகிட்கரடேகிவரச்செய்வீர் — மன்னர்கோவே

அகம்மதுசா சொல்-தரு.

தனித்துமகனைக்காட்டிற்றுணைகைச்சொல்வதால்மனிதர்களே — இப்போ
தந்தையிருவர்க்குஞ்சகிக்குமோமனமது — மனிதர்களே
வனத்திலேக்குவருடமகன்போகச்சொல்லியேமனிதர்களே — நாங்க
ளினத்துடன்கூடவேயெல்லோருஞ்செல்கின்றோ — மனிதர்களே

பெரியோர்கள்சொல்-கொச்சகம்.

பார்க்கப்படி நாங்கள்சொல்மனம்பதைத்துச்சொல்லுகிறீர்
ஆர்க்குஞ்சரியாமோஅகம்மதுசாவெறும்வேக்கே
பார்க்குளவரவர்விதியைப்பட்டுதொலைக்கவேனும்
மற்றையவர்க்குஞ்சரியாயேதேனுஞ்செய்வீரே

வசனம்.

அகோகேளும் ராஜமான்ய ராஜஸ்ரீயாயிய அகம்மதுசாவென்று மா கே இதுவரையில் நாங்கள்சொல்லிவந்தது தங்களுக்குமனவருத்தமா யிருக்கும்போலிருக்கிறது நாங்கள்பார்க்கப்படி சொல்லுகிறோமேதவிர உம்மி டபேரில் கொடுமையாய்ச்சொல்லவில்லை ஆகையால் உம்மிடகுமாரன் அ ப்பாஜியையைத்துவருடம் வனகம்போய் வரச்சொன்னாலும்சரி நீங்கள கூடப்போனாலுஞ்சரி இனிமேல்எங்களுக்கு அவசியமில்லை சிரோமணியான ம ஹாத்மே.

பெரியோர்களுக்கு அகம்மதுசா சொல் விருத்தம்.

நல்லதுவனக்குச்சொன்னநகருள்ளபெரியோர்கேளீர்
செல்வனுமனைவியாளுஞ்செல்கின்றேம்வனத்திற்கிப்போ



அல்லலில்லாமலிந்தஅந்தநகரில்நீங்கள்
வல்லமையோடிருந்துவாழ்ந்திருப்பீர்கள்தாமே

வசனம்.

ஆறுதல்கேளுங்கள் இந்நகரிலுள்ளபெரியோர்களே வருவிதிவழியி ற்றந்தாலென்ற பழமொழிபோலே நானும் என்மனைவியும் என்பிள்ளை அ ப்பாசும் இந்தநகரைவிட்டுக்கானகத்திற்குப்போகிறோம் நீங்களுங்கள்மக் கள்மனைவிகளோடு யாதொருதுன்பமுமில்லாமல் இந்நகரிலிருந்து குறை வில்லாமல் வாழ்ந்துகொண்டிருப்பீர்கள்பெரியோர்களே.

பெரியோர்கள்சொல் வசனம்.

அப்படியேபோய்வாருங்கள்தவுலத்தாகியசிரோமணியே

பொதுவிருத்தம்.

ஊருள்ளமனிதரோடுவுண்மையாயகம்மதுசா
சார்வதாய்ப்பயணஞ்சொல்லித்தனதாண்மனையிற்செல்லக்
கார்குழல்மழயமாதுகணிகைதாதியர்கள்சூழ
போர்பெறுமாசன்முன்னேபெண்மயில்வருகின்றாளே,

வசனம்.

அகோதெப்படியென்றால் அகம்மதுசாவானவர் ஊரிலுள்ள பெரிய மனிதரோடு தன்மகன்அப்பாசுகட்குடித்தவிசனத்தினால் தர்க்கஞ்செய்து மார்க்கப்படியித்துவருஷம் ஊரைவிட்டு அப்பாசைப்போகும்படியாயவர் கள்சொல்ல இவர்மனஞ்சகியாமல் தாய்தந்தைபிள்ளை மூவரும் போகின் றோமென்கிறதாய் ஊராரிடத்திற்பிரயாணஞ்சொல்லி அரண்மனைக்குள்வ ர அவர்மனைவியாகியமதியமாது தாதிகள்சூழவருகிறவிதங்காண்க.

மதியமாதுவருகிற-தாடிதரு-இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

பல்லவி.

மானைநிகர்த்தவிழிதேனைப்பழித்தமொழி
மாதுமதியம்வந்தாள்

அநுபல்லவி.

ஆனமாதர்களொன்றுப்அருகினிற்சூழ்ந்துவர
கானமயிலினையாள்கணவர்சமூகமதில் — மானை

சரணம்.

பூரணச்சந்திரவிம்பம்-என்றும்
பொலிதாக்கஸ்தூரிதம்பம்

வாரணிந்திடுசல்லமுலைக்கும்பம்-சோதி
வயங்கிடுமேகலையணிச்சம்பம்
தாரணிப்பெண்கள்கண்டு மயங்கியயர்ந்திட
தானவர்வானவர்தானுணங்கொண்டிட
காரணிந்திடுங்குழல்களைக்கண்டுமேற்றிட
ககனவிருளதுகலங்கியேநாணிட
கலைமொடுமிருதனைக்குறைந்திட
கனகமணிபணிபளபளென்றிட
பழுச்சதன்மலர்முடிக்குங்குழல்
தனைமந்தின்பல-கருப்புக்களும்
கரியமொய்க்க-பிரமிபமிக்க
கிரியசித்ர-வரிவிழிகட்
கதிர்கொண்மதியின்றனிமயக்க
சதிருடன்காலிற்சிலம்பொலிக்க நாலே

பொதுவொச்சகம்.

அகம்மதுசாய்பின்முன்பில் அரிவையாள்மதியாது
தகைமையாய்வந்தநிற்கத்தனயனப்பாசமன்னன்
சகம்புகழ்சட்டைபூண்டுசிரசிற்சருபந்துகட்டி
வகையதாய்தந்தைதாய்முன்மகிழ்ச்சியாய்வருகின்றனே

வசனம்.

அகோதெப்படியென்றால் இவ்விதமாக அகம்மதுசா முன்பாக அவ்
ர்மனைவிமதியமானவள்வந்துநிற்க இவர்களுடைய புதல்வனாகிய அப்
பாசமன்னன்வருகிறவிதங்காண்க.

அப்பாசுராசன்வருகிற-ஓரடித்தரு
இ-ம்-காம்போதி-ஏகதாளம்.

பல்லவி.

வந்தானப்பாசமன்னன்-மனமகிழ்வே-இனமுள்ளோர்புகழவே
வந்தானப்பாசமன்னன்

அநுபல்லவி.

தந்தைதாயிருவரும்-அந்தமாயிருக்கையிலே
சிந்தைகளிகூர்ந்து-சிறப்பாய்நடைநடந்து
தச்செம்செம்தரிகில்லாறுகில்லாறு
கிச்செம்செம்தரிதளங்குததகிமிதிக
தகிங்கணத்தோமென



சரணம்.

இடுப்பிற்சட்டையும்பூட்டி-இருகாலுக்கும்
( ஏற்றபாப்பாசுமாட்டி
அடிக்குமேல்கிழுட்டி-சிரசதனில்
அழகாசருபந்துகட்டி
தொடரும்வினைப்பயனின்குட்சமறிந்திடாத
கடரும்படியமைத்தகர்த்தன்செயலறியாமல்

பொது-விருத்தம்.

வந்தஅப்பாசமன்னன்வரிசையாய்த்தந்தைதாய்க்கு
சிந்தையிற்களிப்புண்டாகத்திரளும்வணங்கிநிற்க
அந்தமதுசாகண்டுஅரிவையுமகனைப்பார்த்து
பந்தமாமணிதர்சேர்ந்துபரந்தனைக்கூறலுற்றார்

வசனம்.

அகோதெப்படியென்றால் அப்பாசுமன்னர் தனது தந்தை தாயிடத்
தில்குவந்து செம்பஅரசபுடனேவணங்கி நிற்கையில் அகம்மதுசா தன்ம
னைவியையும் தனது குமாரனையும் பார்த்து வரிலுள்ளபெரியமனிதர்களு
க்கும் தமக்கும்நடந்தசவிஸ்தாரங்களைச்சொல்லுகிறவிதங்காண்க

அகம்மதுசாசொல்-விருத்தம்.

எந்தனதுபிரேமைதனையேபெற்றிளமதியானே
முந்திடும்வரத்தினுலேயுதலவனளித்ததேயே
அந்தநாள்வனத்திற்கனிகாயிருந்தியரமேலவசார்
இந்தவூர்விட்டுக்காட்டிலேகிடச்சொல்லினுரே

வசனம்.

கேளுங்கள் என்னுயிருக்குயிரானபெண்மணியே எனதுதுரையுமன்
புமுள்ளதவப்புத்திரனுகிய அப்பாசென்னும்கண்மணியே முன்பு வேட்
டைக்குப்போனவிடத்தில் தண்ணீரென்றுகளைக்குடித்ததனுலே பாக்
கத்திலுள்ளபடி இந்நாலருஷத்திற்குக்காட்டிற்குப்போய்வரும்படியாய்வ
ரிலுள்ளபெரியோர்கள்சொன்னுர்கள் ஆகையால்நாம்மூவரும் இப்போதே
பிரயாணப்பட்டுப்போகவேண்டியது இனியாதொன்றுமேனும் இங்கிருந்
திருக்கக்கூடாது பெண்ணேமதியமாதே

பொது-விருத்தம்.

கணவனுரிதனைச்சொல்லக்காரிகைகாதுதன்னில்
தனலினிலியந்தன்னைத்தான்காய்ச்சிவிட்டாற்போல
மனமதுகலங்கிச்சோர்ந்துமண்ணின்மேல்விழுந்தெழுந்து
கணவனைச்சதனைப்பார்த்துக்கலங்கியேபுலம்பலுற்றுள்

## வசனம்.

அகோதெப்படியென்றால் அகமதுசாமனைவிக்கும் மகன் அப்பாசுக்குப் வைசார்சொன்னபடி காட்டிற்போகவேண்டுமென்று சொன்னவுடனே சபத்தைக்காய்ச்சிக்காறினிற்விட்டாலெவ்வளவு வருத்தமுண்டோ அதுபோலமனமுருகி மதியமாதுபுலம்புகிறவிதம்காண்க.

மதியமாதுபுலம்புகிற-தரு-இ-ம்-ஆதி-அடதாளசாப்பு.

அந்தநாளில்விதியமைந்ததாலே-இந்த
அணைகரைவிட்டுப்போகலாச்சே
சொந்தமுள்ளசந்தனுபகரும்-நானும்
சுதனுடனேகூடப்போகலாச்சே

உருகுதையோஎற்கருநதையோ-என்னை
யுலையிலிட்டகட்டிமெழுகுபோலே
அரசிழந்துசெல்வப்பிறவிழந்து-அந்த
நதியைப்போலிந்தவூரைவிட்டு

புருஷர்நானுமிப்போமயங்கிநிற்க-பெற்ற
புத்திரனுங்கூடத்தியங்கிநிற்க
மருவில்லாதகாட்டுமலருமானேன்-மேக
மழையில்லாமல்வாடும்பயிருமானேன்

ஆலைவாயிலிட்டகரும்புமானேன்-மத
யானையுண்டகனிதாமானேன்
சாலைபற்றபக்திதானுமானேன்-கன்று
தனையிழந்தபசுபோலுமானேன்

வேரிலாதமரம்போலுமானேன்-இடி
விழுந்தமயில்போலுமாகினேனே
வைரிலாதகுடிபோலுமானேன்-சிறகு
வொடிந்தபட்சிபோலுமாகினேனே

தேடும்பாம்பின்வாயிற்றேரையானேன்-நல்ல
தேனில்லாதகனிபோலுமானேன்
நடுமுடிவில்லாமதியுமானேன்-மலர்
ஒக்கவிட்டவண்டுபோலுமானேன்

தலையெழுத்தோஇந்தத்துன்பப்பட-இறைவோன்
தானெழுதிவிட்டதன்குறையோ
அலையதனிற்றுரும்புமாகினேனே-புவி
ஆளுகின்றஎந்தன்றகுமானே

நிதமுடனிந்தவூரார்கூடி-இந்த
நிமிஷமதிற்போகச்சொல்லலாமோ
ஆகியேநானுங்களென்னசெய்வோம்-மெங்களை
யாளுகின்றஅப்பிள்ளையினே



## பொது-விருத்தம்.

மன்னர்கோன்மனைவிசொல்லி மயங்கியேபுலம்பிநிற்க
அன்னவளாமகமதுசா அருகினில்வாடிநிற்க
தன்னப்பாவென்னும் நாதிபுருகிச்சோர்ந்து
தன்னிலைதிருமான் கலங்கியேபுலம்பலுற்றான்.

## வசனம்.

அதோதெப்படியென்றால் மதியமாது தன்றுயர் சொல்லியதைக்கேட்டுப்புலம்பிப்பிசைபிறகுநிற்க அகமதுசாவாடிச்சோர்ந்து நிற்க இவர்கள்புத்திரனாகிய அப்பாசென்பவர் இதுகளையெல்லாங்கேட்டு மயங்கிப்புலம்புகிறவிதங்காண்க.

அப்பாசுபுலம்புகிற-தரு-இ-ம்-ஆதி-அடதாளம்.

ஆதமேபொருளுண்டான தனியாளெனக்குநிறைந்தோனே
ஏகமதாகிநிற்குமிறையவனையறிந்திலேனே
பொல்லாதகள்ளனென்னைப் புசிக்கச்செய்தாயிதையறிந்தாக
நல்லவர்முன்னின்றுபேச ஏதுதேயென்மனதுபேய்போ.
நாள்தனக்குசகாதவனுக்குடம்பெடுத்தேனுலகந்தனில்
மார்க்கந்துக்கானதாயிவை மனமறியாச்செய்தனைத்தாய்
அகமதுசாதன்வயிற்றில் அப்பாசென்றபிறந்தனையோ
மகன்பிறைபாலமுறக மைக்காவென்றன்தந்தைதாய்க்கு
அந்தமாகாதுமென் தெய்வமதியம்வயிற்றில்
எந்தவிதேசென்றுவந்தாய் ஏனோஇறையவனே
பின்னையவிதேசத்தைவிட்டு பிரதேசம்போகச்செய்தாய்
எள்ளளவுமெல்லவரும் எனைக்கண்டுநகைக்கசெய்தாய்
வாய்பேசாதவூரார்தம்மை மார்க்கப்படிசெய்யவைத்த
தாயார்தந்தைபெற்றவரையும் தவணிவிட்டுப்போகச்செய்தாய்
ஆதிரானென்னசெய்வேன் அல்லாவேதானென்னசெய்வேன்
சோதியேகடவுளேயையனே என்னைசெய்வேன்

## பொது-விருத்தம்.

தொல்லையாம்விதிவசத்தால் சேர்ந்தவப்பாசுதான்
கல்பெலாங்கரைந்துநொந்து கருத்தழிவுற்றுபுலம்பிநிற்க
வல்லமகமதுசாவாடி நிற்பதைக்கண்டு
பொல்லாதவிதிவந்துற்றுதோ போகத்திடவேண்டுமென்றான்

இதுவுமது—தோச்சகம்.

பனிமொழிசொன்னசொற்கேட்டு மன்னருந்தன்பிள்ளையுமாய்
முனைந்துகானகமேக மூவருஞ்செல்வேளையினில்
மனம்வாடிமயிமந்திரி மன்னவர்தன்னைநிறுத்தியவர
னநாசையாலென் நிசைத்ததற்குமந்திரிசொல்வார்.

வசனம்.

அதேதெப்படியென்றால் அப்பாசமன்னன்புலம்புவதையும் அசம்மதாசாமபங்குவதையும் மதியமாதுகண்டு இனி வந்தவிதிக்குச்சலிப்பதினால் வருவதொன்றுமில்லை என்றுசொல்ல மூவருமொருமனதாகி பிரயாணப்படுகிறவேளையில் செம்பவும் ஒருமையாகிய அமிர்மந்திரி தன்னிடத்திலேவந்து பாதவித்துக்கொண்டு நிற்க என்னாசை நாங்கள்போய்வருமளவும் நீயாண்டுக்கொண்டிருவென்று அரசன்சொல்ல அதற்குப்பதில்மொழி மந்திரிசொல்லுகிறவிதங்காண்க.

மந்திரிசொல்-விருத்தம்.

இன்னகராசையாள்வா யென்றிடுமரசர்கோவே
மன்னரேநீரில்லாதா லென்மனம்பொருந்துமோதான்
சொன்னசொல்லதைமாற்றித் தொல்லாசாள்வீராகில்
வன்னமாயுமதுகூட மகிழ்ச்சியாயிருப்பதாமே.

வசனம்.

செனுங்கள்ராஜமேருவே தாங்கள் கானகம்போகிறவிசனத்தால் இந்நகரையாளுமென்றுசொல்லுகிறீர்கள் உங்களைக்காட்டிலுமெப்பிவிட்டுநானாளுகிறது பெருமையல்ல அந்தச்சொல்லை மாற்றிவிட்டு இராஜரீகஞ்செய்வீர்களானால் உங்களோடேகூட எப்போதும்போலே கூடத்தோடிருந்து காலம்போக்கிக்கொண்டிருப்பேன் சிரோன்மணியாகியதலைவனே.

இராஜன்மந்திரிக்குச்சொல்—விருத்தம்.

உரைத்ததுரைசிதான்மந்திரி யூரினிலுள்ளோர்வந்து
வரைகடந்திட்டதாலே வனத்தினிற்கேகச்சொன்னார்
முறையதுதப்பாமற்றான் மூவருஞ்சென்றுவாரோம்
அறநெறிபிசகிடாமல் அநுந்தனிலாளுமென்றார்

வசனம்.

அதோவாரும் என்மனதுக்கேற்ற அமிர்மந்திரி என்புதல்வனப்பாசருக்குத் தெரியாமல் தவ்வளிரென்றுகள்ளைக்குடிக்கதற்காக மார்க்கப்படி இந்நகரைவிட்டு காட்டுக்குப்போய்வரும்படியாயுள்ளபெரியோர்



கள்சொல்ல அதுபோலே நான்மனமொப்பி பிரயாணஞ்சொல்லிவந்தபடியினாலே இனிநானிருந்தால் மார்க்கத்திற்குஞ் சத்தியத்திற்கும் விரோதமாயிருப்பதால் இதோசமயப்போதே நாங்கள்போய்வருகிறோம் என்னுடைய செங்கோலும் முத்திரைமோதிரமும் வாங்கிக்கொண்டு நாங்கள் தவணையிருந்துவருமளவும் ஆக்ஞாசக்கரநெறிப்படி அரசையாண்டுக்கொண்டிரும் மந்திரி.

பொது—விருத்தம்.

மன்னர்சொற்போலேமந்திரி மாநகர்தன்னையாள
அன்னகர்தன்னையாண்ட அசம்மதாசவெழுந்து
இந்நகர்தன்னைவிட்டு எழில்மூவர்பரியிலேறி
சொர்ணமும்பணியுமாடைத் தொகுப்புடனெடுத்துச்சென்றார்.

வசனம்.

அதோதெப்படியென்றால் அசம்மதாசாவானவர் தனது செங்கோலையும் முத்திரைமோதிரத்தையும் தனக்கு உரிமையாகிய அமிர்மந்திரியிடத்திற்கொடுத்து அந்தமாநகரத்தைச்சேர்ந்த தேசங்களெல்லா மரசாட்சி செலுத்தும்படிச்செய்துவிட்டு தன்மனைவியையும் தனதுகுமாரன் அப்பாசியையும் அழைத்துக்கொண்டு தனக்குவேண்டிய பூஷணாதிகளும் பொருள்களையுமெடுத்துக்கொண்டு மூன்றுபேருமூன்று குதிரையிலேறிக்கொண்டு காட்டுக்கு அந்நகரைவிட்டுப் பிரயாணப்பட்டு நடக்கிறவிதங்காண்க.

அசம்மதாசா—பனிமொழி—பிள்ளையப்பாசு

இம்மூவருங்கானகஞ்செல்லுவது

கொண்டிச்சிந்து—இ—ம்—புன்னாகவராளி—ஏகதாளம்.

நடந்தார்நகரைவிட்டு—அவர்—சஞ்சிதவஞ்சியுமைந்தருடன்
கடந்தாரரணைவிட்டு—நல்ல—கனகமணிபணிபொருளுடனே
அடர்ந்தசபிதெருவ—வெகு—துன்பங்கள்வம்புகள்பட்டிடவே
அடர்ந்ததெருக்கடந்து—வெகு—அங்காடிவீதியுந்தான்கடந்து
கடையுங்கடைத்தெருவும்—நல்ல—கம்மாளர்வீதியுந்தான்கடந்து
கொடிபோன்றிடைவகுத்த—நல்ல—குச்சிலியர்வீதியுங்கடந்து
வடிவில்மிகுந்திலங்கும்—ராஜ—மன்னர்கள்வீதியுந்தான்கடந்து
குடைமன்னர்தாம்வாழும்—பக்க—கோட்டையைவிட்டுவெருபுளகில்
கடந்தார்குருமனை

பொது—விருத்தம்.

கரிபெருதெளமில்லாமற் காதலிமைந்தன்றன்னைத்
திரமுடன்கூட்டிக்கொண்டு நிலைமதனசம்மதாசா

அரியகொர்பரியிலேறி அடர்வனஞ்செல்லும்போது
வருந்திறியதிப்பாமற்றான் வழியினிற்சகுனங்கண்டார்

வசனம்.

அதேதெப்படியென்றால் அகம்மதுஷாவும் அவர்மனைவியதிரூப்பு
நல்லகப்பாசும் இந்தமூவர்களும் குதிரையின்மேலேறி வேறுகாலாள்முதலிய
சேனைகளில்லாமல் நகரைவிட்டுக் கானகம்போவதற்கு வெளியில்வரும்
போது இவர்களுக்குச்சென்மதுக்கத்தை விளைவிக்கும்படியானசகுனங்கள்
தோன்றுகிறவிதங்காண்க.

அகம்மதுஷாவும்மனைவியும்பிள்ளையும்

வழியிற் சகுனங்காண்கிற-தரு-இ-ம்-நீ கேளளி-ரூபகதாளம்.

பொல்லாச்சகுனமிதவுங்காணுதே-எந்தன்மனைவியே
 பொருந்துமனமும்வருந்திதாணுதே
எல்லாம்அதி செயலோவைபோ
 னதுகமுமே மிகவுமெலிவுகை-கண்மணியே யசோருது (பொல்)

காகமுஞ்சிறு முசலுமோடுதே-சாய்ப்பாருமைந்தனே
 சஞ்சலமடைக்குதென்மனமும்வாடுதே
காருமுகிலமழைசொரியுதே
 கனற்கொள்ளியெதிர்விழுந்துதே-தினகரியனொளிதாழ்ந்துதே ()

ஒற்றைப்பார்ப்பானுமெதிர்வருகிறான்-நமக்கெதிரில்தோ
 ஒருவனொன்றைக்குடங்கொண்டெதிரிவருகிறான்
உற்அப்பாவே தோணகநக்ஷத்திரமுதிருது
 ஓகோகெருடன்கட்டுது-வாகாய்ச்சிரமதில்தட்டுது (பொல்)

மூன்றுபொருந்தியாகவருகிறான்-இதோவிப்போ
 தொருதைகம்பென்றுமெதிரில்வருகிறான்
கண்டாயெல்லவர்களுணர்ந்துநாடிக்குது
 கருதாப்பொல்லாக்காலம்-கர்த்தனுக்கோப்போமுலம் (பொல்)

மதியமாது-தன்னுயகருக்குச்சொல்-விருத்தம்.

நந்தலாஞ்சகுனந்தன்னை நாமுமேகண்ணிற்கண்டோம்
சிந்தையிற்கலையாமை செயமுளவெனவுநாதா
அந்தமாய்வனத்திற்செல்ல ஆகாதாகாமுமிப்போ
முந்தியோர்வழியைக்கூடி மாநகர்செல்லுவோமே



வசனம்.

கேளுங்கள் என்னாயிராணநாயகரே இப்போது நாம்செல்லும்வழியி
ல் பொல்லாதசகுனங்கள் எதிரிற்காண்கின்றபடியால் வந்தவழியேதிரும்
பி மறுபடி நகரத்திற்குப்போயிருந்து நாளைக்குப்பிரயாணப்பட்டுவந்தால் ந
லமாயிருக்கின்றது பிராணமணியாகியநாயகரே.

அகம்மதுஷா-மனைவிக்குச்சொல்-விருத்தம்.

நகரத்திற்செல்வோமென்ற நாயகிசொல்லைக்கேளாய்
செகத்திற்சத்தியந்தப்பி சிறிதாயிருக்கலாமோ
உலாமகாபுரண்டாலும்நாம் உரைத்தசொற்பழுதாகுமல்
அகமதிற்கிலேசமின்றி அன்புடன்செல்வோம்பெண்ணே.

வசனம்.

கேளும்பெண்ணே என்மனதிற்கிசைந்தமதியமாதே-இப்போது அ
வசகுனங்கண்டதென்று நகர்போய்வரலாமென்று சொல்லுகிறாய் இந்த
லோகத்தில்மலைப்புரண்டாலும் நாம்சொன்னசொல்லுக்குமாறிசத்திய
த்திற்குவிரோதமாய்நடக்கலாகாதாதலால் நாம்சொல்லிவந்தபடி நகரத்
தைப் பெரிதாயென்னாமல் சந்தோஷமாய்நடப்போம் வாருங்கள் என்மனை
வியே அப்பாஜென்னும்புத்திரசிகாமணியே.

பெண்சாதிபிள்ளைசொல்-வசனம்.

அப்படியேநல்லபாக்கியம் அரசநாயகரே.

பொது-கொச்சகம்.

தேவருமோர்யானைதாங்கி முனைக்குறைமூழிதாங்கடந்து
காவனமுற்றிசென்றார்ப்படியாய்க் கர்த்தன்விதித்ததென்று
பாவமென்செய்தோமோ பகருற்றமோனமென்று
ஆவலுடனேபுலம்பி அகன்வழிநடந்தாரே.

அகம்மதுஷா புலம்பல்-தரு

இராகம்-மாஞ்சி-தாளம்-ஆதி.

பல்லவி.

யான்பாவி-புவி-யாண்டபலனிதுவோ-பிள்ளை
பெற்றபலனிதுவோ

அநுபல்லவி.

வெவ்வகமாதர்கள்வந்துபணிந்திடும் மாதுமதியமேகேள்-உந்தன்
மேனிக்கூறுகிட மதிமுகஞ்சோர்ந்திட வாடிநடக்கலாச்சு (யான்)

சரணங்கள்.

பஞ்சவர்ணமடந்தையின் மேனடிவைத்திடப் பாதஞ்சிவந்திடுமே
சஞ்சலத்தாலே மதியமெனமாதே தள்ளாடியேநடக்க (மான்)

கொஞ்சுங்கிளிபனைவெறுஞ்சலாடிடுங் குலாவுங்குயில்மயிலே நீ
மிஞ்சிடக்கையினில்விடமேனியில் வேர்த்துச்சலமொழுக (மான்)
பஞ்சவர்ணக்கிளிபோல்மொழிபேசிடும்பாலனப்பாசசெல்வன் இப்போது
அஞ்சலாககடந்துவருவதா லங்கம்பதறுதே (மான்)

போதுவிருத்தம்.

அகம்மஞ்சசாபுலம்பி அடவியிற்கடக்கும்போது
பனையுள்ளநடிசிங்கம் பலமிருகங்கள்யாவும்
கமுகத்தனிலுங்கானந் தடுங்கியேமதியாது
அப்படிக்குப்பவாடி அயர்ந்துமேபுலம்புவாளே.

மதியப்புலம்பல்—தரு—இ—ட—பைரவி—மிசரசாபம்.

இருள்சூழ்ந்தவனத்தினி லேசிறடக்கையில்தருமனே எங்க
ளெதிராயனேகமிருகங்கள்வருகுதே இறையோனே
கடிபுலிசிங்கங் காட்டானையாளிகள்—தருமனே இந்தக்
கானகந்தன்னிலே காணுதேயென்செய்வோம் இறையோனே
அகோரம்போலவும்தொன்னகரோன்றுங்காணோம்—தருமனே—சங்குஞ்
சேற்றுநேராடாத சூழ்விழிகெசென்செய்வோம் இறையோனே
மலைகளுங்கணவாயும் மார்க்கத்திற்றோணுதே—தருமனே எங்கள்
மதிமயங்கிச்சோர்ந்து வாடிமேலேலச்சே இறையோனே
மாடப்புறாக்குயில் மயங்களிற்கூவுதே—தருமனே காட்டில்
மரைகளுக்கலைகளும்பதிக்கக்கொண்டோடுதே இறையோனே
கூடிப்பலபட்சிகள் கூக்குரலிடுகுதே—தருமனே பாக்
கொள்ளிப்பிசாசுகளுங்கூக்குரல்கள்செய்யுதே இறையோனே
வெள்ளையிலுமிக்கசூலில்லையோ—தருமனே இப்போ
வேனுகள்போலவே யேங்கித்தவிக்கிறோமே இறையோனே
கள்ளர்கள்போலின்றி காணுதேயென்செய்வோம் தருமனே என்ன
சோதனையாயிதுவாபெருமானும் இறையோனே

போதுவிருத்தம்.

தண்டமுமம்புவில்லும் சக்கரத்துடனேனேதும்
கொண்டுமுன்னாற்பரித்து கூட்டமாய்வர்த்தாட்டில்



திண்டிறலரசன்புத்ரன் திருமதியுமிருமேவோரும்
கண்டுளங்கலங்கியேங்கக் கள்ளர்கள்தோன்றினாரே.

வசனம்.

அந்தப்படியென்றால் அப்பாசனும் மனைவியும் புதல்வனும் திருமதியும் பயந்துநடக்கையில் அந்தக்கானகத்திலே கள்ளர்கள் அதட்டிக்கொண்டுவருகிறதைக்காண்க.

கள்ளர்கள்வருகிற—தரு—ஆனந்தபைரவி—ரூபகதாளம்

பல்லவி.

வந்தனர்திருடர்தாமே—இவர்கள்முன்னே
வந்தனர்திருடர்தாமே

அநுபல்லவி.

வந்தனர்திருடர்கள்ளரிற் செந்தனற்பரக்கராஜன்
மைந்தனுமமனைவியுமாய் நொந்திடவதட்டிக்கொண்டு வந்தனர்

சரணங்கள்.

காக்குதல்டப்போட்டு கருங்கச்சிசிப்பிற்கட்டி
பாக்குடனையநனிப் பட்டுநூல்பைமுடிக்கட்டி வந்தனர்
கத்தியாலேவெட்டுமென்பார்—கத்திக்கலையைமென்பார்
சுத்தியும்வயிரமுமென்பார்—பத்திரமேபிடியுமென்று வந்தனர்
ஈட்டியொடுசக்கரமும்—தாட்டிகத்துடனெடுத்து
வாட்டிடுங்களென்றுகொக்கரித்து—சட்டிப்போட்டிக்காட்டிக்கொண்டு ( )

கள்ளர்கள்சொல்விருத்தம்.

எங்கடாபோறீங்கள் எவனடாநில்லுநில்லு
பங்கமேபடுத்துமுன்னே பரிவுளமனையாளான
மங்கையாள்பூண்டநகை மணியகைக்கழட்டிநின்று
உங்கையிலிருக்குமொக்க மியாவையுந்தந்திடாயே.

வசனம்.

அகோவழிப்பிரயாணம்போறவர்களே குதிரைமேலேறிக்கொண்டுநீங்களெங்கேபோறீர்கள் குதிரையைநிறுத்தி உங்களிடத்தில்

போவீர்களானால் உங்கள்மூவரையுங்கொல்லுவோம் நீ உங்க ளிடத்திலிருக்கும் பொருள்களியாவுங்கொடுத்துச்செல்லுங்கள் வழிப்போக்கர்களே.

அரசர்சொல்—விருத்தம்.

சந்திரமுடையையென்று சாற்றிடுங்கள்ளரேநீர்
கைதனைதன்முகத்தைப்பாரும் இராஜரிக்காதருள்ளுள்
வந்திடும்வினையாலென்றன் மனைவியுமானுங்கூட
வந்தனுனுங்கள்தஞ்சம் மகிழ்ந்தெனைவிடுவீரையா.

வசனம்.

அகோகேளுங்கள் கள்ளர்களே எங்கள் பொருள்முதலியவைகளைக் கொடுக்கும்படியாகக்கேட்டீர்கள் நாம் அந்தமாநகரையாண்டராஜா இவர்கள் என் மனைவியும் புதல்வனுமாகையால் என்முகத்தைப்பார்த்து உங்கள் மனமிரங்கி விட்டுவிடுங்களையா.

கள்ளர்சொல்விருத்தம்.

வினைமுகத்தறவுகூறும் வினையேபுவிவாய்ப்பட்ட
இனமிருசமுத்தப்பித்து யெருமேவாவரசேகேளாய்
புனையும்வஸ்திரமும்பெண்டீர் பூஷணந்தாராவிட்டால்
உனையுமுன்பெண்டீர்பிள்ளை யுடனிதோகொல்லுவோமே.

வசனம்

அகோகேளாய்விண்மணிதனே யுத்தகளத்தில் போர்செய்கையில் நின்றுக்கொன்றுதலாடிய தன்மைபோல் நீ சொல்லுகிறாய் அதுசரியல்ல இப்போது நீங்கள்கட்டியிருக்கிறவஸ்திரமுதலிய பூஷணாதிகளுங்கொடுத்தீர்களானால் உயிர்தப்பிப் போவீர்கள் இல்லாவிட்டால் உங்கள்மூவரையுங் கொன்றுவிடுவோம் வழிப்பிரயாணப்போகின்றவனே.

அகம்மதுசாகள்ளர்களுக்குச்சொல்—கொச்சகம்.

கொன்றிடுவோமென்றுசொன்ன கொள்கையுள்ளகள்ளர்களே
இன்றுபிள்ளைமனைவியுமா யேகறுமானைப்பால்
பன்றிநேர்தம்மைவிட்டுப் பாவனத்தில்வந்தவரை
ஒன்றுமின்றிக்கேட்கின்றீருங்கள்மனதிரங்காதோ.

வசனம்.

கேளுங்கள்கள்ளர்களே எங்கள்நாட்டைவிட்டுக் காட்டுக்குவந்த மூவர்களையும்பொருள்முதலானதைக்கேட்கிறீர்கள் எங்களுக்குயாதொரு ஆதாரமில்லாமை லெப்படிக்கொடுக்கிறது ஆகிலும் உங்கள் மனதிரங்கவில்லையோகள்ளர்களே.



அகம்மதுசாவுக்குங்கள்ளர்களுக்குந்தர்க்கதரு

இ-ப்-மூகாரி-சாப்புதாளம்.

அகம்மதுசர்சொல்லல்.

காடதனில்நாங்கள்வரக்கள்ளர்களேவழிமறித்து
கனகமணிப்பணிகளெல்லாங்கழட்டித்தரச்சொல்வீர்

கள்ளர்கள்சொல்லல்.

நாடுசகாண்டிருந்தகைபமறியாமன்னவனே
நாடும்பொருள்பறிக்காமல்நாங்கள்விடலாமோ

அகம்மதுசாசொல்லல்

கைப்பொருளைப்பறிப்போமென்றகள்ளர்களேகேளீர்
காட்டிலென்னநாங்கள்செய்வோங்கருணைபுரிவீரே

கள்ளர்சொல்லுதல்

மெய்ப்புடனேயிதுதொழிலாய்மேவிக்காட்டில்திரிவோர்க்கு
மெலிவைச்சொன்னாலிவ்வனத்தில்விடுவதுண்டோவாசே

அகம்மதுசாசொல்லல்

அழகாயந்தமாநகரையாண்டிருந்தேன்சிலநாள்
அதையிழந்துயுங்களிடம்வந்தகப்பட்டோமே

கள்ளர்சொல்லல்

பழகுகின்றமணிதனைப்போற்பகராசேநாங்கள்
பற்றும்பொருள்தாராவிட்டால்பரிந்துகொலைசெய்வோம்

அகம்மதுசாசொல்லல்

கள்ளர்களேகொலைசெய்வோமெனக்கழறல்வேண்டாம்
கனகப்பொருளியாவும்வோங்கருதிவாங்கிச்செல்வீர்

கள்ளர்சொல்லல்

உள்ளபடிகொடுத்திருன்மனைவியோடுநீரும்
உகந்துபோங்கள்நாங்களொங்களூரதற்குப்போறோம்

பொதுவிருத்தம்.

திருடர்கள்பொருள்கள்யாவுந்திறமுடன்வாங்கிச்செல்ல
மருகமழாகர்தானுமனைவியுமகனப்பாசம்

உரியதப்பரியிலேறியுயர்வனஞ்செல்லும்போது
கருநிசோர்ந்திரவிண்டுகன்றுங்கலங்கியேபுலம்பலுற்றார்

புலம்பல்போதந்தரு—இ-ம்-நாட்டை—அடதாளம்.

அதிரோதகுமாரனேயாண்டவனேதனி
யாலமெங்கும்நிறைந்தமெய்ப்பொருளே
சோதியேசுடரொளியேதுய்யவனேஇந்தத்
துன்பப்படவைத்தாயேஇறையோனே

முன்னேநகரிழக்கச்செய்தாயேபின்பு
மூர்க்கக்கள்ளர்பறிக்கச்செய்தாயே
மன்னருடனேவியரும்புதல்வருமுன்னாள்
வன்கொலைகள்செய்ததுண்டோஇறையோனே

எத்திமுடைமைகளையெடுத்தோமோஇப்போ
எல்லைதப்பிநடந்திருந்தோமோ
சத்தியந்தப்பிநடந்தோமோபொல்லாத்
தாறுமாறுகள்செய்துஇருந்தோமோ

அன்னைதந்தையர்கட்குஅரும்பிழைசெய்தோமோ
ஆர்க்குமனநடுங்கவைத்தோமோ
இந்நிலத்திலெளியோரையெதிரிகளாக்கிக்கொண்டு
ஏதேனும்துன்பஞ்செய்திருந்தோமோ

காட்டைக்கடந்திப்போதகன்னுக்கெட்டாத்தூரம்வந்தும
கானகமாயிருப்பதல்லாற்கரைதுறைகளொன்றுமில்லை
நாடுமில்லைநகருமில்லைநாமிருக்கோர்தலமுமில்லை
நாங்களிதற்கென்னசெய்வோமிறையோனே

வாழுமுலகத்திலுள்ளமனிதர்கள்சஞ்சாரமில்லை
வகையேதுமாயலைந்தலைவோமோ
எழைபாலேமெத்தமாலேமெங்கள்தலைவிதியால்
என்னசெய்வோமிந்தவினைக்கிறையோனே

வலையினிற்பட்டமான்போல்வாடித்தவிக்கிறோமே
வன்மையுடன்காத்தருள்வாய்குமானே
தொலைதூரம்நடந்துவந்தும்தொன்னகாங்காணவில்லை
பசிபமுந்தீரவில்லைஇறையோனே



என்னசெய்வோமேதுசெய்வோமிறையோனேயிப்போ
எங்கள்வயிற்பசிக்குதையோஇறையோனே
அன்னைதந்தையில்லாதஅரும்பொருளாகுமானே
ஆதாரப்பொருளேயல்லாவே

பொதுவிருத்தம்.

இப்படிப்புலம்பியேழ்வரிறங்கியோரிடத்திருக்க
ஒப்பிலாத்தந்தைதாயாருற்றிடும்பசியால்வாட
அப்பாசுராசன்கண்டுஅவர்கள்தன்பசியைத்தீர்க்க
ஒப்பியேவிடையும்பெற்றுஉணவுதேடுதற்குச்செல்வான்

இதுவுமது—விருத்தம்.

உணவதுதேடுதற்குஉற்றதோர்புரவியேறி
மணமுடன்கானகத்தில்மான்மரைகிடைக்குமென்றுக்
கணத்தினிற்காடுதோறுங்கடிதுடத்திச்செல்ல
இணக்கமாய்மான்களொன்றுபோகமாய்மேயக்கண்டான்

வசனம்.

அதோதேப்படியென்றால் கானகத்தில் மூவரும் புலம்பி நடக்கும்
போது பசியகோரமாயுண்டானபடியால் ஒருமரத்தினிடத்தில் அவரவர்
கள் குதிரையைவிட்டிறங்கியிருக்க அந்நேரத்தி லப்பாசுமன்னன் தாயுந்த
கப்பனும் பசியால்வருந்திப் பாதகிப்பதைப் பார்த்துமனஞ் சகிக்காமல்
அவர்களிடத்தில்விடைபெற்றுக்கொண்டு ஆயுதபாணியாய்த்தன்குதிரை
யின்மேலேறிக்கொண்டு உணவுக்காகஅவ்வனத்தில் மான்மரைமுதலான
துஷ்டத்தேடிப்பார்க்கையில் ஓர்வெளியில்அனேகமால்கூட்டங்களாய்ப்பு
ல்மேய்ந்துநிற்பதைக்கண்டானிஇனிநடக்கிறவிதங்காண்க.

அப்பாசுவேட்டையாடுகிற—தரு-இ-ம்-கல்யாணி-அடதாளம்

பல்லவி.

இந்தவில்லாந்தெதிரோ-மிருகங்கள—ளித்தவில்லுக்கெதிரோ

அநுபல்லவி.

அந்தமதாகவேபிந்தக்காட்டினில்வாழு
தந்திக்காடுகள்மந்தையாளும்

### சாணங்கள்.

குடலைப்பிடுங்கிடுவேன்—எந்தன்வேலாற்
குருதியைத்திடுவேன்
அடல்பெறுமானினங்களோகூடிநிற்குது
அம்புதொடுக்கவேகும்பலாயோடுது — இந்த

சிங்கங்கள்மேய்கிறது-அதைக்கண்டு
செந்நாய்கள்பாய்கிறது
பங்கமில்லாமலேபதுங்கிபோரமானது
பரிவாகநிற்குதுசரியம்புஎய்திட — இந்த

மாட்டிபோரம்பதனை-அப்பாசும்
மானினையெய்திடவே
தாட்டிகமானவிலாயதிற்றைத்திட
தள்ளாடுமானினைமுன்வள்ளலுஞ்சென்றிட — இந்த

### பொதுவிருத்தம்.

மானினையெய்தபின்புமன்னனும்அப்பாஜேந்திரன்
தானதைப்பிடிக்கவெண்ணித்தனிவாசிவிட்டிறங்கி
கானமாய்மான்முன்செல்லக்கடுகியேகாட்டிவோட
நாணமாயதைத்தொடர்ந்துநாற்றிசைதிரிந்தான்றே

### இதுவுமது.

நாற்றிசையலைந்துபார்த்தும்நாடுமானகப்படாதால்
பார்த்திபனப்பாஜேந்த்ரன்பரிநின்றவிடத்தில்வந்தான்
காத்திடும்பரிகாணாதால்கலங்கியேதேடும்போது
பார்த்திபரகம்மதுசாபாரியின்வாறுசொல்வாம்

### இதுவுமது.

இப்படியப்பாசேந்த்ரனுமிற்பரிதேடும்போது
ஒப்பியேகாட்டிற்சென்றவுயர்மகன்வாராதாலே
செப்பியதந்தைதாயுஞ்செல்வனைநினைந்துவாடி
மெய்ப்புளமனமுநொந்துமெலிந்துமேபுலம்பலானார்

### வசனம்.

அதோதெப்படியென்றால் அப்பாசுமன்னன் தன்கையிலிருக்கும் வில்லிலே அம்பைப் பூட்டித் தனித்துநின்ற மானின்மே லெய்



து அதின்விலாவிற்கணையாய்ந்து சோர்ந்துநிற்கப்பரியைவிட்டுக் கீழிறங்கிப்பிடிக்கப்போகையில் அதுகானகத்திலோடிப்போக அதன்கூடத்தொடர்ந்து நாற்றிசையிலும் அலைந்து திரிகையில் மான்மறைந்துபோய் விட்டது பின்புராசன்தன்குதிரையிருந்தவிடத்தில் வந்துபார்க்க அதுவுங்காணாமற்போய்விட்டது அதைத்தேடிக்கொண்டுதிரிகையில் அவர்தந்தையிருவரும் காட்டிற்போனமகனைக்காணோமென்றுபுலம்புகிறவிதங்காண்க.

### தந்தைதாய்புலம்பல்—தரு—இ—ம—சம்பை—அடதாளம்.

அம்புவில்லும்கைபிடித்துஅரும்புரவியேறிச்சென்ற
அழகுபசுங்கிளியேஎங்களப்பாசுமகனே

இங்கேயிருந்தகொன்றெங்களுக்கியுசொல்லி
எங்கேபோனாயோஎழிற்பொருந்துமகனே

ஒண்டியாய்ப்பரியேறியுயர்வனத்திற்சென்றாயே
உன்பசியாறுமருந்துசோர்ந்தாயோமகனே

காட்டிதுள்ளவேடர்கையிலகப்பட்டாயோவென்ன
காரணமோவறியோமோடாகண்மணியேமகனே

குதிரையின்வேகமதாற்குதித்துவிழுந்தாயோவென்ன
கொடுமையோகாமறியோம்குணமுள்ளவென்மகனே

பால்போன்றமதிமுகத்தைப் பார்ப்பதெப்போதங்கள்
பருவனம்போய்வாவென்றுபகர்ந்தாயேமகனே

காலக்கொடுமையோவையோகலிகாலத்தின்வினையோ
கண்மணியேயிதென்னகாரணமோமகனே

வலைகளைத்துச்சித்திரங்கள்தாவெழுதும்வண்ணம்போல
துரையேயுன்னால்நாங்கள்வாழ்வேறுபடாமகனே

அதிபெறகுமானேஅல்லாவேயெங்களிட
அருட்புதல்வனுன்னுடைய அடைக்கலமேகண்டாய்

ஏகபெரியவனோவிறையவனோவிப்போது
எங்கள்மகனிங்குவந்துசேரவுந்தருதவி

### பொது—விருத்தம்.

அரசனுமனைவியாருமப்பாசைக்காணோமென்று
இறையவனிடத்தில்துவாஇறங்கியேகேட்கும்போது
மறைந்தமான்பரியைத்தேடிமைந்தனும்காணாத்தாலே
பொருந்தவோடிச்சோர்ந்துபுரம்தந்தைதாய்முன்வந்தான்

இதுவுமது.

வந்தோர்மகனைக்கண்டுமன்னனுமனைவியாரும்
இந்தவனோமாகவர்புரவியுமில்லாமல்
சந்தோஷமாகத்தாய்சாற்றெனவிவர்கள்கேட்க
சொந்தமாற்றுந்தந்தைக்குச்சொல்லினானடந்ததெல்லாம்

வசனம்.

இவ்விதமாக அம்பாசனும் அவர்மனைவியும் மகன்வரக்காணேமே என்று புலம்பிப்பரிதவித்து மகன்வரவேண்டுமென்று அல்லாவிடத்திற் றுவாக்கேட்டுக்கொண்டிருக்கையில் மானையும்பரியையுந்தேடிப்போன அப்பாசகானுக்குதல் சம்பமனைவருத்தத்தோடுதந்தைதாய்முன்வர அவர்கள் இவ்வளவு நாமசமென்னமகனேயென்று கேட்க காட்டில்நடந்தசவிஸ்தாரமுழுமையும் இவர்களுக்குச்சொல்லியபின்நடக்கிறவிதங்காண்க.

பெர்றுகலித்துறை—தரு—இ—ம்—பந்துவராளி-சாப்புதாளம்

தந்தையுந்தாயுந்தனயன்சொற்கேட்டுத்தயங்கியப்பால்
அந்தவனத்தைவிட்டப்புறஞ்செல்லமெனவிளைந்து
தந்தம்பரியினைத்தாம்தேடிப்பார்க்கக்காணமையினால்
இந்தக்குதிரைகள்நம்மைவிட்டுப்போனது

இதுவென்னகாரணமோ—தருமனே
இதுவென்னகாரணமோ
இதுவென்னகாரணமோ-ஏகபெரியவனே
எங்கள்குதிரைதனை-வதைசெய்தது  இது

இதுவுமது.

தொல்லுலகாளும்பெருமையெல்லாந்தமையாச்சுமந்து
எல்லைபதானகரைவிட்டுக்காட்டிலேகச்செய்தாய்
நல்லமறையும்புவியிலுள்ளார்க்குநாடிச்செய்த
வல்லவனேயெங்கள்

மனநோகச்செய்பலாமோ-தருமனே
மனநோகச்செய்பலாமோ
மனநோகச்செய்பலாமோ—வல்லபெரியவனே
இனமாயிம்மூவரையும்-இந்தத்துயரமதாய்  மன



இதுவுமது.

விதியேமகன்றான்தெரியாமற்கனியையுண்டதற்கு
பதியைவிட்டுத்தானைத்தில்லாப்பகருங்கள்ளர்
சதிசெய்யக்குதிரைத்தாநோகச்செய்தாய்தனைமையதோ
முதியவனம்விட்டுமுறையே

மூவரும்கால்நடையாய்—தருமனே
மூவரும்கால்நடையாய்
மூவருங்கால்நடையாய்-தாவிநடக்கவின்னம்
என்னகுறைவருமோ—இறையேநாங்களறியோம்  மூவ

பொது—விருத்தம்.

இருந்தகோட்டைத்தைவிட்டெழுந்துமேநடக்கும்போது
வருந்தியேமூவர்தாமும்வல்லவன்றனையேவேண்டி
பொருந்தியேகாப்பாயென்றுபொறுமையாய்ச்சொல்லும்போது
கரிந்திடுஞ்சுரவனந்தைக்கண்ணினாற்கண்டாரன்றே.

வசனம்.

அதோதெப்படியென்றால் இவர்களிருந்தவனத்தைவிட்டுக் காட்டில் நடக்கும்போதுஅல்லாகுத்தஆலாவைக்கெஞ்சிப்புகழ்ந்துகொண்டு போகும்போது பாலவனத்தைக்கண்டு நடக்கிறவிதங்காண்க.

மூவரும்பாலவனம்போகிற—தரு

சொண்டிச்சிந்து—இ—ம்—புன்னாகவராளி-ஏகதாளம்.

கண்டார்சுரவனத்தை-மனக்
கவலைப்பெருகக்கல்புருக
விண்டாரேயொன்றுக்கொன்று-இந்த
மேதினியிற்சுரவனமிதென்று
பார்த்தார்திசையெங்கும்-புகை
படருநெருப்புப்படர்ந்தெரிய
நாற்றிசையெங்குமே-வேனில்
நண்ணியதண்ணீர்போற்றோன்ற
பாம்பின்படத்திலுள்ள-எலி
பதுங்கியிருக்கின்றபான்மைகண்டார்

தேம்பியமானதுதான்-புவி
சென்னியின்கீழ்த்தலைவைத்துநிற்க
இந்தப்படியுளதைக்-கண்டு
ஏங்கியேசோர்ந்துநடக்கையிலே
வெந்தொடுங்கிநிற்பதினால்-கள்ளி
வேதாளம்போலேபெருநிரில்நிற்க
சோதித்தோர்தனைத்தடுத்தோர்-மனம்
கொடிதிலும்பெரிதானசுரமிதுவாம்
அடுத்தானைக்கெடுப்பவர்போல-அங்கே
அந்தமாய்வெந்தசிலமரங்கள்
சூலாயுதக்காளி-அருகில்
சூழ்ந்தேவற்செய்திடும்சிலபேய்கள்
பாலைவனமிதென்று-பாரும்
பகரிடவவர்மனங்கருகிடுமாம்
முகிலேழும்பெய்யாத-காத
மூன்றுள்ளதானவரண்டசுரம்
அகிலத்துள்ளவர்கள்-வந்தால்
அவதிகள்பட்டிடுமந்தச்சுரம்
இந்தக்கொடுமைகண்டு-மூவர்
ஏகிநடக்கையிற்றுகமுண்டாய்
வெந்தகள்ளிக்கட்டையின்கீழ்-இவர்கள்
வீற்றிருந்தாரிளைப்பாறுதற்கு-தன

பொதுவிருத்தம்.

கள்ளியின்கீழிருக்குங்காவலன்றந்தைதாயும்
உள்ளமேநொந்திருக்கவுண்மையப்பாசும்பார்த்து
விள்ளுவாரவர்களுக்குவேகமாய்நடந்தோமாகில்
அள்ளுநீரிருக்குஞ்சோலையம்பதிகாணலாமே

இதுவுமது.

அறிவுளமகன்சொற்கேட்டு அன்புடன்தந்தையாயார்
முறையுளமகனைப்பார்த்துமுதலவனெழுத்தின்வண்ணம்
குறையிதுமவுத்தாஞ்சொன்னேன்சுரத்தினிநடக்கோமென்ன
அறைகடலெனவேவாய்விட்டழுதுஅப்பாசும்சொல்வார்



27

இதுவுமது-சொச்சகம்.

தந்தையரேதாய்மாரே தன்தோளிலேறுவீரேல்
எந்தவிதமுஞ்சுமப்பேன் விரைவோடுதவியினால்
அந்தமுடனடப்பேனென் றுரைந்திடுந்தன்பிள்ளைசொற்போல்
சொந்தமகன்றோளேறத் துயரமுடனடந்தனனே

வசனம்.

அதேதெப்படியென்றால் பாலைநிலத்திலுள்ள சேர்மேனைமகளையெல்லாங்கண்டு பதறிநடக்கையில் வெய்யலின்சூட்டினால் கால்கள்கொப்புளிக்கத்தாகமுமேலிட்டு வெந்தெரிந்தகள்ளிக்கட்டையின்கீழ் நிழலுக்கிருக்கத்தந்தைதாயிருவரையும்பார்த்து நடக்கப்போவோமென்று அப்பாசுசொல்ல அவர்கள் இந்தவனத்திலேயே மயக்கமாகிப்போவோம் இனிநடக்க எங்களால்முடியாதென்று சொல்ல அவர்களை அல்லாவுதவியால் நான்சுமக்கிறேன் என்தோளிலேறுங்களென்று அப்பாசுசொல்ல அதுபோலேயிருவரும் சம்மதிக்க அவர்களையேற்றிக்கொண்டு துயரத்துடனே நடக்கிறவிதங்காண்க.

அப்பாசுபுலம்பல்-தரு-இ-ம்-எதுகுலகாம்போதி-அடதாளம்.

தோளின்மிசைதாய்தந்தையையேற்றி-நான்
துயரமுடன்நடக்கஎன்றன்விதியோ
சூழிருகுழலசும்போற்றுகின்ற-என்
அன்னைதந்தைதனைச்சுமந்தேன்விதியோ

தேசமெல்லாமாண்டிருந்தோம்நாங்கள்-இந்த
தீபெரியுஞ்சுரத்தில்நடக்கவிதியோ
ராஜராஜரெனச்சுமந்தார்பதியில்-இப்போ
நான்சுமக்கஎன்தலைவிதியோ

பஞ்சணைமெத்தையில்நடந்தபாதம்-பொல்லாப்
பாலைவனந்தனில்நடக்கவிதியோ
கொஞ்சுபரியேறிச்சென்றநாட்போய்-இந்த
கொடுஞ்சுரத்தில்நாங்கநடக்கவிதியோ

ஆதியறிவானம்மிடபொருத்தம்-இப்போ
ஆருடன்சொல்வோம்நமதுவருத்தம்
ஏதுசெய்வோமென்றுசொல்லிநடக்க-ராசன்
இருநாலாயிடறிவிழுந்தனனே

பொது-விருத்தம்.

புலம்பியப்பாசுமன்னன் போற்றிடுந்தந்தைதாயைக்
கலக்கமாய்ச்சுமந்துசெல்லக்காலிற்கல்லிடறிவிழ
வலப்புறந்தாயுநல்ல மன்னர்மற்றோர்பால்விழுந்து
நிலத்திடையெழுந்துபிள்ளை தனைப்பார்த்துப்புலம்புவாரே

இதுவுமது-கொச்சகம்.

இம்பொழுதுதான்கலங்கி யலறிவிழும்பாலரிட
முன்பில்வந்துதாய்தகப்பன் மோகமுடனேயெடுத்து
மென்புடனேமூர்ச்சையதாய்ச் சிரமகனைக்கண்டேங்கி
அம்பொன்மயிலாளு மாசர்புலம்பினரே

வசனம்.

அகோதெப்படியென்றால் இவ்விதமாய்த் தாய்தகப்பன் எங்களால் நடக்க முடியாதென்றுசொல்ல அப்பாசுமன்னன் தாயையொருதோளிலு ம் தகப்பனையோர்தோளிலு மெடுத்துச் சுரத்தில் நடக்கையிற் காலிற்கல் லிடறித்தவறிவிழத்தோளிலிருந்த இருவர்களும் ஆளுக்கொருபக்கத்தில்வி ழுந்து எழுந்து மகன்விழுந்ததைப்பார்க்கையில் மூர்ச்சையாயிருப்பதைப் பார்த்துப் புதல்வனைத்தூக்கி இருவரும் புலம்புகிறவிதங்காண்க.

தந்தைதாய் புலம்புகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

மூர்ச்சையாகியமகனைத்-தாயார்
முகர்ந்துமுகர்ந்துக்கொண்டு
பேச்சொன்றுங்காணோமென்று-கலங்கிப்
புரண்டுவுருண்டழுதாள்

மனையழுததினால்-அந்த
மாதகாகமதுசா
தனதுமகன்தனையே-யெடுத்துத்
தழுவியழுதுசொல்வார்

என்னைச்சுமந்தாயே-மகனே
யிடறிவிழுந்தாயே
முன்னில்விழுந்தவிதம்-எனக்கு
மொழியவுங்கூடாதோ

கண்ணிருகண்மணியே-ராச
இளஞ்சிங்கமேமதியே



பொன்னிலவுமணியேஇதுவென்ன
புதுமைபாய்வந்தவிதம்

வாயைத்திறக்காயோ-ஒருமொழி
வார்த்தைகள்சொல்லாயோ
தாயென்றுந்தந்தையென்றும்-இருகண்ணும்
திறந்துபாராயோ

இப்படிதாய்தகப்பன்-இருவரும்
ஏங்கியேதானழுது
செப்பனைத்தான்றொழுது-மகனை
நீகாத்தருளுமென்றார்

அழுகொளிபாபமென-அப்பாசு
அரசனெழுந்திருக்க
தளதளென்றன்னையுதாமுகம்-ரண்டும்
தாமரைமலர்போன்றதே

பொது-விருத்தம்.

தன்மகனெழுந்ததைக்கண் டவர்தந்தைதாயாராகி
தன்னையேபுகழ்ந்துபோற்றித் தானெழுந்தொன்றுப்க்கூடி
வன்னியின்சுரத்தைநீக்கி மாமுள்ளவனத்திற்செல்ல
அன்னைதாகத்தாற்சோர அப்பாசுஉரைப்பான்

வசனம்.

அகோதெப்படியென்றால் மகனையெடுத்துப்புலம்புகையில்மூர்ச்சை தெளிந்து அப்பாசு எழுந்திருக்க அதைக்கண்ட தந்தைதாயிருவருமகிழ் ந்து மூவருங்கூடிச்சுரத்தில் நடந்துசென்று மரங்கள்செடிகளுள்ள காட் டிற்போகையில் மதியாது தண்ணீர்தாகத்தால் சோர்ந்ததை மகனிடத் துச்சொல்லுகிறவிதங்காண்க.

அப்பாசுசொல்-விருத்தம்.

எந்தனைப்பெற்றதாயே யியல்புள்ளதந்தையேகேள்
அந்தமாய்த்தண்ணீர்கொண்டு அன்புடன்வாரமட்டும்
இந்தநன்மரத்தின்கீழே யிருந்திடும்பதனமாக
டந்தமாயிவ்வனத்தில் பயமொன்றுமில்லாமற்றான்

வசனம்.

அகோகேளுங்கள் என்னைப்பெற்றதாய்தந்தையரே உங்கள் தாகந் தீர்க்காகத் தண்ணீர்கொண்டுவருகிறவரையில் இந்தக்காட்டிற்பயமில்லாம ல்இந்தமரத்தின்கீழிருங்கள் தாய்தந்தையரே.

அவர்கள் சொல் வசனம்.

அப்படியே யிருக்கிறோம் அல்லாவுக்கினியால் சீக்கிரம்போய்வருகுவாய் எங்கள் கண்மணியான புதல்வனே.

பொது—நொச்சகக்கலிப்பா.

அந்தமரத்தினிழலி லன்னைதந்தையர்களிருக்க
சுந்தரவப்பாசுமன்னன் சொருசாய்ச்சலமெடுத்து
வந்துஇருவருக்கும் வழங்கிடவுந்தான்குடித்து
சிந்தைகளிரிந்ததன்பின் செழும்பசியால்தந்தைசொல்வார்

இதுவுமது—விருத்தம்.

பசியதுதீர்வதற்குப் பார்த்திபனப்பாசேந்திரன்
விசையதாய்வனத்திற்சென்று மேவுகாய்கனிபறித்து
அசைவுள்தந்தைக்கீய அதையவர்புசித்துவீழ்ந்து
திசைபுகழ்மனைவிமைந்தன் தியங்கியேபுலம்புவாரே

வசனம்.

அதேதெப்படியென்றால் தண்ணீர்தாகத்தால் சோர்ந்ததாய்க்கு அப்பாசு தண்ணீர்கொண்டுவந்துகொடுக்க அதைக்குடித்து தாகந்தீர்ந்திருக்கையில் அகம்மதுசா பசிக்களைதீரும்சோர அதுகண்டுவனத்திலுள்ள காய்கனி இலைகிழங்குகள் பறித்துவந்து தகப்பனுக்குக்கொடுக்க அதைத்தின்றவுடனே அதுகளில் எதோவிஷமுள்ளவஸ்துக்கள் பட்டிருந்ததால் களைத்துவிழுந்தார் இதைகண்டு அவர்மனைவியும் புதல்வனும் புலம்புகிறது விதங்காண்க.

மனைவியுமகனும்புலம்பல்—தரு—இ—ம்—நாதநாமக்கிரியை—ரூபகதாளம்.

இருசிறத்துமசியபங்கி-ராசன்—சீழ்விழுந்திருக்கிறதை
அருகிருந்தமனைவிமகன்—கண்டு—அறநொந்து புலம்பிச்சொல்வார்

தின்றிடுங்கனிகாய்களில்—விஷம்—தீவினையாயிருந்ததாலே
உண்டவுடனிம்மயக்கம்—ஆகி—உழன்றுவிழுந்தார்பூமியில்

என்றனிநாதியிடம்—இருவர்—இருகையையுமேந்திநின்று
ஒன்றுருவுமில்லாதோனே—பார்க்கு—முகந்திரும்பசெய்பவனே

உருகிநெஞ்சமொருநினைவாய்-நெஞ்சம்—உற்றஅடியார்கள்துயர்
பெருகிட்டுத்தொலைப்பவனே—என்றும்—பெரியவனேகாத்தருள்வாய்

எங்களுக்குஇந்தவிதி—வாரா—திறையவனேகாத்தருள்வாய்
மங்களமாய்மூவர்களும்—ஒரு—மாநகரம்போய்ச்சேர்ந்து



இன்பமுடனுட்களித்து—எங்கள்—எழில்நகர்க்குப்போய்ச்சேர
நம்பினோர்க்குதவிசெய்வாய்—எங்கு—நடுமறப்பிலாமனே

இப்படியாய்மதியமாதாம்—நல்ல—எழிலப்பாசுமன்னவனும்
ஒப்புமறுமாரிடத்தில்—இருவர்—உகந்துதுவாக்கேட்டிடவே

ஆதிசன்கிருபையாலே—அப்போ—அகமதுசாசோர்வுநீங்கி
ஒதுதுயிலெழுந்தவர்போல்—எழுந்—துற்றிருந்தவிவர்கள்கண்டார்

பொது—விருத்தம்.

எழுந்திடுமசர்கம்மை வந்திளமகனுங்கண்டு
விழுந்துசோர்ந்திருந்ததற்கு விபரமென்னென்றுகேட்க
வழங்கிடாதொன்றுமிப்போ வல்லவன்விதிவசத்தால்
தழுந்துமேமன்னனில்வீழ்ந்து தயங்கியேயெழுந்தனென்றார்

இதுவுமது.

வந்ததொன்றறியேனென்று மகனையுமனையாள்தன்னை
அந்தமாய்க்கட்டிக்கொண்டு அழுதுபின்னிதனைச்சொல்வார்
இந்தநல்வனத்தில்நாமு மிருந்திடலாகாதென்று
விந்தையாய்க்காட்டைவிட்டு வெளிவெளிப்செல்வதானார்

இதுவுமது.

விட்டெழுநாள்நடந்து வெளியிலேகும்போது
பட்டிருக்கயவெலாம்போய்ப் பண்புடன்செழுத்திம்மோர்
பட்டணமெதிரிற்கண்டு பட்சமாய்நடந்தங்குள்ள
மட்டிடச்சொலக்கூடாதோர் மண்டபந்தன்னைக்கண்டார்

இதுவுமது.

எதிரொருமடத்தைக்கண்டு இறையோனைப்போற்றிசெய்து
அதிலினாவுடனேசென்று அம்மடந்தனிலிறங்கி
மதியகமதுசாசொந்த மனைவியுமைந்தரோடும்
விதிபெனவிருந்தாரிப்பால் விளைந்தவாறெடுத்துரைப்பாம்

வசனம்.

அதேதெப்படியென்றால் காட்டினிடத்தில் தாகந்தீர்ந்தவுடனே அகம்மதுசா பசியாற்சோர்ந்திருப்பதைப்புதல்வன்கண்டு அக்கானகத்திலுள்ள பாண்டுபலாதிகள் சருகுமுதலானவைகளைக்கொண்டுவந்துகொடுக்க அதைப்புசித்தவுடன் சோர்ந்ததைக்கண்டு மனைவியுமகனுங்கேட்க அதியின்விதியொன்றறியேனென்று அவர்சொல்ல மூவரும் அக்கானகத்தை விட்டெழுந்து அந்தமார்க்கத்தை விட்டேழுநாள்நடந்து வெளிசமியாயுந்த

ண்டி வருகையில் இவர்களுக்கெதிரே ஒருவனம்பொருந்தியநகரத்தைக்க ண்டு அதினுட்போய் அங்குள்ள ஒருமண்டபத்திற்றங்கியிருந்து அவர்க ள்நானகத்திறபட்டவிதிகளை நினைந்துகொண்டிருகையில்மேல் நடக்கிறவி தங்காண்க.

பொது-கொச்சகம்.

அந்தமடந்தனிலிருந்த அன்னைபிதாவும் பசியால்
நொந்துமனம்வாடிநிற்க நோக்கியப்பாசிதுரைப்பார்
இந்தநகருட்புகுந்து யிரந்தாவதுவொஜீபனங்கள்
தந்திடுவேனுங்கள்பசி தணிப்பேனென்றெழுந்தனனே

வசனம்.

அகோதேப்படியென்றால் இந்தப்பிரகாரம் மடத்திலிருந்து விதியை நினைந்துகொண்டிருந்த அப்பாசினுடைய தந்தைதாயிருவருக்கும் பசியாயிருக்குதென்று அந்நகரத்துக்குப்போய் ஏதாவது ஒஜீபனம்வாங்கி வருகிறேனென்று இவர்களுக்குச்சொல்லிவிட்டுப் புதல்வனெழுந்தவிதங் காண்க.

அப்பாசுஉணவுக்குப்போகிற-தரு.

இ-ம்-நாபி-ரூபகதாளம்.

எழுந்தேமனந்தெளிந்தே-மடங்கடந்தேமெள்ளநடந்தே
இந்துபோலழகுடந்த சிந்துவிலிருக்குந்தெருக்கண்டார்

கண்டார்பிரியங்கொண்டே தெருச்சென்றுஅங்கேநின்றார்
கருத்தாய்ப்பொருவிதத்தாய்ப லவைக்கண்டேமொழிவிண்டார்

ஐயரேபுகழ்மெய்யரே வளரன்னையேபுகழுமன்னரே
அஞ்சதேபசியிருந்தேகொண்டுவாருமேவதாந்தாருமே

அன்னமேபிவ்வர்ணமேவுபர் சொர்ணமேபசிக்கன்னமும்
அட்டிபண்ணுமலெட்டியேவந்து அள்ளியேதாருமுள்ளதே

மங்கையேகுயிலின்சொமொழி நங்கையேஎன்தங்கையே
வாடுதேபசிநீடுதேகொண்டுவாருமே எடுத்தாருமே

இந்தநகரப்படி அந்தந்தத்தெருவெங்கும்வீடெங்கெங்கும்
கட்டிபேகவுதட்டியேகொண்டேகினார்தெருவாகினார்.



பொது-விருத்தம்.

சிந்துவின்தேசமெங்குந்திரிந்தலைந்தப்பாசென்போர்
உந்தியிற்பசிகட்கானவுணவுகளகப்படாமல்
சிந்தைநொந்துசோர்ந்துதெருவிலோர்மனையின்முன்பாய்
வந்துநின்றிரந்துகேட்கமன்னன்முன்கிழவிவந்தாள்.

இதுவுமது.

ஆரெனக்கிழவிகேட்கஅதற்குஅப்பாசுசொல்வார்
பாரினில்பிதக்கிறேன்றன்பசிக்குணவளிப்பாயென்ன
நேர்பொறுக்கிழவியன்னம் நிரம்பவேதானுங்கொடுக்க
தாரணியார்பன்வாங்கித் தந்தைதாய்முன்வந்தாரே

இதுவுமது.

வந்திடுமப்பாஜேந்த்ரன் மகிழ்தந்தைதாயிடத்தில்
அந்தநல்லன்னமாடை யவர்கள்தன்னிடத்திலிய
மைந்தருந்தாமுமுண்டு மகிழ்ந்துநித்திரைகள்செய்ய
அந்தநல்லிரவுநீங்கி யருணனுமுதித்ததன்றே.

இதுவுமது.

சூரியனெழுந்துதோன்றச் சுதனப்பாசன்னைதந்தை
சேடிவணங்கிக்கூலி வேலைகள்செய்துநானும்
சேர்பெறவாங்கிவாரேன் செறியுடனிருமென்றோதி
நேர்பரிகரியுலாவுந் தெருக்களின்தோறுஞ்சென்றார்

வசனம்.

இவ்விதமாக அப்பாசுமன்னன் சிந்துமாநகரில் உள்ளதெருக்களிலெல்லாம்போய் வீடுகள்தோறும் பசிக்குஅன்னங்கேட்க ஒருவருங்கொடுப்பாரில்லாமல் ஒருவீட்டிலுள்ள கிழவியிவனைக்கண்டுவினவி மெலிவுருவுகளெல்லாங்கேட்க இவர்தன்னுடைய பூர்வோத்தமெல்லாஞ்சொல்ல அந்தக்கிழவிகேட்டு மூவருக்குந்தகுந்த ஒஜீபனமும் ஆடையுங்கொடுக்க அதைவாங்கிக்கொண்டுமண்டபத்திலிருக்குந் தாய்தந்தையிடத்திற்கொடுக்கமூவரும் உணவைத்தின்று ஆடையையுடுத்தி இரவில்நித்திரைசெய்து சூரியனுதயமானவுடனே யெழுந்துதாய்தகப்பனிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டு அந்நகரில் ஏதாவதுகூலிவேலை யகப்படுமென்று போனவிதங்காண்க.

அப்பாசு-வேலைக்குப்போகிற-தரு.

அடாணா-பைரவி மிச்ரதாளம்.

சிந்துவின்தேசத்தெருவினிலப்பாசரசனும்-சென்று
செப்புவார்மெய்ப்புடன்அப்போது தான்செயும்வேலையை

அந்தமாய்ப்பூச்செண்டு தந்திரமாச்செய்வேனுருமே-மெய்க்க
மங்கையர்கொங்கைகளிசைந்தப்பேன்தந்துபாருமே

முத்துருச்சுக்கட்டுவேன் சித்ரவேலைகள்செய்குவேன்-ஆர்க்கு
மோகிக்கும்படியானவாசச்சந்தனப்பொடிசெய்குவேன்

அன்புடனவைரேனுந்தென்பாய் வேலைகளிடமாச்செய்கிறேன்-மத
யானைபோலெதிராடுஞ்சேனைமன்னவன்ரியுமட்க்குவேன்

அஸ்திரவிதிசந்தனமர்த்தமாலைகள்பலசெய்குவேன்-ராசர்க்
காசனமாகியயோகசிம்மாசனம்செய்குவேன்

பாராசாரிமட்டத்தேறி நடனஞ்செய்துதிருப்புவேன்-தேச
மகாராசமைந்தர்க்கு அதிகக்காழிவித்தைவருத்துவேன்

பூராயமாகப்பலப்பல்வித்தைப்பொருத்துவேன்-மனப்
பிரியமானவெனக்குச்சரிபானவேலைகள்தருகுவீர்

பொது-விருத்தம்.

இப்படித்தெருக்கள்தோறு மியலமைமதுசாமைந்தர்
மெய்ப்புகழானவேலை விசுவிதஞ்செய்வோமென்று
தப்பறக்கேட்கலூரார் தாமிவர்தம்மைநோக்கார்
அப்பொழுதங்கோர்திண்ணைதனிற்போய்ப்படுத்திருந்தார்

இதுவுமது.

படுத்தபோகலையாலே பலபலவெண்ணங்கொண்டு
இடிக்குமேகமேலுமீறி பெய்திலநித்தைசெய்யும்போது
கடுங்காற்றுமின்னலோடு கன்மழைபெய்வதாலே
அடரும்மாசாளிவந்தப் பாசுபாரிருந்ததன்றே

இதுவுமது.

இருந்தராசாளிகூவ எழுந்தித்திரைவிழித்தப்பாசு
பரிவுடனதைப்பிடித்துப் பார்த்திபன்தந்தைதாய்முன்
விரைவுடன்கொண்டுசென்று விபரங்கள்சொல்லவப்போ
அருமையப்பாசியைப்பார்த் தவர்கள்விற்பனைசெய்யென்றார்

இதுவுமது-கொச்சகம்.

தந்தைதாய்சொல்லதனைத் தன்சிரத்தின்மேற்கொண்ட
மைந்தனப்பாசமன்னன் வயிரிதனைக்கையிலேந்தி
சிந்துநகர்வீதியெங்கும் திரிந்துவிலைகூறிச்செல்ல
அந்தநகராளரசன் அருகமகட்டியக்காரன்வந்தான்



வசனம்.

அதோதெப்படியென்றால் அப்பாசமன்னன் அந்நகரிலுள்ள தெருக்கள்தோறுந்திரிந்து சகலவேலைகளும் செய்வேனென்று சாமர்த்தியஞ் சொல்லஅவ்வூரிலுள்ளவொருவராகிலும் வேலைசெய்யும்படியாய்ச் சொல்லாததால்மனவியாகூலத்தினால் ஒருவீட்டுத்திண்ணையின்மேல்படுத்துநித்திரைபோகையில்கடுங்காற்றுமின்னலோடு மழைபெய்கிறசமயத்தில் ஒருராசாளிப்பறவையானது அகம்மகதுசாபுதல்வன் அப்பாசின்மார்பில்வந்துட்கார்ந்துகூவ அப்போது அவர்விழித்துப்பார்த்து அல்லாருசபுமானுக்குத்தாலாநமக்குக்கொடுத்த பொருளென்று தந்திரமாகக்கையிற் பிடித்துக்கொண்டு தன்தந்தைதாயிடத்திற்கொண்டுபோய் அதுகிடைத்தவாற்றையுஞ்சொல்லிக்காண்பிக்க அவர்கள்புதல்வனைப்பார்த்து இதைவிற்றுவந்தால்நமக்குணவாகுமென்றுசொல்ல அந்தச்சொல்லைச்சிரமேற் கொண்டு சிந்துநகர்வீதிகள்தோறுஞ்சென்று விலைகூறிநிற்கஅவ்வூரையாளும் தாபீதுராசனுடைய வாசற்கட்டியக்காரன்வருகிறவிதங்காண்க.

கட்டியக்காரன்வருகிற-தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி.

கட்டியக்காரன்சபைதனில்வந்தானேசொல்லுமுன்

அநுபல்லவி.

அட்டதிசையிலுள்ளஅரசரெவரும்போற்றும்
மட்டிலாக்கீர்த்திபெற்றமன்னன்தாபீதுவாசல கட்டி.

சரணங்கள்.

செந்திருநிறத்தான்-புஜபல-சுந்தரமுகத்தான்
சந்திரன்போலவேவந்தவிவன்வதனம்
அந்தமாயெவர்க்குமினிதுகள்பேசிடும் கட்டி.

மருமலர்புயத்தான்-பொருந்திய-விரைமலர்காதத்தான்
தரணியையாள்கின்றதாபீதரசனிதோ
துரையாய்வருகிறார்நிரையாயிருக்கவென்று கட்டி.

சென்னிபிற்றலைப்பாய்-ஒளியுடன்-சிறப்பாகவைத்து
கன்னல்வில்லினைக்கிடும்இன்னகர்சிந்தில்வாழ்
மன்னன்தாபீதுவாசல்முன்னின்றிருந்துகாக்கும் கட்டி.

கட்டியன்சொல்-விருத்தம்.

வந்துநின்றசபையோர்கேளீர்மாநகர்சிந்துதேசம்
சொந்தமாயாளுகின்றதுரந்தரதாபீதேந்தன்

இந்தநற்கொலுவில்வாராரெவர்களுமொன்றாக்கொண்டு
சந்தடிசெய்யாமற்றுஞ்சகலருமிருந்திடரே

வசனம்.

அகோவாருங்கள்சபையிலுள்ளோர்களே இந்தநகரையாளும் மகாராஜஸ்ரீ தாபிதுமன்னர் ஒருமிப்பித்திருகொலுவுக்குவருகிறார் இங்குள்ளசபையோர்களொன்றாக்கொண்டு சந்தடிசெய்யாமலிருக்கக்கடவீர்களென்றுசொல்லிக்கொண்டு

இராசன்கொலுவுக்குவருகிற-பொதுவிருத்தம்.

கட்டியக்காரன்வந்துகனசபைபுளோர்க்குச்சொல்ல
மட்டளர்மாலைமார்பன்மகிபன்தாபீதுமன்னன்
பட்டவர்த்தனர்கள்சூழப்பரிவுடன்செங்கோலேந்திச்
சட்டமாய்மந்திரியோடுதான்கொலுமேவினாரே

வசனம்.

அகோசெப்படியென்றால் கட்டியக்காரன் சபையிலுள்ளோர்களை எச்சரிக்கையாயிருக்கும்படிக்குச்சொல்ல இந்தத்தேசத்தையாளும் இராஜபராக்கிரமமுள்ளதாபிதுராசர் மந்திரிமுதலியபட்டவர்த்தனர்கள் சூழ்ந்துவர செங்கோலேந்தியவனாகக் கொலுவிலிருக்க வருகிற விதங்காண்க.

இராசன்வருகிற-தரு-இ-ம்-தன்னியாசி-அடதாளம்.

வேந்தர்வேந்தரெவரும்போற்ற-வேதவேதியர்கள்வாழ்த்த
சாந்தமனமுள்ளோர்சென்ற-தாபீதர்சர்கொலுவில்வந்தார்
பூணையர்கள்கவரிவீச-பூச்சக்கரக்குடைபிடிக்க
காவலர்மருங்கிற்சூழ-கன்னன்தாபீதுராசர்வந்தார்
நவரத்னப்பாதைபோட்டு-நறுமலர்பூவைகூட்டி
கவறிலாயலங்கிசூட்டி-தாபீதராசர்கொலுவில்வந்தார்
மந்திரிமார்மருங்கிற்சூழ-மன்னர்மன்னர்வணங்கித்தாழ
கந்தருவப்பெண்கள்வாழ்த்த-காவலர்தாபீதுவந்தார்
பலபலவிருதுகூற-பாவாணர்கவிகள்கூற
நலமதிலுள்ளோர்கள்போற்ற-தாபீதராசர்கொலுவில்வந்தார்
மன்னவர்முடிபணிய-மாதாகனராத்திபேந்த
கன்னியர்நடனஞ்செய்ய-கருத்துடன்தாபீதுவந்தார்

பொதுவிருத்தம்.

கொலுவில்தாபீதுவந்துகுணமுடன்வீற்றிருக்க
வலுமன்னர்மகிழ்ந்திருக்கமங்கையர்நடஞ்செய்போதில்
வலிமைராசாளிதப்பிப்போனதைமன்னருக்குச்
சொலவென்னிக்காவலாளர்தோன்றினார்கொலுவிற்றனே



வசனம்.

அகோசெப்படியென்றால் இந்தமாநகரையாளும் தாபீதுஅரசன்மந்திரிபிரதானிகள் சூழநடனமாதர்கள் நாட்டியஞ்செய்ய நீதிசெலுத்திக்கொண்டிருக்கிறவேளையில் தானதிகப்பிரேமையாய் வளர்த்தராசாளிப்பட்சி இருந்தவிடத்திலில்லாமற்பறந்துபோய்விட அதைக்காத்திருந்தகாவலர்கள்திடுக்கிட்டேங்கி அரசனிடத்திற்சொல்லவருகிறவிதங்காண்க.

காவலர்கள்கொலுவுக்குவருகிற-தரு-இ-ம்-கலியாணி-அடதாளம்.

காவல்காப்பவர்கள்வந்தார்-சிங்காசனக்
காவல்காப்பவர்கள்வந்தார்
காவலர்தாபீதுமன்னர்-மேவிராசாளிபோக
அவலோடுசொல்வதற்குச்-சேவகவிருத்திசெய்யும் காவலர்
கையினிற்கத்திதுலங்கவே-இடுப்பதனிற்
கட்டியக்சையிலங்கவே
வையகம்புகழ்தாபீது-மன்னவனிடத்திற்சொல்ல
ஐயமிகப்பெருகி-யலறியுளறிக்கொண்டு காவலர்
துள்ளியநடையுந்தாழவே-மீசைமுறுக்கும்
சுழன்றுமிகவுஞ்சோரவே
கள்ளர்போலேபயந்து-கடுகடுப்பில்லாதசைந்து
வள்ளல்சமுகம்வர-வாடிப்பாதவித்துக் காவலர்
தாபீதராசர்முன்சென்று காவற்காரர்கள்
தணிந்துபணிந்துபணிந்துநிற்கவே
கூவிராசர்பார்த்து-கூடிவந்தவிதமென்ன
தாபமதைச்சொல்லுமென்று-கோபமதாயராசன்கேட்க காவலர்

இராசனுக்குக்காவலாளிகள்-போற்றிவிருத்தம்.

எங்களைப்பாதுகாக்குமேகமன்னவரேபோற்றி
சங்கையாய்நாங்கள்வந்துசாற்றும்விண்ணப்பங்கேளீர்
தங்கள்தன்மனதிற்கேற்ற தக்கராசாளிப்பட்சி
கங்குலிற்பறந்துபோச்சுகாணாதால்சொல்லவந்தோம்

வசனம்.

கேளுங்களரசர்களெல்லாம்போற்றிப்பணியாநின்ற அல்லவேலெங்களைப் பாதுகாக்குமன்னவரே நாங்களுங்களிடத்தில் வந்துசொல்லும் விண்ணப்பத்தைக்கேட்டு மனம்பொறுக்கவேண்டும் எங்களைக்காக்கவேண்டியது அது என்னவென்றால் நாங்களதிகசாக்கிரதையாய்ப் போக்கிடத்தைக் காவல்காத்துக்கொண்டிருக்கையில சற்றுநேரத்திற்குமுன்னால் காற்றுமழையில்லாவிடியாயிருக்கின்றவேளையில் உங்களிருதயபொருந்தியராசாளிப் பட்சி இன்னவிதமாய்ப்பறந்துபோனதென்று தெரியவில்லை அதன்சங்கதியைத்தங்களுக்குத்தெரிவிக்கவந்தோம் இதுதானெங்களுடைய விண்ணப்பம்

ப்பிடித்துக்கொண்டுவரச்சொல்லுகிறீர்களோ அதுபோலேகட்டக்காத்திருந் தோம் இராசாளியாகியதவலுந்தே.

இராசன்காவலாளிகளுக்குச்சொல்-விருத்தம்.

நாடாகாவலோர்களேயிந்தவிபசமந்தங்கள்
நீதமோநீங்கள்சொல்லுங்கோளமையாம்பட்சிதன்னை
சாதமாகத்தேடிச்சாதியும்கொண்டுவாராவிட்டால்
காதையுமறுத்திரண்டுகண்ணையும்பிடுங்கச்செய்வேன்

வசனம்.

நடாவடாகாவலர்களே நீங்கள்சொல்லுகிறதைப்பார்த்தால் மிகுதி யுமென்மனம்பதறுகிறது ஒருநிமிஷத்தில் இந்தநகரமுழுதிலும் காடுகளி லும்மரங்களிலுந்தேடிக்கண்டுபிடித்து அதிசாக்கிரதையாய் வரவேண்டி யது அப்படிக்கொண்டுவாராவிட்டால் உங்கள்காதுகளையுமறுத்துக்கண் களிரண்டையும்பிடுங்கிக் காட்டில்துரத்திவிடுவேன் காவல்காப்பவர்களே

காவலாளிகள்-வசனம்.

அப்படியேதேடியதிசாக்கிரதையாய்க்கொண்டுவருகிறோம் அன்ன லாகியராசயோகமணியே

காவலர்கள்-போகிறது.

இ-ம்-ஆதி-சாப்பு தாளம்.

கண்ணிகள்.

இந்தவிதம்செய்வதென்னசெய்வோம்-ஏதுசெய்வோமென்றுசொற்று
அந்தரத்திலேடியடித்து அவதிதலையில்விழுந்தாற்போலே

அன்னவன்சொற்படியேநாமுமிந்தநகரந்தேடுவோமென்று
கன்னப்பட்சிதன்னைநாய்கொண்டுவாராவிட்டால்

இக்கணந்தான்கிடைக்குமிந்தஅவதிக்கென்னசெய்யப்போறோம்
சாக்கிரதையாய்ப்போவோமென்றுதனிதனிநகரச்சுற்றிப்பார்த்தார்

பார்த்துமெங்குங்காணோமென்றுஇவர்கள்-பாதவிதத்துவருகையிலே
ஆதிமாப்போயிடத்திலே-பட்சியை-அப்பாசம்விலைகூறிநிற்க

கண்டார்கள்காவற்காரர்-வளைவைக்-கைப்பிடியாய்ப் பிடித்துக்கட்டி
கொண்டுசென்றுயிந்நகர்க்-கோற்றவன்முன்விட்டுநின்றார்

பொது-விருத்தம்.

படர்பதிகாவற்காரர்நாசர்முன்னே அப்பாசைக்காவலர்கள்விட்டுநி
ற்பப்பட்சியுடன்கண்டராசன்தானும் சிந்தைமகிழ்ந்தோர்வசனஞ்சொ



ல்லுகிறார், இடம்தப்பிப்போனபட்சியைக்கண்டவுடனே மிச்சிருவனைக் கட்டிக் கொண்டுவாரும், படபடனெச்சொல்லுமெனக்காவலோர்கள் பார்த்திப னைப்பார்த்திருந்தபடிசொல்லுகிறார்.

வசனம்.

அதிசயமெப்படியென்றால் இராசாளியைக்கொண்டுவாராதபோனால், இத்தனைசெய்வேனென்றுஅரசன்சொல்லக் காவலாளிகள்கேட்டு மிகவும் பிரலாபித்துஅந்நகர்முழுவதிலும் பட்சியைத்தேடிப்பெசாரிற் ஒருதெரு வில்வரும்போது அகமதாராஜபாரன் அப்பாசென்பவர் பட்சியை விலை கூறிநிற்கையில் கண்டுபிடித்து அவரையடவேபட வேடிக்கைப்படியாய் இழுத்துக்கட்டி இராசாளியையும் அப்பாசையும் தாயிராசன்முன்கொண் டுவந்தோம்-அவர்குருவிளைப்பக்கண்டு மகிழ்ந்து அப்பாசுமன்னனையுங்கண் டு குருவிவந்ததையும் இவனைக்கட்டிக்கொண்டுவந்ததையும்சொல்லுங்களெ ன்றுகாவலர்களைக்கேட்க அவர்கள்சொல்லுகிறார்கள்

அரசருக்குக்காவலர்கள்சொல்-விருத்தம்.

அன்னாலேசொன்னதேநேங்களாக்கினைப்படியேசென்று
இந்நகர்முழுவதும்தேடிவேங்கிபெல்லாருக்கும்போது
மின்னலவன்னைபட்சிதன்னோடிரவிலேகூறக்கண்டு
அன்னவன்தன்னைக்கட்டியடைவுடன்வந்ததாமே

வசனம்.

தேருங்கலெங்கணாட்சிக்குமடியான ராசயோகமணியே தங்களா க்கினைப்பிரகாரம் நகர்முழுதிலுந்தேடிப் பட்சியைத்தேடிவருகிறபோது இங்கேயிருவன்இராசாளியைவிலைகூறக்கண்டு இவனைப்பிடித்துக்கட்டிக் கொண்டுவந்துவிட்டோம் தயவுதந்தருள்வாயராசமேருவே

பொதுகொச்சகம்.

காவலர்கள்சொன்னதெல்லாம்கருத்திலுன்னிவரசர்
தாவியப்பாசைப்பார்த்துத்தனிபாசர்தாம்நினைத்தார்
சோபிகுலகம்மதிசாகுதல்வேற்றெங்கெவருக்குசெகன்று
துவசுடன்காவலரையவிழுமென்றார்கட்டதனை

இராயமந்திரி-விருத்தம்.

கட்டதையவிழ்க்கச்சொல்லக்காவலரவிழ்த்தபின்பு
பொட்டெனத்தாவிசேர்ந்தன்புடனப்பாசினைப்பார்த்தன்றன்
பட்டணமிருப்புமெங்கேயகப்பட்சிதனைத்தவிர்க்கவே
இட்டெவச்சொல்வாயென்னாத்தீரனுஞ்சொல்வதானான்

வசனம்.

அஹோ தெப்படியென்றால் இவ்விதமாகக்காவலர்கள் தாவீதரசனுக்குச்சொல்ல அப்பாசைப்பார்த்து இவன் அந்தமாநகரையாளும் அகமதுசாபுதல்வன்போலிருக்கிறது ஏதோவொருவிதியால் இவ்விடம்வந்திருக்கிறான்போலிருக்கிறதென்று யோசித்துக்காவலரைப்பார்த்துக் கட்டியகட்டைச்சவுக்கையவிழ்க்கச்சொல்ல அவர்கள்கட்டையவிழ்த்து அப்பாசுசபாவமாய்நிற்கையில் அந்நகரத்தரசன் இவனைப்பார்த்துநீயிருக்கிறபட்டணமெங்கே உன்தாய்தகப்பன்பேரென்ன நீயிவ்விடம்வந்தவரலாறென்ன நானருமையாய்வளர்த்த இந்தராசாளிப்பட்சி உன்கையில்வந்தகப்பட்ட விபரமென்னவென்றுகேட்க அப்போது அப்பாசுமன்னன் தன்வரலாறும் பட்சிவந்தவரலாறும் சொல்லுகிறவிதங்காண்க.

அப்பாசு-தாவீதுமன்னனுக்குச்சொல்-அகவல்

இ-ம்-காம்போதி.

தன்மையாயுலகாள்தாவீதுமன்னன்
வன்மையப்பாசின்வரலாறுகேட்க
அன்னவன்வரலாறனைத்தையுஞ்சொல்லித்
தன்னிடதாயுந்தந்தையாமிருவரும்
மன்னியமடத்திற்சேர்ந்தவிருக்கும்
தன்மையுஞ்சொல்லித்தனியப்பாசேந்தான்
கொடும்பரியதனுக்கூலியாளாய்
நெடும்பதிதன்னில்நின்றலைந்ததுவும்
அன்றிராத்திரியிலல்லலுநினைந்து
ஒன்றியதிண்ணையிலுறங்கிடும்வேளையில்
கவ்வமில்லாமற்கனமழைசொரிய
எவ்வனப்பட்சிவந்தென்மார்பிலிருந்து
கூவிடவிழித்துக்கொண்டேனென்மெள்ளத்
தாவியேயதனைத்தான்பிடித்தேதந்
தந்தைதாயிடத்திற்றான்சொன்னதற்கு
விந்தையாய்விற்றுவாவெனச்சொல்ல
அதுபோற்பசாரிலவசரமாக
அதுமெனவிற்கக்கண்டகாவலர்கள்
பிடித்தெனைக்கட்டிப்பேசாதும்பேசி
அடிக்கவெனைக்கொணர்ந்து அருஞ்சபைவிட்டார்
இதுவலாறென்றிசைக்கத்தாவீது
பதியுறுமன்னர்பிறபலரையுமனுப்பி
அகமதுசாவையுமவர்மனைவியையும்
தகைமையாயழைத்துத்தாம்வாருமென்ன
சென்றனர்சிலபேர்செயமடந்தனிற்போய்
கண்டுடனழைத்துக்காவலர்முன்விட



தாவீதுகண்டுதழுவியேயிருவரும்
ஆவலாய்ச்செயமதைவிசாரித்து
ஏகமாயெழுந்தனரெழிலரண்மனைபோய்
பாகமாயன்னம்பரிவுடன்புசித்து
உண்டுகளித்துவொருமையாயிருக்கையில்
பண்பினைவிரியாற்பகருமப்பாசு
மன்றல்காரிகைமகிழ்வுடன்பார்த்து
இன்றுயிசய்பொருமெழிற்பரிவாளும்
என்றுந்தகப்பனையிடாகவைத்துத்
தந்தருப்புவிசேர்தனிநகர்க்கேகிச்
சிந்தையிலெணப்போற்செயமதுபெற்று
வந்தநான்திரும்பியென்மாநகர்செல்கிறேன்
அட்டிநீர்செயாமலனுப்புமிசகில்
இட்டம்போல்நடப்பேனந்தவேளையென்றார்

பொது-விருத்தம்.

அப்பாசினைக்கண்ணைப்போலவ்வூராளும்
அரசன்தாவீதுமன்னன்றான்றெண்ணி
செப்பருமாயிரம்பொன்னும்வாளுமீந்து
திரன்விடைகொடுத்திடத்தாய்தந்தையர்வில்
நட்புடனேசென்றுவருஞ்சேதிபாவர்
கனிந்திடவுமவர்பயக்கிவிடைகொடுக்க
ஒப்புடன்பரியேறிநகர்கடந்து
ஒண்டியதாயொருவழியிற்செல்கின்றானே

வசனம்.

அஹோதெப்படியென்றால் சிந்துதேசத்தையாளும் தாவீதரசன் ஒருகுதிரையையும் நிதிதாக்கொடுத்த ஆயிரம்பொன்னும் பரியும் வாளுமெடுத்துக்கொண்டு அவரிடத்தில்விடைபெற்றுவந்து தந்தைதாயிடத்திற்சொல்ல அவர்கள்மிகவுமபயங்கித்தியங்கித் தேறிவிடைகொடுத்தனுப்ப அப்பாசுமன்னனப்பரியிலேறி அந்நகரைக்கடந்து ஒருவழியில்நடக்கிற விதம் காண்க.

அப்பாசுமன்னன்பரிமேலேறிப்போகிற-தரு-இ-ம்-சுருபதி - ஆடதாளம்

அந்தமாநகராளும் அகமதுசாபெற்ற
அழகுமகனப்பாசு அரும்புரவிமேலேறி
சிந்தைகளிகூர்ந்திடவேசெபவாளும்பிடித்து
திரவியமுங்கைக்கொண்டுசென்றுவழிநடந்தார்

வழிநடந்துபாலைவனமார்க்கமதாய்ச்சென்று
வல்லமையுள்ளமலைகளிடைபார்க்கத்தனையுங்கடந்து

வெள்ளிகொல்லாக்கட்டுந்துயிர்துகாதவழிநடந்து
வேகமுடன்டக்கைநீலார்மேன்படத்தைக்கண்டார்

அந்தமடத்தனிலிறங்கியங்கிருக்கும்போது
அருட்சித்துரகர்க்கரசன்அதந்தில்மோசம்கிளைந்து
முந்தவொருநடித்தமங்கைமூர்க்கமதாகமூழ்கி
முனையுளசேவகன்கையில்முறையாகக்கொடுக்க

பார்த்திபனப்பாசுசெல்வழியிற்றொடர்ந்து
பற்றியவனருகிற்சென்றோர்பக்கமதாயிருந்து
பயத்துக்கடிதத்திருக்கும்படியாகச்செய்யென்று
பகர்ந்துபரிகொடுத்தனுப்பப்பாதையிற்சென்றனனே

பொதுவிருத்தம்.

கடிதத்தைவாங்கிக்கொண்டுகடுமையாய்ச்சேவகன்றான்
விடுபரியதனிலேறிவிரைவுடன்பாதைசென்று
அடல்பெறுமப்பாசேந்தரனிருந்தமடத்திற்கேகி
திடப்பரிவிட்டுதங்கித்திசைமுன்போயிருந்தான்

இதுவுமது—விருத்தம்.

வந்திடுஞ்சேவகனைப்பார்த்தப்பாசுதான்
வாலாறுசொல்லெனவேயவனுஞ்சொல்வான்
முந்தவொருநகரமுண்டதற்குப்போக
முனைந்துவரும்போதிரவுவந்ததாலே
இந்தமடந்தனிலிருந்துவிடிந்தபின்பு
ஏகுவேனென்றுசொல்லவிருவோருந்தான்
சந்தேகமில்லாமற்படுத்துக்கொள்ள
தனியவன்றுயிலதனைதானுவண்டார்ச்சே

இதுவும்பொதுசொச்சகம்.

அன்றிரவில்மண்டபந்திலரசனுஞ்சேவகனுமாய்
ஒன்றுங்கொன்றுபேசியுறங்கிருக்கனிறையருணால்
மண்டலமெல்லாமதிரமழைக்காற்றதிர்ச்சியினற்
சென்றடித்துத்தள்ளியதுசேவகனோடேபரியும்

இதுவுமது—விருத்தம்.

விடிந்தபின்னப்பாசேந்திரன்விழித்திருந்தவன்காணுதான்
அடர்ந்தவன்சோளிப்பைதாவவிடத்திலிருக்கக்கண்டு
வடிவதாயெடுத்துக்கொண்டுவாம்பரியதனிலேறி
இடமுளவொரிடத்திலிறங்கிச்சோளிப்பைப்பார்த்தான்



35

இதுவுமது-கலித்துறை.

பார்த்திடுஞ்சோளிப்பையினுள்ளேயிருந்தபழியோலைதனை
கோர்த்திபதாகவேவாசித்துப்போதநினைவையெல்லாம்
பூர்த்தியதாயறிந்தேயதைப்பாழ்ங்கிணற்போட்டுவிட்டு
ஆத்திரத்தோடேபரியேறிச்சென்றனனரசர்க்கே

வசனம்.

அதேதெப்படியென்றால் இந்தகேசத்தையாளும் நாகேந்திரசக்ரேசுவரன் பெருமிக்கொடுத்தகடிதத்தைவாங்கிச் சேவகன்சோளிப்பையிலேவைத்துக்கொண்டு ஒருகுதிரையின்மேலேறி விசையாய்நடந்துஅப்பாசிருக்கும் சத்திரத்திற்போய்க்கண்டு ஒன்றுங்கொளாதுகேளாமலேயிராவு தங்கிப்போகலாமென்றுசொல்லிச் சந்தேகமில்லாமலிருக்க ஒல்லைச்சேவகன் தனித்துப்பார்த்து அதுபோலே செய்யலாமென்று யோசித்திருக்கிறவேளையில் அல்லாவினிடத்தில் உதவியால் காற்றுமழைப்பிரவாகத்த வேகத்தினால் குதிரையையும் சேவகனையும் நீட்டித்துச் செடுத்தெறிந்துபோட்டது அவ்விரவில் அப்பாசுக்குங்குதிரைக்கும் துன்பமொன்றுமில்லாமற் படுத்திருந்து விடிந்தவுடனே இவர்காடிவந்திருக்குமிடத்திற்குப்போக எழுந்திருக்கையில் சேவகனுடைய சோளிப்பையாதிரமிருக்கக்கண்டு அதை யெடுத்துக் கொண்டு பரியின்மேலேறிச்சிறிதுதூரநடந்து ஓரிடத்திலிறங்கிச்சோளிப்பையை விழித்துப்பார்க்கையில் ஓருஓலைச்சுருளிருந்தது அதையுடைத்துப்பார்க்கையில்அதம்மதாசாமகன் அப்பாசைநீவெட்டாய்வெட்டிப்போட்டு எனக்குராத்தக்குறியாணிக்கவேண்டுமென்றிருந்தது அதைக்கண்டபகதி ஆண்டவனைப்புகழ்ந்து அந்தக்கருவோலையைக்கிழித்து ஒருபாழுங்கிணற்றிற்போட்டு ஒருகாரம்போய்ச்சேர்வேனென்றுவன்னி நடக்கிறவிதங்காண்க.

அப்பாசுபாதைநடக்கிறவண்ணத்தரு

இ—ட்—ராசகாமக்கிரியை - அடதாளம்.

பரிமையதடத்திச்செல்ல-ராசன்
பந்தடிச்சொன்றுகளுந்தரபெருமிபிட்
டுந்திடத்திடச்சென்றனலசிர
பரிமையைநடத்து-ராசன்
எழுபெயசித்திடவாடிநடந்திட
நாடியநகரைத்தேடிச்சென்றிட
மேப்புமரக்கடந்தே—அங்கு
வண்டநற்புதங்கள்கண்டுபயந்திட
நின்றடிநழுந்திடச்சென்றதேநாயாறை

பாதைதனில்நடக்க-ஒரு
பட்டணக்கண்ணெதிரெட்டியதால்கண்டு
இட்டமதாய்ச்சென்றபட்டமதாய்நின்றார்

பொது-விருத்தம்.

நின்றிடுமப்பாசேந்திரன்சேரினில்வருமோர்தன்னை
அன்றுயிவ்வூர்பேரென்னசொல்லெனச்சினதேசம்
என்றவர்சொல்லக்கேட்டெழிசைசனிக்கோரத்தில்
வென்றிடைப்பரிநடத்திவருகவவ்வூரார்கண்டார்

இதுவுமது.

ககனுளவாறும்பெண்ணும்ராசனைப்பார்த்துச்சொல்வார்
செகமதிலிவரைப்போலேதிரனைக்கண்டதில்லை
தருமென்றுஅவர்கள்சொல்லததயனப்பாசுமுன்பில்
யனையுடனோர்கிழவிவந்தனள்வீதிதன்னில்

வசனம்.

அதேதெப்படியென்றால் ஒலைக்கருளைக்கிணற்றிற்போட்டவுடனே பரியின்மேலேறிக் காடுமேலைகள்வனம்யனைந்திரங்கள்கடந்துவருகையில் பூதப்ப சாசகளோடும்படியாயதிவேகத்துடனே நடந்துசேர்ந்து பாலைவனமுதலிய அம்நடந்து ஒருநகரம்போய்ச்சேர்ந்து அங்குள்ளவர்களாலிதுதேசமென்றறிந்து அப்பாசுதன்குதிரைமேலேறி இடசாரிவலசாரிவருகிறதை அந்நகரிலுள்ளஆண்பெண்கள் கண்டுஇவருடையஅழகுக்கு எந்தராசாக்களும்சரியல்லவென்றுசொல்லிப்புகழ்ந்துநிற்கையில் இவருக்கெதிரே ஒரு கிழவிவருகிறவிதங்காண்க.

கிழவிவருகிற-தரு—இ-ம்-சேஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

கிழவியும்வந்தாளே—அம்மையாரெனும்—கிழவியும்வந்தாளே

அநுபல்லவி.

கிழவியும்வந்தாள்
பழையவளாம்ஒரு
வளைகள்பூட்டியே
உளவுகள்சொல்லிட. கிழ

சரணங்கள்.

சோறும்தன்கையிற்
குலுக்கியேமிக
பிடித்து—உடலைத்
தடித்து
வாலிபன்பரிதனில்வருமவேலதிரதனில்
சாலமிகவுரைக்கும்தாயெனமுநின்றிடும் கிழ

எந்தன்மகனே
எங்கேபோறு
யின்று-கீதாகா
பென்று



சொந்தமாயெனக்குவந்தனிபாம்தன்னை
இந்தவேளைதன்னிலேபம்பிடுமேயன்று கிழ

கரைத்ததலையும்
நடக்கையிலே
நீக்க—இருக்…
…டுக்க
உரைத்திடுஞ்சொல்லினுளமதாலெர்டுந்த
உன்னிதஅரசன்றன்றயரினைத்தொலைக்க கிழ

பொதுவிருத்தம்.

கிழவியைக்கண்டப்பாசுகிருபையாயழைத்துச்சொல்வார்
தளர்பசிதீர்ப்பயாளுற்றக்கபொன்தாறேனென்றான்
பழமையாய்நிவாந்போலப்பட்சமாயிவரைக்கூட்டி
வளர்மனைக்கழைத்துப்போயிமன்னனுக்குணவுதந்தாள்

இதுவுமது-கொச்சகம்

பசியாறித்தாம்பூலம்பராசன்றின்றபின்பு
கொசியதாய்ப்பொன்னீந்துகோதில்கிழவியைப்பார்த்து
வசிநகர்தனிலேதும்வளமையுண்டோவெனக்கேட்க
நிசமொழிகளம்மையரும்நிகழ்ந்துவாளாசருக்கே

வசனம்.

அதேதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் அப்பாசுமன்னன் பரியேறிச் சினமாநகரத்தெருவீதியில்வரும்போது மிகவுமவப்புமுறு முள்ள ஒருகிழவி யிவருக்கெதிரில்வர அவளைக்கண்டு பசிக்குவுதாவது உணவளித்தாயானால்அதற்குத்தக்கபொருள்தருகிறேனென்றுசொல்ல அக்கிழவிமுன்பின்பழகினவளைப்போல் பரிவாயவரைக்கூட்டிக்கொண்டு தன்வீட்டிற்குப்போய் ஒரு வாழைதலைதாம்பூலமும்கொடுக்க அதுகளைத்தின்றுஇவ சந்தோஷப்பட்டு அவளுக்குத்தகுந்தபொருளும்கொடுத்துக் கிழவியைப்பார்த்துஇந்நகரிலேதாவதுதிசயமுண்டோவென்றுகேட்க அதற்கவள் சொல்லுகிறவிதங்காண்க.

கிழவிஅப்பாசுமன்னனுக்குச்சொல்கொச்சகம்

இந்நகரிலதிசயத்தைபெண்மகவேசொல்கிறேன்கேள்
மன்னன்பருவிசராசன்மகள்மெர்பான்பெண்ணொருத்தி
அன்னியதேசத்திலுள்ளஅரசரைத்தான்போக்கொன்ற
கன்னியவளழகுதனைக்காழவென்றனாலாகாதே

வசனம்.

கேளாயென்மகனேயிந்நகரத்தில் அதிசயமென்னவென்றுகேட்டாயல்லவா அதென்னவென்றால் இவ்வூரையாளும் பருவிசராசன் தம்பொலத்திலுதித்த மெர்பானென்னொரு பெண்ணிருக்கிறாள் அவளைக்கன்னியாயையைப்பண்ணவேண்டுமென்று அவளை அன்னியதேசத்தாசர்கள்இந்நாடு போந

ச் அவள் சொல்லிய மசலாவுக்குத் தோற்றுப்போக அவர்களைக் கொன்று அ வன்கற்பழியாமல் மிகவும் அழகு சௌந்தரியத்தோடே யிருக்கிறாள் அவளழ கைச்சொல்லிக்கொண்டு வருகிறேன் கேளும் அப்பா.

அப்பாசு சொல்--வசனம்

ஆனால் வாரும் மாதாவே அவளழகு முதலான வசனமெல்லாம் வ ர்த்தமானமாய்ச் சொல்லிக்கொண்டு வாரும் அம்மா

கிழவி அப்பாசுக்குச் சொல்--தரு--இ-ம்--யோகனம்--அடதாளசாப்பு.

பல்லவி.

அவளுக்கு நிகராக அவனிதனி லும் பெண்களாருண்டோ மகனே

அனுபல்லவி.

பவனஆகாயம் இப்பாதாளலோகத்திற்
புவியதனிலொரு பெண்ணைக்காணவோ — அவ

சரணங்கள்.

மேருமலையைப் பார்த்து மிகவேளிதஞ்செயும்
மென்மைசெறியும் அண்டிகுசங்கள்-புகழ்
மெல்லியவள்தொடையழகைக்கண்டொளி
மெலிந்தாமறைந்த தங்கச்சக்கள் கானிவானில்
காருவள் தலைமயிரைக்கண்டொரு
காலமும்மையுமிருசழுங்கிறசம்பென
கூறுமியல்புள்வெட்டுமோ பெண்கள்
கோதைபொளிவைக்காணவேணும் கோடிகண்கள் — அவ

சேலையும் வெல்லுகன்-மேலாம் தலஞ்செய்வோரை
விரட்டியுருக்கும் அண்டி விழிகள்-நல்ல
வேதவாணிமாதின் குயில் கிளிமுதையும்
வெட்கச்செய்யுமவள் மொழிகள்-நடையோ
சோலையன்னங்களைப்பழிக்குமேவி சோரும்
சேயங்களை நிரக்குளிர்தருமவள் காரம்
வாலிப்பருவமின்றுட்ருவைய தானன்டோடி
வழுத்தமைதி பொற்பையவளுக்கவளே சோடு — அவ

வாயில்நிறைந்த பற்கள் முத்தெனவழுத்தலாம்
வளைமுகமிருக்கு தோங்கும்-சொல்லு
வாயென்றுபோதுமோ அவள்தேகாந்தியை
வடிவாமையுமின்தானி பெருகும்புகழ்
உபிகாவுடையசேடனுமாந் சொல்லப்போமே
அவளருளொல்மசலாவையாரும் வெல்லப்போமோ



ஆயவளிதைவைப்பார்த்தோர்க்குச்ச யிப்பேது
நிதிமலைக்குமியென்னச் சொல்லவோ யிப்போது — அவ

வசனம்.

அகோ கேளாய்மகனே இன்னம் அழகுமுதலானவைகளைச் சொல் லவேண்டுமானால் என்றாலும் ஆயிரநாவைப்படைத்த ஆதிசேஷனாலும் சொல்லமுடியாது அப்பா மகனே அப்பாசு

அப்பாசு--கிழவிக்குச்சொல்--விருத்தம்.

கன்னலைப்பழித்த மின்னைக்கண்டோமசலாவாலே
பன்னியே வார்த்தையாடிப் பாரினிற்செயித்துமேலும்
அன்னியமணம்புரிந்து துரிதமாய்ச்செல்வேனார்க்கு
அன்னவளிடத்திற்சேக அம்மாநீசெலவுதாராய்

வசனம்.

கேளும் அம்மாதாயே அப்பேர்க்கொத்த அழகுருபள்ளவள்மாகன பெ ண்ணாளவள் சொல்லும் மசலாவை விடுவித்து அவளையும் நிகாவென்னுங்கலி யாணமுஞ்செய்து என்னகரத்துக்கொண்டு போகும்படியாய் விடைதாரும் அம்மாதாயே

கிழவி-அப்பாசுக்குச்சொல்--தரு--இ-ம்--புன்னாகவராளி--அடதாளம்.

நாரையே அடாமகனே--நான்
சொல்லிடும் வார்த்தையைக் கேளாமல்
வரைசேர்முலையாளை--திரு
மங்கிலியதாரணஞ்செய்திடவே
நடப்பேனென்னச் சொன்னாயே--அந்த
நாரிசொல் மசலாவுக்கிடு சொல்லித்
தப்பாயோ இன்னமும் கேள்--அந்தத்
தையலாள் வந்துதானிருக்கும்
பொன்னணிமண்டபத்தில்--கதிர்
போலவிளங்கும் ஆரியனையும்
மின்னேரிடையாளும்--கொலு
மேன்மையாகவுந்தான் வீற்றிருப்பாள்
முத்தாரம்பூண்ட மங்கை--அவள்
முன்சென்று கண்டவர் முச்செதிவார்
சத்திமதோர்கள் மெத்த--இந்த
காசினிக்கன்னி தும் மிருந்தார்
வடிவானையே சேர்த்திருப்பாள்--தோழ
மன்னவனைச் சின்னபின்னஞ்செய்வான்
குடிகொண்டிருந்திடுவாள்--வாலி
கோதைய வளிடத்தாதாவாய்

அப்பாசெனும்மகனே-அவ
ளண்டையினிற்போனால்மாண்டிடுவாய்
தப்பென்றென்னாதேயென்சொல்நீ
தள்ளிவிட்டவளிடம்போகாதே
மதிக்குவியிலவனே-பொல்லா
மங்கையுமுன்றனைத்தான்செயிப்பாள்
சிறந்தவுலகுதனில்-நல்ல
சேயிழையார்கள்கிடையாதோ ௩௯

அப்பாசுகிழவிக்குச்சொல்-விருத்தம்.

அன்னைபேதேனாய்ஞானமறைருவேனோர்விண்ணப்பம்
தன்னிகரில்லாமாதுதான்சொன்னுமசலாத்தன்னை
மின்னியிலங்கனத்தில்வென்றுமெல்லியைமணமுஞ்செய்து
நன்னயந்தீர்த்திபெற்றுநாவகர்சசெல்வேன்கண்டாய்

வசனம்.

கேளுமம்மாதாயேநீசொல்லுகிறது நிசமேஆனாலும் அவள்சொ
ல்லுகிறமசலாவை ஒருமின்னில்வெட்டி அதுமுன்னேனிடுவித்துவென்று
அவள்கோரிக்கையையுந்தீர்த்து அவளையுங்கலியாணஞ்செய்து என்னகாம்
போய்ச்சேருகிறேனம்மாதாயே

கிழவி-அப்பாசுக்குச் சொல்-விருத்தம்.

மகனேநீயிப்போதென்றன்வார்த்தையைத்தடுத்துப்பேசி
செகம்புகழ்மிர்சாமாதைச்செயஞ்செய்துவருவேனென்றாய்
தகுவையாரேவரும்போற்றத்தையலைமணம்புணர்ந்து
அகமதுமகிழ்ச்சியாய்ப்போய்அன்புடன்வருகுவாயே

வசனம்.

கேளாயப்பாமகனே நான்சொல்வதைக்கடுந்து மிகர்பானிடம்போ
றேனென்றுசேதியாய்ச்சொல்லுகிறாய் ஆகையால் இப்போதுஉன்மன
ம்போலேபோய் அவளைச்செயித்துமணம்புரிந்துவருவாய்அடாமகனே

போகல்-விருத்தம்.

விடைபெறுவாங்கிக்கொண்டுமேவந்தப்பாசுதானும்
நடமிடுபரியிலேறிநன்னகர்விதிசெல்ல
அடைவுடனவ்வூராளுமடல்பருவீரராசன்
கடிமனைவாசல்காக்குங்கட்டியக்காரன்வந்தான்

வசனம்.

அகோஇப்படியன்றால் கிழவியினிடத்தில் விடைபெற்றுக்கன்ப
ரிமேலேறிக்கொண்டு பருவீரராசன் மகளிடத்திற்போவதற்காகத்தெருவீ
தியில் அப்பாசுவருகையில் அவ்வூரையாளும் அரசன்அரண்மனைவாசல்கா
க்குங்கட்டியக்காரன்வருகிறவிதங்காண்க.



கட்டியக்காரன்வருகிற-தோடித்தரு.
இ-ட-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

மாநிலத்திலாமாநகரராசன்வாசல்
வாழுங்கட்டியக்காரன்வந்தான்

அநுபல்லவி.

தேசதேசராசாதிராசர்துதி
சிரன்பருவீரராசனெனப்புகழும் ௪௰

சரணங்கள்.

சிரசினிலணிந்தருள்லாத்தலங்க-மசரஞ்
செறிந்தமுத்துமாலைகளிலங்க
நகரமலர்மாலைகள்கலங்க-மிகுபிரகாச
நன்மணித்தாவடங்குலுங்க
வரையாய்ப்புசகிரகிவழங்க-வெள்ளித்தடியும்
வாள்சமுத்திடுகத்திவரிசைப்பட்டயங்களும்
வழிபெறக்கட்டிப்-புலியெனக்கெட்டி
வலதுகைதட்டி-பொலிவுடன்கிட்டி
வடிவுகொள்சிக்கெனமீசைமுறுக்கிப்
படிமிசைவாழ்பகைவரகத்தையுருக்கி ௪௧

கட்டியக்காரன் சொல்-விருத்தம்.

மன்னர்மன்னர்களேகேளீர்மகாராசராசபோசன்
நன்னயமந்திரியோடும்நற்பருவீரராசன்
சொர்னவாசனத்திருக்கத்தோன்றவும்வருதலாலே
தன்னவரெவராவாலும்சத்தடியிலாதிருங்கள்

வசனம்.

அகோகேளுங்கள்மன்னர்மன்னர்களே மற்றுந்தன்னவர்களே நம்மை
யெல்லாமாளும் பருவீரராசாவும் மந்திரியுங்கொலுவுக்குவருகிறபடியால்
சத்தடிசெய்யாமல்வெகுஎச்சரிக்கையாயிருப்பீர்கள்சபையோர்களே.

இராசன்வருகிற-தரு-இ-ட-புன்னாகவராளி-ஆதிதாளம்

பல்லவி.

பருவீரராசன்வந்தான்-கொலுவிருக்க
பருவீரராசன்வந்தான்

அநுபல்லவி.

தருபாரைப்பழித்தபுகழ்சேரெழிலின்மிக்க ௪௨

சரணங்கள்.

சுவேதச்சப்பாணைசொலிக்கத்-தோளின்மாலை
 நாகமணிபோற்கதிக்க
கவரிகுடைகள்பிடிக்க-வாணர்கள்மிகக்
 களித்துக்கவிகள்படிக்க
புனைத்தரசர்களும்புகழ்ந்துவந்தடிபோற்ற
 புண்யமிகச்செழித்த-விண்ணவர்மகிழ்ந்தேத்த — பரு

மந்திரிபிரதானிசூழ-சேனைத்தலைவர்
 வந்திக்கடியிற்சூழ
சுந்தரமின்னார்களாடவே-சிலமாதர்கள்
 சோபனக்களிபாடவே
அந்தரவிந்திரன்போலராசாட்சிதனைச்செய்ய
 ஆலவட்டம்பிடிக்க-அளகைக்கோனைத்துய்ய — பரு

வாத்தியத்தொனிபெருக-வேதம்புகலும்
 மறையோர்கள்புறம்வருக
மாற்றலர்வந்துபணிய-அவர்கள்மேல்
 வைத்தகருணைசாமந்தணிய
சாற்றுந்நீதிமுறைகளைத்தன்மனதினிலுற்றோன்
 சதுர்வித உபாயதந்திரங்களைக்கற்றோன் — பரு

பொது-விருத்தம்.

மிக்கசினத்தையாளும்பிருபருவீராசன்
தக்கதேசத்திலுள்ளார்தன்மையைக்கேட்கமந்திரி
தொக்கவிவ்வுலகிலுள்ளார்சுகமுடனிருக்குஞ்சேதி
பக்குவமாகநன்றாய்ப்பார்த்திபர்க்குரைசெய்வாரே

வசனம்.

சிலமாநகரத்தையாளும்பருவீராசன் மந்திரிமார்கள் பிரதானிகள் இவர்கள்சூழக்கொலுவிருக்கிறபோது மந்திரியைப்பார்த்து தேசநடவடிக்கையைக்கேட்க அதற்குச்சொல்லுகிறவிதங்காண்க.

பருவீராசனும்மந்திரியும்தேசவிசாரணை

இராசன்-வினா.

சேனிந்திரியேனைகளாருதாளிர்யாவரும்
 செழித்திருக்கின்றார்களா

மந்திரி-விடை.

செயமேவுபுவிராசர்கவிராசரியாவரும்
 செழிப்புடனிருக்கிறார்கள்



இராசன்-வினா.

தாரணியில்மன்னவர்கள்எங்கள்பருதியைச்சேர்ந்து
 தந்துவருகின்றார்களா

மந்திரி-விடை.

தடைசெய்வோரொருவருமின்றிசெங்கோல்முறைப்படித்
 தந்துவருகிறார் மன்னரே

இராசன்-வினா.

கார்பொழிந்திடவயலில்வாழ்குடிகள்பயிர்செய்து
 சுகமுடனிருக்கிறாரா

மந்திரி-விடை.

கன்னனேநின்கிருபையாலவருமறிவோர்
 கடமைதந்திருக்கிறார்கள்

இராசன்-வினா.

வானிந்திரேகரிலெவரேனும்ராசாக்கள்
 இங்குவந்திருக்கிறாரா

மந்திரி-விடை.

ஏகசக்கிராதிபதிபேபரிசிலோராசர்
 ஏறிவந்தார்களரசே

பொது-விருத்தம்.

தேசத்தினியற்கைகேட்ட செயபருவீரசோடு
நேசமந்திரியுநல்ல நிபுணருந்தொழுந்திருக்க
மாசிலாவப்பாசேந்திரன் வையபரியதனிலேறிப்
பாசமாய்த்தெருக்கள்சுற்றிப் பார்த்திபன்கொலுவிலானார்

வசனம்.

அதெப்படியென்றால் இந்தப்பிரகாரம்கொலுவில்பருவீராசர் மந்திரியைத்தேசவிசாரணை கேட்டுக்கொண்டிருக்கும்போது அப்பாசும ன்னன் தன்பரியிலேறி சபைக்குவருகிறவிதங்காண்க.

அப்பாசுமன்னன்பருவீராசன்கொலுவுக்குவருகிற-தரு.

இ-ம்-நாதநாமக்கிரியை-சாப்புதாளம்.

ஒருக்கிழமிசெற்றதனிற்கேட்டுமே
 ஒப்பிலியேசேவும்அப்பாசுராசனும்
சோதிப்பிரகாசமாய்ச்சாதிக்குதிரைமேல்
 சுந்தரமானசந்திரன்போலவே
 தோன்றலுஞ்சென்றார்-பருவீரர்-வாசலதக்கண்டார்

கண்டவாசனுங்கண்டக்குதிரையேற்
காரிடிபோலவேசாரிபிடுகென்று
ஒன்றுந்தெரியாமல்நின்றிடுந்தனை
யோடிப்பாரென்றார்—டிப்பமன்னவர்
உரைப்படிநடந்தார்—குதிரையை—நடத்தியேவந்தார்
வந்திடும்அப்பாசுகந்துகந்தன்னையே
வாரியேசுற்றியேருசையின்காற்றென
விங்கையுந்தகருந்தகுருந்தரி
வெட்டிமையின்பரிநாட்டியருஞ்செய்திட
விள்ளாதிருந்தார்—கொலுமுன்னே—மெள்ளவேவந்தார்
வந்திடும்வேளையிற்சிந்தைமகிழ்ந்து
மந்திரப்பகுவிரதிசயமாமென்று
முந்தியேவந்தவர்சொந்தமகள்மசலா
உரிமையாய்ச்சொல்லுவாரென்றவரெண்ணிட
ஒப்பமாய்ச்சேர்ந்தார்—பகுவிருமுன்—செப்பமாய்ச்சார்ந்தார்
சார்ந்தக்குதிரையைச் சபையில்நிறுத்திய
சதுட்டியிரங்கினோர்திட்டமதாகவே
நான்தானுன்மகள்சொல்லுமசலாவைவிளிக்க
நன்றாகவந்தவனென்றவர்சொல்லிட
நலமாய்ப்பகுவிரு—அப்பாசுக்கு—நன்றாகச்சொல்வார்
சொல்லுக்குகந்திடும் வல்லவர்நீராகித்
தோகைசொல்மசலாவைத்துரிதமாய்விடுவித்தால்
வல்லமருமகனல்லாமாவாயென்று
மன்னவனுரைத்தபின்னவ்விருமென
மகிழ்வாயப்பாசு—மன்னனோடு—மார்க்கமாயிருந்தார்

பொது-நட்டபாக்கலிப்பா.

எந்தகத்தனிலேறியேவந்திடும் காளையாகியவப்பாசுமன்னனை
அந்தவூரினையாள்பகுவிருவும் ஆர்த்தசிம்மாசனத்திலிருந்தியே
சந்தரமாமதிமுகத்தாதியைத் தோன்றலும்மழைத்தேசமிர்பானுவை
இந்தநற்சபைமன்னுந்திரையினில் ஏகிவந்தேயிருந்திடச்செய்கவே

இருவுமதனிருந்தார்.

அரசன்சொற்கேட்டதாதி அன்னமெனநடந்துசென்று
மருசமும்மிகர்பான்பாலில் மங்கையுமதனைச்சொல்லப்
பரிவுடன்மனமகிழ்ந்து பார்ப்பவர்மயங்கிச்சோர
அரிவைபொன்பணிகளாடை யலர்மலரணிவதானாள்

இருவுமது—கொச்சகம்.

ஆடைகள்பொன்னுபரணம் அங்கமெல்லாஞ்சூட்டியபின்
சேடியர்கள்சூழ்ந்துசெய சோபனங்கள்பாடிவர
பாடகச்சிலம்புகொஞ்ச பங்கயக்கைவளையல்மிஞ்ச
கூடுஞ்சபைதனுள் கோதைமிகர்பான்வாரான்



வசனம்.

அதேதெப்படியென்றால் அப்பாசுமன்னனைப் பகுவிரசன் தன்னருகிலிருத்தியபின் அங்குள்ளதோர்தாதியை யழைத்து இந்தச்சபையிலுள் ஒருதிரைமறைவில் என்மகள் மிகர்பானை அழைத்துவந்திருக்கச்சொல்லென்று அரசன்சொல்லவந்தத்தாதியானவள் மிகர்பானிடத்திற்போய்ச்சொல்ல அவள் ஆடையாபரணமுதலான சகலபணிகளுமணிந்து சுகந்தமுதலிய வாசனைகள்நிமிர்ந்து புஷ்பஞ்சூடித் தகப்பனாரிருக்கிற சபைக்குள் அதிகவுல்லாசமாய்வருகிறவிதங்காண்க.

மிகர்பான்சபைக்குவருகிற—தரு—இ—ம்—ராக—ரூபகதாளம்.

பல்லவி.

திகழுமதிவதனஜோதிநயவுலாசமேனிமிகர்பான்வந்தார்

அநுபல்லவி.

புகரிற்பொன்னுபரணம் பூட்டிச்சிங்காரங்காட்ட
புரத்திற்றுதிகள் சொல்லும்புத்திமைக்கேட்டுச்சீராட்ட (திக)

சரணங்கள்.

தக்கச்சிறப்புடையநாலுமசலாவின்
தன்கருத்துரையாமரைக்கூற—படைத்
திக்குமுக்காடவெட்டிச்சிதைத்துப்புவிகுழாட்ட
திக்குமுற்றிலுமெறிந்து—சிங்கம்போற்கெர்ச்சிக்கப்பட்ட (திக)
தாவ்பிடித்ததேபிடியென்று—வருபவரைச்
சாதித்தவர்கள்தம்மையென்று—வல
மாவினமபோற்குதித்து—மதியாதவமதித்து
மாவின்கனைக்குளம்பி மாவிராவென்றேதுதித்து (திக)
மந்திராசன்பகுவிர—னுதவிய
செல்வப்புத்திரியானசுந்தர—மிருந்து
மானத்தலைவசெல்வா மகுவிப்பணியுமந்த
மானசர்க்கரசனப்பாசுதனைமணந்த (திகழு)

பொது—விருத்தம்.

தொத்தமொழியார்கள்சான்றுநிக்கும்சூழ்ந்துவர மிகர்பானுகோதையின்றன், அந்தபகுவிரசன்கொலுமுன்னே அலங்கிருதந்திரையிலுள்ளேயமர்ந்திருக்க, வந்திடும்அப்பாசினைப்பார்த்தரசன் சொல்வானெம்மகள்மசலாச்சொல்வதற்குவிடைவிடையென்ன, சுந்தரஞ்சேர்மன்னர்நல்லதென்றிருக்க கோதைகல்லுரன்கேருயமதாய்ச்சொல்லுவாளே

வசனம்.

அதேதெப்படியென்றால் இந்தவிதமாய்ப்பகுவிரசன் மகள் மிகர்பானென்பவள் கூடியசபையிலுள் ஓர்திரைமறைப்பில் தாதிகள்சூழவந்திருக்கையில் அவள்தகப்பன் அப்பாசைப்பார்த்து என்மகள்சொல்லுமசலாவுக்குப்பிரதியுத்தரம்சொல்லுவீரென்ன அவர்நல்லதென்று சம்மதித்திருக்க அவள்செய்பசுருவத்துடனே சொல்லப்போகிற விதங்காண்க.

மிகர்பான் அப்பாசைப்பார்த்துச்சொல்லுகிறவிருத்தம்.

வல்லவனென்றுமெனன்று வந்தாயிச்சபையின்மேவி
வெல்லுமிவென்னமேவும் வேந்தவேசொல்லக்கேளாய்
சொல்லிசாஸ்திரமும்பொருட்கு மிகுபொருள்சொல்லாவிட்டால்
கொல்லுவேனென்றனாளால் கொள்கையாயெவரும்பார்க்க

வசனம்.

அகோகேளாய்ராசனே இப்போதுஎன்றகப்பன் பருவிராசனும் இசைமன்னர்களுங்கூடியிருக்கிற சபையில் செம்பவல்லவனென்றும் என்னை ஜெயிப்பேனென்றும் கொஞ்சமேனும்பயமில்லாமல் வந்திருக்கின்ற மன்னனே நானுனக்குச்சொல்லுகின்ற மசலாவுக்கு நீர்பொருள்விடுவிக்காமல்போனால் இங்குள்ளயாவர்களுக்குந் தெரியும்படியாய் என்கைவாளினால் உன்னை ஒரேவெட்டாகவெட்டி உயிராவானலோகத்துக்குப் போகும்படியாய்ச்செய்வேன் என்சாமர்த்தியம் உனக்குத்தெரியாதோ அரசனே.

அப்பாசுமிகர்பானுக்குச்சொல்-விருத்தம்.

என்னைக்கொல்வேனென்ற பெண்ணேமயிலேகேளாய்
வந்திலிவிலிவந்தாக்கால் மாந்தர்கள்செய்வார்கள்
உன் கண்ணன்மசலாதனன்னை வுகந்துமேசொல்வாயானால்
உகமாய்ப்பொருளைச்சொல்வே னுமிசன்சிறைபையாலே

வசனம்.

கேளாய் வெகுமன்னர்களைக்கொன்று ஜெயம்பெற்றபெண்ணே இப்போது என்னையுங்கொல்வேனென்றாய் ஆகிலும் உன்கைவாளினாற்கொல்லும்படியாய் விதியிருந்தால் அதுபோல்முடியும் இப்போது நீசொல்லு மசலாவைச்சொல்லுகுல் அல்லாவுதவியினாலே அதற்குப்பயன் சொல்லுகிறேன் பெண்களிற்சிரோமணியே.

அப்பாசுக்கும்-மிகர்பானுக்குந்தர்க்கத்-தரு.

இராகம்-பிலஹரி-திரிபுடைதாளம்.

மிகர்பான்சொல்லல்.

சொல்லென்றசொல்லினுய் வல்லவன்போலவே
அரபிநாட்டைவிட்டுநாடியேவந்திடும்
வல்லவன்போல்மிக வுன்னாவலங்கீர்த
வந்தேயனைத்தீர்த்துகக் கூறிச்சொல்லும்
ப்பவந்திரகன்-சொல்லாவிட்டால்-இப்பக்கொல்வேனுன்

அப்பாசுசொல்லல்.

கொல்லுவேனென்ற குங்குமச்சந்தனக்
கொங்கையின்மூட்பசந்தப்பமேசொன்னது
என் றமிசமையன் அல்லாதாய்வயிற்றினில்
இல்லாதமைதந்தாள் மன்றன்தாய்தந்தையர்
நம்பிடவந்த்ததன்-மசலாவை-யிஞ்சமிநீசொல்லாய்



மிகர்பான்சொல்லல்.

மீண்டேன்னைச்சொல்லென்ற வேந்தவேநீகேளாய்
விளம்பிடுவேனின்னம் லேநேமசலாவை
தாவும்பரியேறி மீண்டிங்கேவந்திடும்
தாட்டிகனேமனங்கேட்டுநன்றாய்ச்சொல்லும்
தாயிருப்பெங்கே-சொல்லாவிட்டால்-நான்கொல்வேனிங்கே

அப்பாசுசொல்லல்.

நான்வதைப்பேனென்று தானேயுரைக்கின்ற
நங்கையேமங்கையே பொங்கமாய்ப்பொருள்சொல்லி
ஆனையினானைத் தாலியுங்கட்டுவேன்
வுண்டுபோடாயிதை நன்றாயறிந்திடு
உடக்குத்தங்கின்மேல்-நானிருப்பது-சுடுத்தமேனிமேல்

மிகர்பான்சொல்லல்.

இன்னமுஞ்சொல்லுவேன் மன்னவனேகேளாய்
இங்கிதமாய்க்கேள்வேன் சங்கையதாகவே
அன்பாய்மொழிகுவேன் துன்பமில்லாமலே
அட்டிபண்ணாமலேகெட்டியதாயிப்போ
ஆர்மகன்சொல்வீர்-சொல்லாவிட்டால்நேர்மையாய்க்கொல்வேன்

அப்பாசுசொல்லல்.

நேருடனேயென்னைக்கொல்செய்வேனென்ற
நேரிழையேசிந்தப்பார்தனிலேயுன்னை
யாரறிவார்பருவிராசன்பெற்ற
அம்பொன்மயிலேகாள் தெம்புடன்சொல்லக்கேள்
ஆதம்மகன்தான்-பெண்ணேயின்னம்-ஒழுலதேன்நான்

மிகர்பான்சொல்லல்.

பெண்ணேயோதுமென்ற மன்னவனேகேளாய்
பேருலகில்நாறாசர்வந்து
அன்னேசருன்னைப்போல் மன்னர்மதிகெட்டு
அவர்களழிந்துவொழிந்ததையறியீரோ
ஆர்வளர்த்தார்தான்-சொல்லாவிட்டால்-நேர்மிளப்பேன்கான்

அப்பாசுசொல்லல்.

நேர்மிளப்பேனென்று ஆரவாரத்துடன்
நீசொன்னப்போதினும் ஆர்சொன்னாலுங்கொல்லேன்
ஆறும்புகழ்ப்பருவிராசன்பெற்ற
அன்னமேசொன்னையேஇவ்வமுதுதெரியாதோ
அல்லாவளர்த்தான்-நாம்வந்தவன்னை-சொல்லாற்சொல்லுங்கான்

பொது-சொர்ச்கம்.

பருவிராசசன்மகள் பகர்மிகர்பான்சொன்மசலாச்
செகம்புகழுமப்பாசு தெளிந்துபொருள்சொலவதினுல்

அகமகிழ்ந்தேயசபொலா மங்கோமெய்திருக்க
மிகமேலிந்துவல்லபெரு மெய்ச்சொர்ந்துசொல்வாளே

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் மிகர்பான்சொல்ல மசீதுக்கு அப்பாசுபொருள்விபேசிக்க அங்குள்ள பகுவிராசனும் மற்றரசர்க்களும் இவ்வாசனக்கப்பிட அரசினையவெல்லுவாரென்று மெச்சியிருக்கவவள் இவனை நாம்வெல்லுகிறது அரிதாயிருக்கிறதென்று செப்பவிசாரத்துடனேயிருந்து தேறிச்சொல்லுகிறவிதங்காண்க.

அப்பாசு—மிகர்பானுஞ்சொல்—விருத்தம்.

சொல்வதைக்கேளுமன்னே தாரிதயாய்விதிதிசெவ்வு
நல்மசலாவைச்சொல்ல நானின்றிவருகுவிரே
வல்லியேயிப்போதுன்றன் வார்த்தையின்படியேசென்று
மெல்லவேவந்துவுன்னை வெல்லுவேன்மானேதேனே

வசனம்.

கேளாய்அரசனே முதலாவது இவ்வளவு மசலாப்போதும் இப்போது உன்னுடையவிதிபோய் நாளைநினைவந்தால் மசலாச்சொல்லுகிறேன் நீர்பொருள்சொல்லலாம்போய்வாரு மன்னனே. அரசன்வசனம் நீசொல்லுகிறபடியே விதிபோய் இங்கேவந்து உன்னைச்செயிக்கிறேன்பார்பெண்ணே

போது-விருத்தம்.

கன்னிபால்தாதிருழக் கசைசபைவிட்டெழுந்து
தன்னரசன்மனைபோய்ச்சேரச் சபையினோர்கலைந்துசெல்ல
அன்னவன்பரியிலேறி யாரையார்விடுசேர
நன்னயக்கிழவிகண்டு நாயகன்பாற்றுவாவிரைந்தாள்

வசனம்.

அகோதெப்படியென்றால் இவ்விதமாக மிகர்பானென்கிறபெண்ணும் தன்னரசன்மனைபோய்ச்சேர பகுவிராசனும் அங்குள்ள அரசர்களும் தொலைந்து அவரவர்விதிபோய்ச்சேர அப்பாசு குதிரையிலேறிமுன்னிருந்தகிழவியிடம்போய்ச்சேர அவள் இவனைக்கண்டு நீதப்பிவந்ததுபோதுமென்று ஆண்டவனிடத்தில் துவாக்கேட்க இனிநடக்கிற விதங்காண்க.

இரவுமது—கட்டளைக்கலிப்பா.

இப்படியாகமெய்க்கேளாதிருதவில
விரைவுடனேபெயர்ந்துமயக்கந்தால்
செப்புமற்பகுவிராசமொழி
சேர்ந்தமந்திரியுங்கோலுமேவிட
தம்பிளைப்பரிமேவிப்பாசுமே
தானும்வந்தாசோமேயிருந்திட
ஒப்புமாறிகள்குழுமிகர்பானு
மெய்யிராசமைபுரல்வந்திருக்கவே



இரவுமது-விருத்தம்.

பைங்கிளிமிகர்பான்கன்னை பகுவிராசனோடு
சங்கைக்கிரிராசர்க்கெல் தனிக்கொலுதனிலிருந்த
மங்கைஅப்பாசேந்திர மன்னனைமங்கைநோக்கி
அங்கமாமசலாச்சொல்வேன் அதுக்கினில்பொருள்சொல்லென்றாள்

வசனம்.

அகோதெப்படியென்றால் அன்றையயிரவுபோய் மறுநாட்காலையில் சூரியனுதையமானவுடனே பகுவிராசனும் மந்திரிப்பிரதானிகளும் கூடியிருக்க அகமமதுசாமகன் அப்பாசுகிழவியினிடத்தில்விடைபெற்றுதன்குதிரையிலேறி அரசர்கள் ஏராளமானபேர்கள் கூடிக்கொலுவிருக்கும் சமுகத்திற்போயிருக்க மிகர்பானென்பவள் தன்தோழிமார்களுடனே முன்மாதிரிசொன்னதிரையறைப்பில்வந்திருந்து அப்பாசைக்கூவி மசலாச்சொல்லுகிறவிதங்காண்க.

அப்பாசுக்கும்-மிகர்பானுக்கும்-தர்க்கம்.

மிகர்பான்சொல்-விருத்தம்.

இன்னமும்பயமில்லாமல் லென்னிடம்வந்தாயல்லோ
நன்னயமசலாயிப்போ நானுரைக்கக்கேளும்
அன்னவன்பண்டித்தப்பட்சி பதிதசிபிட்டாக்கண்ணிறகுநாலு
தன்பொருள்சொல்லாவிட்டால் விட்சணத்தியிற்கோலவேனே

அப்பாசுசொல்-ராகம்-ஆனந்தபைரவி-ஆடதாளம்.

சொல்லுவேனென்றபடிதே-இம்மசலாவை
சொல்லுவேனிப்போதே
சொல்லுவேனென்றுசொன்ன கோதையேமாரிகாலத்தில்
நல்லாய்ப்பறக்குந்தும்பிகளின்றேனுன்மசலாவைக் சொல்

மிகர்பான்சொல்-விருத்தம்.

அப்பிரானென்றுசொன்ன தோன்றிலேசொல்லக்கேளாய்
அன்புடனொன்றுநான்மெ ஒருப்பாகிதாரக்கன்னே
பண்பதாய்ப்பரிகலக்கண்டத்து நாமினைபதனிற்சுற்றி
இன்பமாய்வருகின்றோரிருதன்பொருளைத்தான்சொல்லாய்

அப்பாசுசொல்-ராகம்-மேற்படிராகம்-தாளம்.

இதுவென்னவொருபாரமோ-நீகேட்டதற்
கேற்கச்சொல்லுதேசமோ
இதுவென்னபாரமோ அந்நிழைமேலாடுமே
மதிப்பிரகாசம்போக்க வருஞ்சூரியனல்லவோ இது

மிகர்பான்சொல்-விருத்தம்.

சூரியனென்றுநீதான் சொல்லுமதினாலாலும்
பாரமாமமொன்றுக்கே பணிஞ்சூரினையாலும்
சாரபூவறுபதாரும் தக்கதப்பழுமைக்காமிக்
கோத்தில்மசலாவுக்கு நிகழ்ந்தவிப்பொருளைத்தானே

அப்பாசுசொல்—தரு.

மாமென்பதாவுடமாம்—அதன்பவர்
மாதர்பணிரவ்டெண்பகாம்
மாமென்பதையுஞ்சொன்னேன்வளர்மேலேப்பதுநாள்
கரும்புவைறுபான்றாழிநற்பழமைக்கொருத்து மா

மிகர்பான்சொல்—விருத்தம்.

ஒருக்கெதன்றுதெரிந்துசொன்னவோமன்ஞமிருந்துகொல்வேன்
அருத்தாலப்படைப்பிலொன்றுவருணையாய்வல்துவாரும்
சகத்தவரில்லாவிட்டாற் சகலர்க்குஞ்சலிப்பதாகும்
சுகாதுயெங்குமுன்னோர் தானதைச்சொல்லுவீரே

அப்பாசுசொல்—தரு.

தானமருளியபெண்ணே நீசொல்மசலாச்
சாற்றுகிறேன்கேள்கண்ணே
தானிதைச்சொல்லென்று சாசமாய்ச்சொல்லுப்பெண்ணே
யனவுணவென்பது யாருக்குந்தெரியாதோ தான

மிகர்பான்சொல்—விருத்தம்.

ஒவெனமென்றுசொன்ன வச்சிதவேங்கேகேளாய்
நிசமதாய்ப்பூமிதன்னில் நெடியவன்படைக்குக்குள்ளே
அசைவுளமுன்னோர்முள்ள ததுதனையின்னதென்று
வசையிலாச்சொல்லாவிட்டால் வாளினற்றுணிப்பேன்மன்றே

அப்பாசுசொல்—தரு.

துணிப்பேனென்றிடுமயிலே—இதுவுனக்குத்
தோதகமோகுயிலே
துணிக்கவும்விடுவேனோ சொல்மசலாக்காற்று
இனிக்குந்தன்னீர்நெருப்பு இபல்மண்ணுடனாகும் து

மிகர்பான்சொல்—விருத்தம்.

காற்றும்நாம்சொன்னேமென்று நலங்காயவிருக்குமன்றே
ஞாலமாய்ப்பூமிதன்னில் நபியுடயக்களாமேனோர்
சாலவேபொய்யைச்சொல்லித் தருஞ்சொர்க்கஞ்சேர்ந்தோமாறு
வலவேசொல்லாவிட்டால் இன்றுன்னைவதைப்பேனே

அப்பாசுசொல்—தரு.

வதைக்கவுமுன்னாலாகுமோ-நீசொல்லது
மன்னவர்க்கேற்பதாகுமோ
வதைக்கவுங்கூடுமோ மன்னர்பாகூபுநபி
தொழிமக்கள்பொய்யைச்சொல்லிச் சொர்க்கம்போய்ச்சேர்ந்தார்கள்-வ

மிகர்பான்சொல்—விருத்தம்.

சொர்க்கத்திற்சேர்ந்தாரென்று சொல்லியவாசகமேதே
முக்கியமாம்பூமிதன்னில் முகவியையமுடையோர்கள்



சக்கிலாந்துநிக்குரானிற்றைபலாசையாலே
நக்குறித்தோனைக்கொன்றவொன்னலனைவனேசொல்வாய்

அப்பாசுசொல்—தரு.

சொல்லெனச்சொன்னமாதே உத்தன்மசலாச்
சொல்கிறேன்கேளிப்போதே
சொல்லுமாதமக்களில்தோன்றும்ஆபில்காபில்
வல்லிக்காஆபிலைக்காபில்கொன்றேபுதைத்தார் சொல்

மிகர்பான்சொல்—விருத்தம்.

ஆபிலைக்காபில்கொன்றுஅருமண்ணிற்புதைத்தாலென்றாய்
வாவிதன்வரிசில்கடப்பார்மனிதரைக்கண்டாற்போவார்
தாவியகாலுமில்லைதாம்போர்வார்வருவார்பின்னும்
சோபிதக்கையுமில்லைசொல்லுவாயிவரார்மன்றே

அப்பாசுசொல்—தரு.

மன்றேசொல்லென்றுசொல்கிறாய்—இன்னம்மசலா
வழுத்தவெனக்குப்பாரமா
மன்னனேயென்றுசொன்னமாமயிலேகுயிலே
இந்நிலந்தன்னிரினிலிருக்குமச்சமல்லவோ மன்

பொது—கொச்சகம்.

கொற்றவன்மசலாவுக்குக்குறிப்பதாய்ப்பொருளைச்சொல்லத்
தத்தைநேர்மொழியாளப்போதயங்கியேமயங்கிச்சோர்ந்து
மத்திடுந்தயிர்போல்வாடிமன்னனைப்பார்த்துச்சொல்வாள்
இத்தினமசலாப்போதுமேகிவாநாளையென்றாள்.

இதுவுமது-கட்டளைக்கலிப்பா

தோகையுஞ்சொல்லித்தாதிகள்கூடவேகுழ்சபைவிட்டரன்மனைசென்றபி
வேகமாய்ப்பரிபேறியப்பாசுமன்னன்விடுதியிற்போயிறங்கியிருந்திட (வ்
ராமீசேர்பருவிசொடுமேந்திரியும்யாந்தருமவனில்லெப்புகுந்திட
ஏகமாயிரவானதுமீங்கிடவப்பரிபோன்வந்தெழுதித்தாலைமோ

இதுவுமது—பொதுவிருத்தம்.

விடிந்திடவேயப்பாசுபரியிலேறி
வேகமுடனாசனதுசபையின்மேவ
அடர்ந்தபருவிராசவமைச்சரோடு
மரியமணிதர்களோடுங்கொலுவிற்கூட
தொடர்ந்திடுதோழிகளுடனேமிகர்பான்மின்னுஞ்
சொற்சபையில்வந்துநிரைதனிலிருந்து
படந்தமசலாச்சொல்லிக்கொல்மோனென்றாள்
காவலனும்விடுவித்துசெல்வேனென்றான்

வசனம்.

அதோதெப்படியென்றால் மிகர்பான்சொன்னமசலாவையெல்லாம் அ
டு

ப்பாசுஎள்ளுக்காய்பிளந்தாற்போல் பொருள்விபரிக்க அதைக் கண்ட பெண்ணானவள் இவனிதாய்செயிப்பது அருமையென்று அசந்து சோர்ந்து தேர்ந்து எந்தலோகத்திலேயும் இந்தமன்னருக்குச்சரியான பேர்களில் லையென்று தான்மகிழ்ந்துக்கொண்டு இன்றைக்குச்சொன்ன மசலாப்போ லமற்றமசலா நாளைக்குச்சொல்வோமென்று அவள்போயரண்மனைசேரம ற்றப்பருவிராசனும்மந்திரிகளும் அவரவர்களிடம்போய்ச்சேர அதம்ம ராசாபுதல்வனும்விழிவிடுபோய்ச்சேர அன்றையப்பொழுதுபோய்மறு நாளுதயத்தில் யாவர்களும்கொலுவில்வந்து கூடியிருக்கையில்மிகர்பானெ ன்பவன் அப்பாசைப்பார்த்து இன்றைக்குச்சொல் மசலாவுக்குப்பொருள் சொல்லவேணும் சொல்லாவிடில்உன்னைக்கொல்வேனென்று ஆக்கிரமித்து ச்சொல்ல அதற்குப்பொருள்சொல்லிவெல்லுவேனென்று மன்னன்சொல் லஇனிமேல்நடக்கிறவிதங்காண்க.

மிகர்பானுக்கும்அப்பாசுக்கும்தர்க்கதரு

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்

மிகர்பான்சொல்-கண்ணிகள்.

நேற்றுமசலாவுக்குப்பொருட்சொன்ன
  நிர்ணயமன்னனேகேள்-இப்போ
சாற்றுமசலாப்பொருள்சொல்லாவிட்டால்
  உன்சாவதுநிசமே

அப்பாசுசொல்-கண்ணிகள்

ஆற்றமாட்டாமல்ப்போமதிகெட்டலைந்தே
  ஆற்றுகிறாய்-சும்மா
ஏற்றமசலாவுக்குச்சொல்லிவிடுகிறேன்
  அன்னைமணம்புரிவேன்

மிகர்பான்சொல்-கண்ணிகள்-

மணஞ்செய்வேனென்றுசொல்லிபச்சமில்லாமல்
  வார்த்தைகள்சொல்மன்னவனே-எங்கும்
குணமுள்ளமனிதரெல்லாம்புகழ்பவரார்
  குறிப்பாயிதனைச்சொல்வாய்

அப்பாசுசொல்-கண்ணிகள்

மணமுள்ளபெண்மயிலேகண்ணே நீ
  வழுத்தியதெவருஞ்சொல்லார்
குணத்தினிற்சொல்கிறேன்கேளெல்லாத்தையும்
  தற்காக்குமிறையல்லவோ

மிகர்பான்சொல்-கண்ணிகள்

இறைவனென்றுசொன்னீர்அதுநிச
  மிப்போதுசொல்கிறேன்கேள்பொழுதாத



தரைகண்டதொருநாட்டான்பிறகுகாணுக்
  தலமதனைச்சொல்லுவாய்

அப்பாசுசொல்-கண்ணிகள்.

தலம்பிறழுன்பகையால்முசாநபி
  தானுற்றிலேகும்போதுமரித்திட
சலத்தாவாலடிக்கநீர்விலகத
  தாங்கண்டதரையதுவே

மிகர்பான்சொல்-கண்ணிகள்,

தரையதிலேபுனலுகண்டுஆடுமேய்த்தாத்
  தக்கஅசவாந்தின்று-பலநாள்
இறையவனருட்பேலேபாம்பாகிய
  தெவர்தானதனைச்சொல்லுவாய்

அப்பாசுசொல்-கண்ணிகள்.

எவர்தானுஞ்சொல்லுவரோமூசா
  எழிலாசாடுமேய்த்து-அப்போ
கவருங்புவனும்பொம்பானதின்
  காரணமிதல்லவோ

மிகர்பான்சொல்-கண்ணிகள்

காரணமூசிசக்தான்துணியாவிற்
  கழுமலிதருக்காய்-முதலிற்
பூரணமும்பால்லாறுதுவந்தோராவி
  ரிதன்பொருளைச்சொல்லுவீர்

அப்பாசுசொல்-கண்ணிகள்.

ஆதிலேகாவில்கொன்றுஅடக்க
  அறியாதால்காகம்கண்டு-இறங்கிப்
பூமிலேயன்றிறந்தடக்கஅறிந்தவன்
  புதைத்ததறிந்திலையோ

மிகர்பான்சொல்-கண்ணிகள்

காகமென்றுசொன்னஅரசே
  கழறவேனின்னோர்மசலா-பூமியினில்
சோகமதாயிறந்துபிழைத்ததார்
  கருக்கினிற்சொல்வாயே

அப்பாசுசொல்-கண்ணிகள்,

சொல்லமுதனேகவ்வஅபொட்சா
  தோன்றவிறந்தொதுங்கஅப்போ

வள்ளலீசாகபோலுபிபெற்று
வாழ்ந்ததிலிலையோ

போதவிருத்தம்.

தோகைசொல்மசலாவுக்குத்தாரத்தவப்பாஜேந்தரன்
பாசமாய்ப்பொருளைச்சொல்லைபக்கிளியிதநினைத்தாள்
மோகத்தையூட்டிஞல்காம்மொழிந்திடப்புரள்வானென்று
பாகுசேர்மொழியிஞளும்பகருவாள்மசலாவைத்தான்

இதுவுமது.

நிரையதைசிக்கியர்க்குந்தெரியாதப்பாசைப்பார்த்து
வளைபெறுந்தனத்தைக்காட்டியாதிருவிழியைக்காட்டி
சிரிப்பினல்மோகமூட்டித்தியங்கிடுநோயாறு
அறந்திடுந்தசைகலால்நாமதைநடுகளும்சொல்லென்றாள்

இதுவுமது.

வல்லிசொல்மசலாவுக்குவகைசொலாதிருப்பதாலே
சொல்பகுமிரோடுருமந்திமற்றுள்ளோரும்
சொல்லுமாவிலொளையென்றுகூறவைப்பாசுகேட்டு
நல்லதோர்மோகசித்திமசலாவைாளிலென்றுனே

வசனம்.

அதிகோசெப்படியென்றால் ஒருவர்க்கொருவர் மசலாச்சொல்லியிலி க்கவே பிசர்பானென்பவள் இவன்காம்சொல்லு மசலாவுக்கெல்லாம் பொருள்விளிவிக்கிறபடியால் இனிநாமிவனைவெல்லுகிறதரிது இனிமேல்மோகத்தைமூட்டிமசலாச்சொல்வோமாஞல் மிரண்டு பொருள்சொல்லமுடியாது அந்தவேளையிலெனக்கொல்லலாமென்று அங்குள்ளபாவர்களுக்கும் தெரியாமற்றிரைபைக்கையிலெடுத்தாக்கி அப்பாசைத்தன்னிரண்டு கண்களாலு பிரட்டித்தனத்தையுமவாயையுங்காட்டிச்சிரித்துப் பேசையில் அரசனிதைகண்டுமோகங்கொண்டிருக்க அந்தவேளையிலிவர்மசலாச்சொல்ல அதற்குப்பொருள்சொல்லாமலிவர்மயங்கியிருக்கப் பகுமிராசரும் மற்றும்யாவர்களும் இன்றைக்குஇவனைக்கொல்லுவாளென்றுயாவரும்சொல்லக்கேட்டுமயக்கம்தீர்ந்து மிகர்பானைப்பார்த்து உன்மசலாவைச் சொல்லென்றுஅப்பாசுகேட்க அவள்சொல்லுகிறவிதங்காண்க.

மிகர்பான்-அப்பாசுக்குச்சொல்-விருத்தம்.

மன்னனேஇப்போநான்தான்வழுத்தியமசலாவுக்கு
நன்மைப்பொருள்சொல்லாமல்நடுங்கிநீயிருந்ததென்ன
மின்னாநீசொல்வாயென்றுமிநற்றியவார்த்தையென்ன
அன்னதையெனக்குநன்றுயறிந்திடவுரைசெய்வாயே.



வசனம்.

கேளும் அரசனே இப்போதுநானுன்னிடத்தில் மசலாச்சொல்ல அதற்குப்பொருள்சொல்லாமல்மயங்கிப்போயிருந்து இப்போதுசொல்லென்றவிபரமென்னஅதையெனக்குததெரியும்படியாய்ச் சொல்லுவாய்மன்னவனே

அப்பாசுமிகர்பானுக்குச்சொல்-கட்டளைக்கலிப்பா.

சுந்தரமுள்ளதந்திரப்பெண்ணேகேள்சோர்ந்திருந்தவிபரமுரைக்கிறேன்
எந்தனூரிலிருந்திடுநாளையிலெனக்கிசைந்தவெள்ளாட்டியொருத்தியுண்டந்தமாதினைப்போல்நீயிருந்ததாலவள்தானோநீயென்றுநினைத்துஎன்
சிந்தைதனிலெண்ணியிருந்தவன்தெரிந்துகொண்டுமசலாவைச்செப்புவாய்

வசனம்.

ஆனால்கேளாமிகர்பானுவே இப்போதுந்தன் முகத்தைக்கண்டவுடனே எனக்கோர்எண்ணம்வந்தது அதென்னவென்றால் என்னிடத்தில்நான்அரசதிருக்கையில் என்னிடஅரண்மனையில்ஒருவெள்ளாட்டியிருந்தாளவளைநான்மிகவும்பிரியமாகவைத்திருந்தேன் அவளுனக்குச்சரியானவளாயிருப்பாள் அவள்தானோநீயென்கிறதாயெண்ணியிருந்தேனேயொழிய வேறேயொன்றுமில்லை இனிஉன்மசலாவைச்சொல்லுமிகர்பானே.

மிகர்பானுக்கும்-அப்பாசுக்கும்-வசல்-தரு-கண்ணிகள்.

மிகர்பான்சொல்லல்.

உந்தன்புரட்டாலுரைத்த
வொருமொழிகேளிக்கணந்திறசொல்வேன்-ஆட்டின்
நருவல்தலையுண்ணக்கலால்
உள்ளிருப்பைத்தின்னவுறும்வில்வாய்

அப்பாசுசொல்லல்

வந்தின்மொழியாயிமசலா
இயம்புகிறேனுந்தனுக்குத்தானே-ஆட்டின்
சலதின்தாமரைக்காயுள்ளிருக்கும்
ரத்தமதென்றுணர்வாய்

மிகர்பான்சொல்லல்.

முட்டிப்படுமசலாவை
திட்டெனவேதானுரைத்தாய்நன்று-தமியார்
முப்பதிஞயிரம்பேரும்
முத்திரையாயிருந்தவரார்மன்னு

அப்பாசுசொல்லல்

பேர்பெற்றபகுமிரு
பெற்றபெண்ணேயாகூபுரமிதான்-பெற்ற

பிள்ளைகளீராறுபேரிற்
பிறந்தகபியார்களல்லோபேதாய்

மிகர்பான்சொல்லல்.

செப்பமுடனொருமசலாச்
செப்புகிறேன்தப்பின்றிச்சொல்வாய்-அது
செகத்தோர்க்குநல்லதுவா
முடிகிச்சென்றுலோடிவிடும்பிள்ளாய்

அப்பாசுசொல்லல்.

தானமுள்ளமாமயிலே
தான்வழுத்துமப்பொருளதனைக்கேளாய்-வானில்
தான்றியுமேகமென்று
தையலேயறிந்துகொள்வாய்குயிலே

மிகர்பான்சொல்லல்,

அல்லவருமதிகுமன்று
இன்னமொன்றுசொல்லுகிறேன்கேளாய் படியில்
எழிலுறந்தக்பிரான்றியே
யேகியதைதன்னைக்கலாவிசைப்பாய்

அப்பாசுசொல்லல்.

வண்மையுள்ளமடமயிலுன்
வாய்ப்பகட்டைப்பகட்டுகிறுபறிவேன்-சொன்ன
மசலாவின்பொருளதுதான்
வனத்துலாவும்வெட்டுக்கிளியல்லவோ

மிகர்பான்சொல்லல்.

எட்டுதிக்கும்போற்றுகின்ற
வந்தலேயின்னமொன்றுகேளாய்-புவியில்
எல்லவர்க்குமடுத்திருக்கும்
இதுவேபகையாயிருக்குமிசைப்பாய்

அப்பாசுசொல்லல்

அன்னமேநானுரைவன்கேள்
ஆலத்துள்சீவராசிக்கெல்லாம்-உயி
ரடுத்திருக்குமதுபோறு
ளரும்பகையாமவுத்தலவோமானே

மிகர்பான்சொல்லல்.

மகுத்தேனவேமனமகிழ்ந்து
வழுத்துகின்றமன்னவரேகேளாய்-உலகில்



மனிதரினிற்கேள்வியில்லா
வாழ்சுவர்க்கம்புகுபவரார்சொல்வாய்

அப்பாசுசொல்லல்.

அபத்தமில்லாமாதரசேயறியச்சொல்வே
னவர்களைத்தானிப்போ-இறை
யருளியபோற்பிசகின்றி
யஞ்சொகுத்துத்தொழுபவர்தான்மாலே

மிகர்பான்சொல்லல்.

அஞ்சொகுத்துத்தொழுதிடுவோ
ராமெனவேசொல்லியதோர்மன்று-தினம்
அஞ்சொகுத்துந்தொழுதவர்க
ளருநாகில்வீழ்வதேவாருள்வாய்

அப்பாசுசொல்லல்

வல்லியேநீகேட்கின்ற
மார்க்கமதைச்சொல்கிறேன்கேளேந்து-ஒருத்தும்
வளமாகத்தொழுதுமற்ற
மார்க்கத்தையுமனுசரிப்பேன்மாதே

மிகர்பான்சொல்லல்.

பார்த்திபனேயின்னமொரு
பகர்மசலாச்சொல்லுகிறேன்பண்பாய்-புவியில்
பாவங்களைச்செய்தவர்கள்
பகர்சுவர்க்கம்புகுவதென்னசொல்வாய்

அப்பாசுசொல்லல்

காரிகையகூந்தலியே
கன்னியரேகழறியதோர்மசலாப்-பாரிற்
கர்த்தனிடம்கெஞ்சிநாளும்
கருந்தகுபாச்செய்தவரென்றறிவாய்

பொது-கொச்சகம்.

செப்புமசலாவுக்கெல்லாஞ்சிராசன்பொருளுரைக்க
ஒப்புமிகர்பானுவெண்பாள்உருகிமனஞ்சோர்ந்தயர்ந்து
இப்பமசலாச்சொல்லவிடம்வகையில்லாதால்
தப்புவந்துசேர்ந்ததெனத்தான்மயங்கியிருந்தவள்தான்

இதுவுமது.

உள்ளுளுத்தமசமானுள்ளொளிபிழந்தகண்ணுள்
கள்ளைச்செக்கிலிட்டாட்டியிட்டதுபோல்வகைமறந்தாள்
தள்ளிவிழச்சோர்ந்தவள்போற்றத்தனித்துத்தனைமறந்தாள்
தெள்ளியநற்றுஙியர்கள்தேற்றிநிற்பாராற்றிநிற்பார்

இதுவுமது-கட்டளைக் கலிப்பா.

தேற்றிநிற்கச்செயப்பகுவீருஞ்
சேர்ந்தமந்திரிகளுஞ்சபையோர்கள்தாம்
பார்த்திபன்பொருள்பண்பாயுரைத்திட
பகருவார்களிப்பாசதனிலுள
நாற்றிசையுமாண்டிடுமென்னரின்
நராதிபர்க்கிணையாகாரெவரெனப்
போற்றிடக்கண்டவப்பாசுமன்னனும்
பொற்புறுஞ்சபையோர்க்குப்புகலுவான்.

வசனம்.

அகோதெப்படியென்றால் மிகர்பான்சொல்லுமசலாவுக்கெல்லாம் அப்பாசுராசன்பொருள்சொல்லக்கேட்டவள் இனிச்சொல்வதற்கு அவளிடத்தில்நானுமசலாவுக்கு மேலில்லாத வெனிநாமென்னசெய்வோமென்று மிகுதியும்வருந்திசசோர்ந்ததுயாமுற்றிருக்கையில் தாதிகள் தேற்றிப் போற்றியுபசாரணைசெய்கையி லந்தக்கொலுமண்டபத்திலுள்ள அவள்தந்தை பகுவீராசனும்மந்திரிமன்னர்மன்னர்கள் முதலானசபையிலுள்ள அனைவரும்அப்பாசுமசலாவுக்குப்பொருளைவிவரிக்கிறவிபரங்களைப்பார்த்து இந்தமன்னனுக்குச்சரியானமன்னர்கள் நான்குதிக்கிலும் எட்டுத்திசையிலும் பதினாறுகோணத்திலு மிருக்கமாட்டார்களென்று வாழ்த்திப் போற்றிக்கொண்டிருக்கையிலவர்களையப்பாசுபார்த்துச்சொல்லுகிறதெங்காண்க

அச்சபையோர்க்குச் சொல்-விருத்தம்,

சாந்தனிமிகர்பானுக்குத்தந்தையேசபையோர்கேளீர்
வந்திசைமூன்றுநாளாயிசைத்திடுமசலாக்கெல்லாம்
பாந்தமாய்ப்பொருட்களைப்பகர்ந்தனன்கண்டீர்ப்போ
தாந்திடுமசலாச்சொல்வேனதன்பொருளவள்சொல்வாளோ

வசனம்.

அகோகேளுங்கள் மிகர்பானுவுக்குத்தந்தையாகியமன்னரே மற்றுஞ்சபையிலுள்ளபேர்களே இந்தப்பெண்ணானவள்மூன்றுநாளாய்ச்சொன்ன மசலாவுக்கெல்லாம் சோர்வில்லாமற்பொருள்சொல்லிவைத்தேனல்லவா இனிநானொருமசலாச்சொல்லுகிறேனதற்குப்பொருள்சொல்வாளோ சொல்லுங்கள்மன்னர்முதலியசபையோர்களே.

பொதுவெண்பா.

சொல்வாளோவென்றரசன்சூழ்சபையோரைக்கேட்க
வல்லிதனக்கேயவர்வழுத்திடவே-நல்ல
தாகட்டுமென்றப்பாசுமன்மசலா
வேகட்டுமென்றான்விரைந்து



அப்பாசுமிகர்பானுக்குச்சொல்-கட்டுமசலாத்-தரு.

இ-ம்-புந்நாகவராளி அடதாளம்.

கண்ணிகள்.

கல்லையயாயென்னுடனேமசலாச்சொல்லுவாயே-இப்போ
வழுத்துகிறேனதன்பொருளின்வகையைச்சொல்லுவாயோ
தொல்லுலகிலோரரசன் சூழ்கிளைமிகுமேல்-மாந்தர்
முழுதுமர்த்தனையிழந்து துயராய்வரும்போது
சோர்தமன்னனிருவரோடு பொருளைத்திலலடைந்து-அங்கு
புகலுமவுத்தடுத்ததன்று புகலேதுமில்லாமல்
ஆதரவாயிருவர்களை யகற்றிவிட்டேயரசன்-அப்பேர்
ஆரணியம்வரமவுந்து அங்கேயும்வந்திருக்க
அடுத்திருந்தன்மவுத்ததனை அரசன்கல்நிப்பாங்கு-தேறி
அம்மவுத்தைக்கிழித்தப்பாழின் அருகிலைத்திற்போட்டு
கடுமைப்பாரிபோலியவன் காட்டைவிட்டகன்று-பின்பு
கன்னியரோமிர்மைகரில் சஞ்சரிக்கவந்து
இன்னகரிலொருமவுத்து பெற்றதொன்குவந்து-நல்ல
பந்திசைமேயிதுவுத்தப்பி யிருக்கின்றாரிங்கே
அன்னமேமூன்றுமவுத்துமவனிலையதானென்ற-பொருள்
அறியச்சொல்வாய்சொல்லாவிடிலனைக்கேமணஞ்செய்யேன்

அப்பாசு மிகர்பானுக்குச்சொல்-விருத்தம்.

கோகநகையேகுயிலேமானே கொஞ்சுபசுங்கிளியேதேனே
வாகையாயெந்தனுக்கு வழுத்திடுமசலாவெல்லாம்
நீமெய்ப்பொருட்சொன்னேனே நிகழ்த்திடுமசலாவுக்குன்
தாதையும்பலருமேவக்கச் சாற்றுவாய்ப்பொருளைத்தானே

வசனம்.

அகோவாரு மிகர்பானென்னும்பெண்ணே-மூன்றுநாளாய் என்னோடுவாதுகூறி நானுமசலாச்சொன்னாய் அதுகளுக்கெல்லாம் நான்பொருட்சொன்னேன் இப்போது நான்சொன்னமசலாவுக்கு உன்தந்தைமுதலிய மந்திரிப்பிரதானி மற்றுஞ்சபையோர்களுக்குந் தெரியும்படியாய் அதனுடைய விபரங்களைச்சொல்லுவாயானால் நீயேகெலித்தவள் நான்தோற்றவன்-உன்மனம்போலே என்னை என்னசெய்யவேணுமோ செய்துகொள்ளலாம் அப்படிநீபொருட்சொல்லாமற்போனால் இன்றைக்கே உன்னைக்கலியாணஞ்செய்வேன் ஆனபடியாலதன்பொருளைச்சொல்லுவாய்பெண்ணே சிரோன்மணியே.

பொது-கலித்துறை.

மாதுமுருகுமனமேகருதி மசலாந்தனக்கு
நீதப்பொருளினைச் சொல்லுவதற்குநினைவுமிட்டு

எதும்பொருள்சொலக் கூடாததாலின்றிராத்தழித்து
விதப்பொருளையிடுத்துசொல்வேனென்றுமெவினளே

வசனம்.

அகோதெப்பபடியென்றால் இந்தப்பிரகாரம் மிர்பானுக்கு அப்பாச மசலாச்சொல்ல அவள்பொருட்சொல்லத்தெரியாமல் மயங்கி அங்கே யே சுமாரிக்கக்கொண்டு இதற்குப்பொருள் நாளைக்குச்சொல்லுவேன் அமாவள்கள் வீடுதிக்குப்போய்வாராளேன்று தாதிகள்குழமெழுந்து தன் வாணமனைபோய்ச்சேர்ந்தாள் பின்பு நடக்கிறவிதங்காண்க.

பொது-விருத்தம்.

மங்கைதான்சென்றபின்பு மன்னவனப்பாசேந்திரன்
அங்கநற்பரியிலேறித் அரைமன்னரேக்கிச்சேர
மங்களக்கிழவிவீட்டில் மகிழ்வுடன்போயிருக்க
சிங்கனும்பருவீசேந்திரன் திரானுமிதனைச்சொல்வான்

இதுவுமது.

மந்திரிதனையழைத்து மகிழ்வுடனப்பாசுக்குந்
தொந்தமாய்முறைபானுந் தோழன்களிவர்க்கமெல்லாம்
அந்தமாயளிப்பாயென்ன அதுபோலேதாமெடுத்து
விந்தையாய்ப்பலருஞ்சூழ விரைவுடன்போயளித்தார்

இதுவுமது.

அளித்திடுமன்னந்தன்னை யப்பாசுந்தின் றமிச்சம்
களிப்புடன்கிழவிக்கீய்ந்து கவின்னனிருக்கும்போது
பழித்தென்சாமிகருப்பானும் பகர்பொருள்தெரியாததாலே
செழித்திடுமரசன்பாலிற் சென்றுகேட்டறியலாமாள்

வசனம்.

அகோதெப்பபடியென்றால் மிர்பான் தன்னரண்மனைக்குப்போகபரு விராசனும் மற்றயாவர்களும் அவரவர்மனைகளிற்போயிருக்க அப்பாசு பரியிலேறிக் கிழவிவீடுபோய்ச்சேர அவனைக்கண்டு ஊதிக்க அச்சோமபரு விராசன்மந்திரியையழைத்து அந்தப்புறத்திலிருந்து ஒதிவனமுதலிய கனிவர்க்கங்கள் தாம்பூலமுதலியசனபகண்ணாரிகள் முதலாகியதுங் கொண்டுபோய் அப்பாசுக்குக் கொடுத்துவரச்சொல்ல அதுபோலகொண்டுக அதைவாங்கிப்புசித்துக்கிழவிக்குங் கொடுக்க அவனுந்தின்றபின் சோலை யில்நடந்தசேதிகளைச்சொல்லிகொண்டிருக்கும்போது மிர்பானென்ப வள் இவன்சொன்னமசலாவுக்குப் பொருள்தெரியாமல் மயக்கி இதன் பொருள் அவனிடத்திற்போய்க்கேட்போமென்று அவள்மாறுபாடாய் வருகிறவிதங்காண்க.

அப்பாசியினிடத்தில்மிர்பான்வருகிற-தரு.

இ-ம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

மாதுமிர்பானுவந்தாள்-மந்திரிமகளபோல் மாது



48

அநுபல்லவி.

சோதிமுகமிலங்க-செர்ணப்பணிதுலங்க
தோகைமயிலெனவே வேகமுடனடந்து மாது

சரணங்கள்.

சாதுரந்திதபூஷணி-புகழும்பெற்ற
சக்மெர்ளிமிர்துபாஷணி
விரதரம்பையைப்போலே வேடிக்கையாகவே
விந்தைத்தோழியொருத்தி-சந்திரவதயைப்போலே மாது
தாளப்பதக்கமாட-இருளதனில்
தான்வழிகண்டுவோட
இருவிழிகளும்வடிவேலைப்போலவேயன்ன
வியப்புறக்காமுக ரிருதயங்களும்பன்ன மாது
கொங்கைகுடக்குலுங்க-ஆடவர்களின்
குணமும்வேறுபவிலக்க
செங்கைவளையசையத் திகழன்னம்போலடி
தேர்வேந்தனிருந்திடுந் திருமனைதனைத்தேடி மாது

பொது-விருத்தம்.

மந்திரிமகள்போல்வந்த மயிலெனுமிர்பான்மின்னும்
சுந்தரமிருந்ததாதித் துணையதாயொருத்திசெல்ல
வந்துமேகிழவிவீட்டு வாசலின்கதவுதட்ட
அந்தநற்கிழவியந்தக் கதவினைத்திறந்துகேட்பாள்

இதுவுமது.

பெண்களேநடுச்சாமத்திற் பிரியமாயெந்தன்வீட்டில்
கண்கள்போல்வந்தகாரியம் கருதிச்சொல்லென்றுகேட்க
வண்கணராசனுமுன்றன் வளவினிலிருப்பதாலே
புண்பொடும்பார்க்கவந்தோம் பாவையேசொல்லுமென்றார்

இதுவுமது.

அம்மையுமுகெச்சென்று அப்பாசுவரசைப்பார்த்து
பொம்மைகளபோலிரண்டு பொற்கொடிவந்தாரென்று
தன்மையாய்ச்சொல்ராசன் தையலையழைக்கச்சொன்னான்
வம்மெனக்கிழவிசொல்ல வந்தனர்ராஜன்முன்பில்

வசனம்.

அகோதெப்படியென்றால் மிர்பானென்பவள் மந்திரிமகள் ஜாடை யாய் ஒருதாதியைக்கூட்டிக்கொண்டு கிழவிவீட்டில்வர கிழவிகண்டு அப் பாசுக்குச்சொல்ல அவரும் அவர்களை அழைத்துவரச்சொல்ல கிழவிகூட் டிவந்து முன்னேவிட அப்போது அரசன் பெண்களைப் பார்த்துக் கேட் கிறவிதங்காண்க.

அப்பாசும்மிர்பானும்சொல்விருத்தம்.

அன்னமேநீசொனரு அர்த்தராத்திரியிற்றேடி
கன்னமாமலர்நீர் நவிலுவிரென்றனுக்கே

மன்னவனை விட்டுநானு மகாராசன் மந்திரி பெற்ற
நன்னயமா நாவும் மை நாடி வந்தேன் கோவே

வசனம்.

அகோ வாருங்கள் பெண்களே இந்த ராத்திரியில் என்னைத் தேடி வந்த வேயுன்ன நீங்களோர் இராகனை விபரமாய்ச் சொல்லும் பெண்களே

பிகர்பான் சொல் வசனம்.

அறும் கேளும் அரசனே நான் இந்நகரத்தை யாளும் பகுவிராசசனுடைய மந்திரியின் மகள் இவள் என்னுடைய தாதி நானுன்னிடத்தில் வந்த காமி நவருக்களித்து விலவார்த்தைகளாட வேண்டியிருக்கிறது அதனாலே யாருக்குந் தெரியாம லித்த இராவில் வந்தோம் ராசராசர் நதிக்கும்படியா மைன்னவனே

பொது — இசை.

இந்நகரக்களித்து நல் வார்த்தைப் பேசவென்ன
அருக்கிழுவி தாதியரும் அந்தப்புரம் போயிருக்க
கருங்குழலாள் பிகர்பானைக் காவலன் மன்னேரம்
இருமையாதாய் பருகிருந்தி பொருவசனஞ் சொல்லானே

வசனம்.

அகோ தெப்படியென்றால் இராசனும் பிகர்பானும் ஒன்றுக் கொண்டு இரகசியம் பேசவேண்டுமென்று சொல்கையில் அம்மையார் கிழவியுந் தாதியும் இவர்களிருக்கும் அறையைவிட்டுப் பிரத்தியேகமா வேறோரறையிற் போயிருக்க பகுவிராசன் மகளைப் பார்த்து அப்பாசு சொல்லுகிற விருத்தான்ம.

அப்பாசுக்கும் பிகர்பானுக்கும் தர்க்க கன்னிகள்,
இ-ம் குலகாம்போதி — ஆதி தாளம்.

அப்பாசு சொல்லல்.

பருவாதியே மானே பச்சைக் கிளியே தேனே
அருகினில் வந்ததென்ன அறியச் சொல்லுவாய் முன்னே

பிகர்பான் சொல்லல்.

பகல் பிகர்பானுக்குப் பகர்ந்த மசலாப்பொருள்
பகர்ந்தானென் புனமே போலே பணிந்து கேட்பேன் பின்னாலே

அப்பாசு சொல்லல்.

கருவிழி மாதரசே காதலனே ளிப்போது
மருவி யொருபெண்ணைக் கண்டால் மசலாப்பொருளைச் சொல்வேன்

பிகர்பான் சொல்லல்.

காதலாய் நீருரைத்த கனமசலா விற்பொருள்
நீதமாய்ச் சொன்னதின் பின் நேசமாய்ச் சேரலாமே

அப்பாசு சொல்லல்.

பெண்மணியென்னைச் சேர அதிசயமே பருவமாதே
கையாலணைந்து சேர்ந்தால் கழறுவேன் பொருளதனை



பிகர்பான் சொல்லல்.

உரைத்த சொல் வேறில்லாண்டா டிம்போ பாம்போ வென்றுவு
துரைத்தனமன்னுபவன் சொல்லுவீரே தனக்கு

அப்பாசு சொல்லல்.

சிரத்தனையும் விழியால் மிரட்டி பேசவல்லுமாதே
சுரம்புண்டதனைத் திரிக்கின்ற நிதிவாய் மானே

பிகர்பான் சொல்லல்.

அடியாள் வந்த காரியமனுகூலமாயிற்றென்றால்
விடியுமட்டும் நீர் சொன்ன வேலையைக் கேட்பேன் மன்னா

அப்பாசு சொல்லல்.

வேலைப்பழித்த விழி பெண்ணே யிடையழகி
சோலைக்கிளியே சேர்ந்தால் சொல்வேன் பொருட்பின்னாலே

பிகர்பான் சொல்லல்.

மையல் கொண்டு சேர்ந்து மசலாப் பொருள் சொல்லாமல்
கையாலணைந்து சேரக் கருதுகிறீர் சரியோ

அப்பாசு சொல்லல்.

காமியுமோ நான் வேண்டிக் கதைக்கலையாளைழுந்தேன்
தாமசமில்லாமற் சேர்ந்தால் சாற்றுவேன் பொருளதனை

பிகர்பான் சொல்லல்.

நிகரில்லா வரசனே நிகழ்த்து மசலாப்பொருள்
வகையென்னவென்று கேட்டால் மயக்குகிறீர் போம் போம் போம்

அப்பாசு பிகர்பானுக்குச் சொல் விருத்தம்.

பொருள்தனைக் கேட்டாயென்றன் புத்தியுஞ் சபலமாக
இருக்கிறதாலே யிப்போ தியம்பவும் வாய்வாராது
உருகுதே மனதும் பொல்லா வுருவிழியெய்யும் அம்பால்
கருணையோ டென்னைச் சேர்ந்தாற் கழறுவேன் பொருளைத்தானே

வசனம்.

ளாய் மந்திரி மகளாகிய பெண்ணே என்னை நீ பொருட் கேட்பதானாலே இப்போது உன் மேற்கொண்ட மோகத்தினாலென் புத்தி சபலமாயிருக்கவில்லை சொல்லுகிறதற்கும் வாய் வராது இப்போது மன்மதனெய்யும் அம்பால் மெலிந்து வாடுமென்னைக் கூடுங் குலவினால் அதற்குப்பின்னால் நான் பொருளைச் சொல்லுகிறேன் மாதரசே

அப்பாசுக்கு — பிகர்பான் சொல் — கொச்சகம்.

புத்தி சபலமென்றே புகலுகின்ற மன்னவரே
பத்திலவந்தேயும் மிடைதிற் பண்பாயிருக்கவெந்தன்
சித்தமகிழ்ந்திடநீர் செப்புமசலாப்பொருளை
எத்தாமென்ற தேனுரைத்தால் நானுமனம் போல் நடப்பேன்

வசனம்.

அகோ கேளும் அரசர் சிகாமணியே இத்தவிரவில் நானும் மைத்தேடி வந்து உமதருகிலிருக்க நானப்படித் தாங்களே வஞ்சித்துப் போய்விடுவேன் நான் நாடி வந்த பிரகாரம் நீர் பிகர்பானிடத்தில் சொன்ன மசலாவுக்குப் பொ

விட்டுப்பொருட்சொல்லிராகில் பின்னுமுன்மனம்போலே நடந்துக்கொள்ளத்தாத்திருக்கிறேம் மன்னர்கோமேனே

அப்பாசுக்கும்—மிகர்பானுக்குந்—தர்க்கத்தரு—கண்ணிகள்.

இ-ம்—ஆபி—ஆதிதாளம்.

கன்னடிமகத்திரிமகளேனும்பெண்மேனீ
என்னநினைக்கிறேனடி—வந்து
இசைந்துகளிவாயிருந்தாடி.

மிகர்பான்சொல்லல்.

மன்னனேநீமசலாப்பொருளுரைத்தபின்
மருவிமுக்காடுநீவாங்காமும்—என்னைச்
சருவியணைந்திடுவிர்தாமும்

அப்பாசுசொல்லல்.

மருவிமுத்தாடிய பிறகுமசலாப்பொருள்
வகையுடன்சொல்லுவேன்பெண்மேனா—கூடி
மனமகிழச்செய்வாய்நன்னோ

மிகர்பான்சொல்லல்.

அவனேயுந்தன்மசலாப்பொருளையுரைத்தபின்
சுகித்துவிளையாடுவோமன்னா—நான்
சொல்வதைக்கேளும்விற்பன்னா

அப்பாசுசொல்லல்.

சுகமொழியேநானுஞ்சொன்னமசலாப்பொருள்
சொல்லக்கூடாதடிதேனே—ஆர்க்குந்
தெரியக்கூடாதடிமானே

மிகர்பான்சொல்லல்.

பகருமசலாப்பொருள் பண்பாயுரைத்தன்பின்
பருகமருவுவோஞ்சம்பன்னா—கூடிப்
பாடியேசேருவோமன்னா

அப்பாசுசொல்லல்.

பண்புள்ளதொல்லைவிசிமுமுதத்தைமுன்றந்தால்
பகருவன்பொருளைத்தானே—அடி
பருவமிகுஞ்செந்தேனே

மிகர்பான்சொல்லல்.

இன்பமசலாப்பொருளிசைத்தபின்னென்னிட
இதழமுதத்தைத்தருவேனே—மகிழ்ந்து
இ◌ பருந்தே லாந்தானே

பொது—விருத்தம்.

பூவையாளரசன்றன்னை புகழ்பொருள்தனையுரைத்தால்
ஆவலாய்ப்பின்புசேர்வே னென்றவளுரைத்ததாலே
மேவியேயவனோநாமும் விருப்பமாயணைவோமென்று
தாவியுமாலுந்தன்னைத்தையலர்க்குரைப்பதானுன்



வசனம்.

அதேதெப்படியென்றால் அப்பாசுமன்னனும் மிகர்பானும்முன்றுக்கொன்றுதர்க்கஞ்செய்துகடைசியில் மசலாவுக்குப்பொருட்சொன்னால்தான் சேருவேனென்றவள்சொல்ல அதற்குராஜன் நாம்பொருளைவிடுவித்தால்தான் நமதுமனம்போலேநடப்பாளென்று இவள்சொன்ன மசலாவுக்குப்பொருட்சொல்லுகிறவிதங்காண்க

அப்பாசு-மசலாவுக்குப்பொருள்சொல்லுகிற-கண்ணிகள்

இ-ம்-பைரவி—ஆதிதாளம்.

சொல்லுமசலாப்பொருள்சொல்கிறேன்கேள்பெண்ணே
நல்லவென்றுய்தகப்பன் நாளும்யென்னுனைவிட்டு
பல்லும்வாயுமுலர்ந்துபோலவனம்வருகும்போது
கல்லிலென்காலிடறிக் கனமூர்ச்சையாய்விழுந்து
உள்ளமுநலங்கி வனமெலான்றயில்லாதாலே
விள்ளுமவுத்தெனவே மெல்லியர்க்குத்தானுரைத்தேன்
அதன்பின்தெளிவுவந்து அடுத்தநகருஞ்சேர்ந்து
முகிர்தன்னைத்தானைவைத்து முடிகியொருவனத்தின்
பாதையினில்வரும்போது பசர்மண்டபத்திருக்க
காதலொருசேவகன் கடுகவேவந்திருக்க
காத்துமவழையல்லதயால் கவடனைக்கானுததால்
பார்த்ததிலொருபையினில் பாம்கடிதமிருக்கக்கண்டு
எடுத்துஅதைப்பிரித்து யெழிலாபதைவாசிக்கையில்
கடுங்கொலைசெய்யவென்று கடிதமொருபவுத்தி
அந்தக்கடிதந்தன்னை யருக்கிணதிற்கிழித்துப்போட்டு
இந்தநகரில்வந்து யிருக்களிடிந்தபின்பு
மர் துமிகர்பானிடம் மயலாகநான்செல்ல
பேதைசொல்மசலாவுக்கு பேறும்பொருள்சொல்லாவிட்டால்,
அந்நேரமேகொல்வாளல்லோ அதுவேயொருமவுத்து
எண்ணிவிதனியெல்லா மெடுத்துமசலாச்சொன்னேன்
ஆகமூன்றுமவுத்து மடுத்ததெனக்கானதால்
பாகுசேர்மொழியாளுக்குப் பகர்ந்தேன்மசலாவாக
எந்தன்மனமுருக என்னிடத்தில்வந்தமாதே
உந்தன்மனதில்வைத்து வுகப்பாகபெண்ணேச்சேர்வாய்

மிகர்பான்சொல்—கட்டளைக்கலிப்பா.

மன்னமன்னவர்போற்றிமென்னவனே
வழுத்திடும்நீமசலாவுக்குப்பொருள்
கன்னியாமிகர்பானெனுமாதுமே
கருதியேபொருள்தானதைச்சொல்வளோ
இன்னிலத்திலெவர்களுஞ்சொல்வரோ
பெத்தமேதிருங்கற்றவுபாயம்போல்

பின்னேவா னிடக்கொண்டிருந்தாளிப்போ
பேசியோசரியோ பேச்சிலிதே

வசனம்.

கேளும் இராசகேசேவே இப்போது நீசொன்ன மசலாவுக் கு இன்னர் பருவிசாரணையுடையவளென்று நாட்சொல்லவில்லை எந்த தேசத்திலுள்ளவர்களும் இதற்குப்பொருட்சொல்லமாட்டார்கள் இப் போர்சொற்ற உபாயதந்திரமுந்தெரியமாட்டாது ஆகையால் நீசொல்வ யாயங்கற்றவர் ஆருமேயுக்கு ஒருகுறைவிருந்ததா அதுவென்னவெ ன்றால் உனக்கு வாதாமுண்டாயிருந்தால் ஈரிபோட்டே சேர்த்துக் கொள்ளவி இ தொன்குறைவு வுனக்குராசனே

பொது-விருத்தம்.

இப்படியவளுஞ்சொல்ல பேந்ததாயிருந்நின்றாள்
செப்பமாயிவளுஞ்சென்று செயிகமுதனக்குச்சொன்னால்
ஒப்பிட்டுப்பொருள்விரித்து வுடனேயென்னைச்சொல்வாளென்று
சர்ப்பம்போலொடுங்கிநிற்கத் தையலாளிது நினைந்தாள்

இதுவுமது-மெச்சகம்.

மன்னன்சலித்து மயங்கியிருக்கிறதைக்
கண்ணிமிர்பான்கண்டு காவலனைப்பார்த்துசொல்வாள்
பின்னைசலாதைக்கிப்போய் சீக்கிரம்போய்வாரேனென்றாள்
அன்னதைக்கேட்டப்பாகம் அரிவையைப்பார்த்துரைப்பான்

வசனம்.

அகோதெப்படியென்றால் அப்பாசுநாம்சொன்ன மசலாவுக்குப்பொ ருள்சொன்னேமே அதைஇவள்போய் மிர்பானுக்குச் சொல்வாளானால் அவள் அதைவிளித்து நம்மைக்கொல்வாளேயென்று விசாரப்பிருக்கும் போது மிர்பானென்பவள் நாம் இவளைவிட்டு நீங்கிப்போக இதுதான்தரு ணமென்றெண்ணி அரசனைப்பார்த்து நான்பின்னதலவாதைக்குப்போய் வருகிறேனென்றுசொல்ல இவருக்குச் சந்தேகமுண்டாகிச் சொல்லுகிற விதங்காண்க.

அப்பாசுக்கும்-மிர்பானுக்கும்-தர்க்கத்-தரு.
இ-ம்-எதுகுலகாம்போதி-ரூபகதாளம்.

அப்பாசுசொல்லல்.

அன்னமேபெண்ணரசே அரிவையரேயிப்போ
அவசரமாய்ச்சிறுநீர்க்குப்போய் அழகாய்வாரமென்றாய்
என்னமொழியென்றனுடன் பேசுத்துரைத்தாய்மாதே
இதுவெனக்குச்சமுசயமா யிருக்குதேயிப்போதே

மிர்பான்சொல்லல்.

சமுசயமாயிருக்குதென்றீர் தரணியாளுமரசே
தங்கப்பணியாவற்றையுந்தான் கழட்டித்தாரேன்
அமிசையதாய்வாங்கிக்கொண்டு அழகாகயிருந்தால்
அரைநிமிஷநேரமதில் அடியாளும்போய்வாரேன்

51



அப்பாசுசொல்லல்.

வாறேனென்றுசொல்லிப்பெண்ணேயுன் வார்த்தையைநம்பலாமோ
வரிந்துகட்டும்சேலையின் முந்தானியிலோர்தலைப்பை
ரோகவென்றன்கையில் நீகொடுத்துச்சென்று
நிமிஷத்தில்நீக்கிருந்து நேரிழையேவருவாய்

மிர்பான்சொல்லல்.

கொற்றவனேவாச்சொன்னீர் கோமானேயிப்போ
கொள்கையுடன்போய்வாரேன் குறைகளென்னவேண்டாம்
இத்தமையாய்நிந்திப்பின் கெளிந்திடுமென்சேதி
திறமுள்ளமன்னவனே சொயிருப்பீரே

பொதுவிருத்தம்.

பொற்பணிதொலிசுதன்னுடை புடவையோர்தலைப்புதன்னை
அப்பாசுகையிலிந்து அரிவையோர்பக்கஞ்சென்று
ஒப்புநிலையிளிற்பாதி உக்ரமாய்க்கிழித்துப்பின்பு
தப்பவோர்தாணிற்கட்டித் தையலாள்வெளியில்வந்தாள்

இதுவுமது-கலித்துறை.

வெளியிலிர்போய்விட மெல்லிநற்றுசியிகாமிக்கு
நழுவிபாசிறுள் வந்திடக்கட்டிநல்பக்கம்புகுந்தார்
வழிபார்த்திருக்குநன் மன்னனப்பாசுவாக்காரேனுமென்று
பழிகாறியுந்தப்பிப் போயினளோவென்றுபதறினனே

வசனம்.

அகோதெப்படியென்றால் அப்பாசுகையில் மிர்பானென்பவள் அ ளித்திருந்த தன்னுடை தொலிசு ஆபரணமுதலியதுகளை யெல்லாமட்டி. க்கொடுத்து தாயுமிருந்த புடவையி லொருமுந்தானியையுங்கிழி க்கொடுத்து தாயிருந்த புடவையி லொருமுந்தானியையுங்கிழி த்தமுந்தானியை அரசன்கையிற் கொடுத்துவிட்டு பின்னைச்சலவாதைக் குச் சொல்லிக்குவருகிறபாவனையாய் மறைவில்வந்து பாதிப்புடவையாய்க் கிழித்து தாணிற்கட்டிவிட்டு இறங்கிவிட்டுவிட்டு வெளியில்வர அதைய றிந்ததுரியும் வெளியில்லா இருவருமொன்றாய் அரண்மனைபோய்ச்சேர் ந்து மகிழ்ச்சியாயிருக்க இங்கே அகம்மாதுசாமசன் கொல்லைக்குப்போன வள் வரக்காணேமென்றுபிரலாபித்துப் புலம்புகிறவிதங்காண்க.

அப்பாசுபுலம்பல்-தரு-இ-ம்-கேதாரிகௌளை-ஆதிதாளம்.

பல்லவி.

எங்கேபோனாளோ-மந்திரிமகள்-எங்கேபோனாளோ

அநுபல்லவி.

கொங்காரிமிர்பானானது மங்கைக்குநான்சொன்ன
சங்கைமசலாப்பொருள் தன்னைக்கேட்டேயாத்தி

(௭ம்)

சரணங்கள்.

மதிமுகவனிதாத்தாள்—என்முன்வந்து
மயக்கியகனியாத்தாள்
சதிசெய்துபோமாற்றியே—வாசேனென்று
சர்ப்பனைசெய்துப்போற்றியே
செய்தவர்பிறுத்துவெந்தன் புகலம்மையாரேயிப்போ
சதித்தாரிபோனவழி—எதுவுந்தெரிந்திலேயே (௪௩)
வாசகம்பேசினாளே—மந்திரிமகள்
வளர்கின்னவ்மொழியாளே
பாசமுள்ளவன்தானே—போனதைக்கண்டு
பதைக்கிறேனுந்தானே
ஆசைகொண்டவனுக்கு—சேரவுமில்லையென்று
மோசஞ்செய்துதென்னையிந்தவேஷஞ்செய்தபாதகி (௪௪)
சேர்ந்துபோகமுட்டி—வந்தவென்னைச்
சேர்வேனென்றுமோட்டி
வாசேனென்றேபுணர்ந்தே—போனவள்
வாசமலர்த்தே
ஆரந்தனைவைத்து நீயிருக்கியவன்னைப்
பாராமலோர்வசனம் கூறுமிலனைவிட்டு (௪௫)

பொது—விருத்தம்.

புரம்பிப்பாகமன்னன் புத்தியுந்தீதற்செசால்வான்
நாயகிலவருமீர்த்தந் தைமல்போற்சதிசெய்வாரோ
கோலைதனஞ்செய்வானிந்தக் கோனவினழகும்பேச்சு
விளைவுமனதிலென்னை சேசம்யுருகுவானே.

வசனம்.

அதோதெப்படியென்றால் மிகர்பான்போனவுடன் அப்பாசமன்னன் செம்பவும்புலம்பிச்சொல்லுவான் இப்பேர்ப்பட்டவள் காளகம்மைக்கொலைசெய்வாள் அவளவளுடைய அழகுசவுந்தரியமும்பேசுஞ் சாதுரியவார்த்தைகளையுமெண்ணி யுருகிக்கொண்டிருக்கிறவிதங்காண்க.

அப்பாசசொல்—கரு—இ—ம்—புர்காகவாளி—அதிதாளம்.

பல்லவி

சொருகுகொண்டையழகி—போனதா
அருகுதருகுதிளகி

அநுபல்லவி.

மருவிமலானைமேல்சரசவார்த்தைகள்பேசி
மருவவாசேனென்றமாலைமுடித்தமலர்ச் (சொ)



சரணங்கள்.

சரிகைச்சேலை யுடையும்—மயிலின்
சாயலன்ன நடையும்
உருவினரம்பைத் துடையும்—கையில்
ஒருபிடிக்கு விடையும்
மருவுவேனென்றென்னை மயக்கிப்போருளைக்கேட்டு
வஞ்சிநீபோனதென்ன வஞ்சமோசொல்லடி (சொ)

நேத்திரான பெண்ணோ—நீசொன்ன
வார்த்தைதப்பிறாய் கண்ணோ
பார்த்துவந்து நண்ணோ—எனக்கு
பரிந்துகிளர்பை பண்ணோ
பூத்தமாமலர்மேற் சேர்த்துக்கையாலணைத்து
பார்த்துப்பார்த்துநிதம் கோர்த்துமுடித்தமலர்ச் (சொ)

வஞ்சியான பாவி—உன்மேல்
வைத்தேனேமன மேவி
கொஞ்சிக்கொஞ்சிக் கூவி—மோகந்
கொடுத்தமதன தீவி
நெஞ்சில்விரகதாபம் பஞ்சின்நீப்போற்பிடிக்கு
தென்சொற்கேளடி பஞ்சமாபாதகி (சொ)

மந்திரிமக ளென்று—எனக்குநீ
வஞ்சகஞ்செய் தின்று
விந்தைப்பகுவீ ரன்று—பெற்ற
மிகர்பான்மா தென்று
எந்தனுடன்சொல்லாமல் சிந்தைசோரவேமத்தி
தந்திரமாய்ப்போன தைபலேயுமையறிவேன் (சொ)

பொது—கட்டளைக்கலிப்பா.

இத்தகம்மதுசாய்புவருளியஅப்பாசென்னுமாசனியம்புவான், இந்த மாதுதனைக்கொலைசெய்குவாளென்று பெண்ணியேயேங்கியிருக்கையில், தாதிர்மதாய்ப்போனமிகருபா னந்தன்மனையினிற்றுனேகிப்போய் என்னை தந்தனைமயில்வசமாயகப்பட்டானென் றிருந்தைமெழுந்தனப்பா மறும்.

இதுவுமது—விருத்தம்.

விடிந்தபின்பருவிசேர்ந்தல் வெகுசனமந்திரிபோடும்
அடர்ந்ததோர்கொலுவிற்சேர்ந்து அவர்களுமிருக்கும்போது
சடுதியிற்புரவிபேரிச் சபையிலப்பாசுசெல்ல
மடமயில்வாராதால்சபைபோர் மன்னவருஞ்சொல்வார்.

நிலைமண்டில-விருத்தம்.

நேற்று நான் மன்னன் சொன்ன நேர்மசலாவை மக்கை
சாற்றிடத் தெரியாததாலே தயங்கியே போனமாது
தோற்றிலை யொன்றென்னாளிக் தோகைக்குச் சொல்லியனுப்ப
நாற்றிசை யோரும் மெய்க்கும் நவிர் மிகர்பானும் வந்தாள்.

வசனம்.

அதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் அப்பாசு சொல்லுமாறால் நேற்று மனமாற்றிப் போனவள் மந்திரி மகளல்ல பருவிராஜன் மகளாகிய மிகர் பானுதான் நானிருக்க வேண்டும் அப்படியால் மசலாவுக்குப் பொருளைக் கேட்டுக் கொண்டு போய் விட்டாள் இதுக்குமேல் எப்படியும் நம்மைக் கொல்லுவே யென்று போ யிருக்குமென்று மயங்கியிருக்கையில் அவள் நம்மிடையில் அந்த ஆனைவலை பட்டான் காதலித்ததினால் மனைவியெல்லாவென்று சொல்லியிருக்கையில் குருநாதராகும் பருவிராசனும் மற்றோர் களும் கொலுக்கூடியிருக்கையில் அரசமகாசாமகனும் பரியோடு சபையி லந்துசேர மிகர்பானுவாரதினாலே சபையிலுள்ளவர்களுக்கும் மன்னன் சொன்ன மசலாவுக்கு மங்கை பொருட்சொல்லத் தெரியாததால் அவன் தோற்பான் போலிருக்குமென்று ஒருநாதிசையனுப்பி அழைத்துவரச் சொல்ல அவள் வருகிறவிதங் காண்க.

மிகர்பான் வருகிற-தரு-இ-ம்-துசாவந்தி-அட-தாளம்

பல்லவி.

மாது மிகர்பானும் வந்தாள் இன்று சொல்வேனென்று (மாது)

அநுபல்லவி.

பாதச்சிலம்பு கொஞ்ச பணிகள் குலுங்கி மிஞ்ச
ஆகவன் மயங்கித் துஞ்ச அச்சபையுள்ளோரும் அஞ்ச
தனுதஜெந்தரிதாம்-தனுதஜெம்தரிதீம் - தரிங்கத் தகததிங்கதிகதாம்
தனுதனுத-திமிதகிடதக-தீம்தனுதஜெனு தெரிதில்லானுவென்று (மா)

சரணங்கள்.

மின்னலைப்போலத் தெறித்திடுங் கொண்டையும்-மயத்தில்வளர்
தாவியசம்பைத் தெறித்திடுநேசம் தனியிலாவான் கெண்டையும்
கூவுங்குயில்போல் தண்டையும்-கழுந்தனைத்
குறித்தபொருளைத் தொண்டையும்
தாவுந்திரையுட் நல்ல
தனிவேர்த்துளையும் சொல்ல
செல்ல
வெல்ல



தகுததகுதகு - தொருகதொருதகு ஜெகுணகுணசெகுதி சம்மகரிசரி
தாம்பரிபததாங்குதரிகிடகிர்திகிடதிமிதக (மா)

பொது-சொர்ச்சகம்.

மன்னன் பருவிராசர் மந்திரிமாருடனிருக்க
அன்னயவப்பாசெதிரில் நாட்டுந்திரையினுள்ளே
கன்னிபருவங்திருக்க காவலனப்பாசுவைப்பார்த்
தென்மசலாப்பொருள் சொல்லென வேந்திழையுஞ் சொல்வாளே.

அப்பாசும்-மிகர்பானுஞ்சொல்-தர்க்கத்தரு
இ-ம்-தோடி-சாப்புதாளம்

அப்பாசு.

மன்னர்மன்னவரையெல்லாம் வதைத்த சமர்த்திலாளே
முன்னே நான் சொன்னமசலாத்து முன்னுக்கும் பொருளுரையாய்

மிகர்பான்.

உரைத்திடுவேனிந்த வேளை யுறுதியாய்க் கேளரசே
வரிசையுடன் சொல்லுவேனீர் வந்ததைச் சொல்லீரே.

அப்பாசு.

வந்ததைக்கேளோருகுருவி மையிருட்டிலென்முன்
எந்தன்மீதிலாசைவைத்து யிசைந்தவரப்பிடித்தேன்

மிகர்பான்.

பிடித்தனெனப்பேசுகின்ற பேராசையிப்போ
அடித்தவாயைத்துடைத்தாப்போலருள்வதென்ன சொல்வீர்

அப்பாசு.

சொல்வதென்ன அதனுடைய தோன்றுங்காலும் வாலும்
நல்லாயென்றன் கரத்திருக்க நழுவித்தப்பிப்போச்சே

மிகர்பான்.

போச்சுதென்று சொல்லுகிறீர் புதுமையாச்சாயந்தான்
காட்டியதாய் மசலாவின் பொருள் கூறுகிறேன் கேளீர்

அப்பாசு.

கூறுகிறேனென்றுசொன்ன காரிகையேயிப்போ
வளமைப்பணியாவற்றையும் வைத்திடுவேன் சபையில்

மிகர்பான்.

வைத்திடுவேனென்றுசொன்ன மன்னவரே நீரும்
சித்தமதிலெண்ணாமல் சிறிச் சொல்லலாமோ

பொது-சொர்ச்சகம்.

பொன்னகையுந்துகில் தன்னைப் போர்வேந்தனிடங்கொடுத்ததினால்
இன்னமதாயிவ்வார்த்தைச் செப்புகிறுளினி நம்மை

நன்னுசபையினிற்சொன்னால் நகைப்பாரெல்லோருமென
னென்னமயிலனையாள் வாயிழந்து நலையிழந்தாள்

வசனம்.

அதோசெப்படியென்றால் மிகர்பானுவவள் இராத்திரி அப்பாசுவீ
விடத்திற்குப்போய் நகைமுதலியதுகிலையுங்கொடுத்துவந்ததை அரசன்
அதையே ஒருசாதிபாய்ப்பிடித்து உனது கபடமார்க்கத்தைச் சபையிற்
சொல்லிப் பொருள்களையும்வெளிப்படுத்துகிறதாய்ச்சொல்ல இவள்கேட்
டு இனிநமது பவிஷைக் கெடுத்துவிடுவானென்று பயந்திச்சோர்ந்து இ
ராசனைப்பார்த்துச்சொல்லுகிறவிதங்காண்க.

மிகர்பான்—அப்பாசுக்குச்சொல்—விருத்தம்.

தனித்திடுமுல்லையாண்ட தராபதிபவனேசப்பேரைத்
தனித்துநான்மசலாச்சொல்லித் தலங்கிபேயிருந்தேனிரும்
மனமசலாவால்வென்றீர் காதலினாலுந்தோற்றேன்
மனத்திலினியினைத்தவன்னை மன்னனேமுடித்துக்கொள்வீர்.

வசனம்.

கேளும் ராஜராஜர்களெல்லாந்துதிக்கும்படியான மன்னர்கோவே நா
ன் இந்நாள்வரைக்கும் என்சாமர்த்தியத்தினால் மசலாக்களைச்சொல்லி அ
னேகந்தராஜாக்களைச் சிரச்சேதஞ்செய்து கர்[illegible] அழிவுவராமலிருந்
தேன் இப்போதுநீர்வந்து எனது மசலாக்களெல்லாம் பொருட்சொல்லி
ப் பின்பொருமசலா நீர்சொல்ல அதைவிடுவிக்க எனக்குத்தெரியா[illegible]
க்கேகெலிதீர் நானேதோற்றேன் இனிஉமதிஷ்டம்போலே என்[illegible]
னைப்பிரகாரம் மணமுடித்துக்கொள்ளலாம் ராஜசிரோமணியே.

அப்பாசு—மிகர்பானுக்குச்சொல்—விருத்தம்.

நல்லதுபெண்ணேநானும் நாட்டம்போல்நடப்பேனீதான்
சொல்லிடுமவார்த்தைப்போல் நேர்மையேமணஞ்செய்வேனே
வல்லபாநானுமென்றன் வளாசனம்மிக்குப்போறேன்
மெல்லவேதந்தையோடு மேன்மையாய்ப்பேசுவீரே.

வசனம்.

ஆனால்கேளாய் மிகர்பானேயென்னும்பெண்ணேஇனிநான் உன்மனம்
போலே நடந்துக்கொள்ளுகிறேன் நீ சொல்லுகிறபிரகாரஞ்செய்யக் காத்
துக்கொண்டிருக்கிறேன்பெண்ணே.

மிகர்பான் வசனம்.

ஆனால்கேளும் அரசசிரோமணியே இனிநான் அந்தப்புரத்திற்குப்
போய்ச்சேருகிறேன் என்தந்தையிடத்திலிருந்து நடந்துகொள்ளுகிறது
பேசி அவர் மனம்போலே முடித்துக்கொள்ளும் சிரோமணியாகிய
மன்னவரே.



பொது—கட்டளைக்கலிப்பா.

அறிவுசேர்ந்திடுமப்பாசுமன்னனும்
அந்தநற்பருவீரடஞ்சென்றிட
பிரியமாகத்தமுவிப்பின்போற்றியே
பெட்புறுஞ்சபையோர்களும்வாழ்த்தியே
வரிசையாகமணக்கோலஞ்செய்திட
மன்னவன்சொற்படி முரசறையவன்
செறியுஞ்சீனகசர்ப்பறைசாற்றிட
சேர்ந்தாண்மனேமேவியனமிகருபான்.

வசனம்.

அதோசெப்படியென்றால் அகம்மதுராசகுமாரன் அப்பாசுமன்னன்
பருவீராசன் அருகிற்போக அவர்கட்டித்தழுவி செம்பவும்போற்றி சிம்
மாதனத்திலிருத்தியிருக்க அந்துள்ளமந்திரிபிரதானி மற்றுமங்கேசதேசத்
தரசர்கள் முதலியபாவரும்வாழ்த்திக்துதித்து எல்லோரும் ஓரோரிக்கா
ய் அப்பாசுக்கும்மிகர்பானுக்கும் நிகாவென்று மணமுடிக்கநாட்குறித்து
அரண்மனைமுதலிய சீனநகரமுழுமையும் சிங்காரஞ்செய்யும்படியாயும்ம
ற்றபேர்களுக்குந் தெரியும்படியாயும் முரசடிப்போனுக்குப் பருவீராச
ன்சொல்ல அதுபோலே அவன்பறைசாற்றுகிறவிதங்காண்க.

மணமுரசடிக்கிறதரு—துஜாவந்தி-சாப்புதாளம்.

மணமுரசடியென்னருமைபறைசாற்றுவேன்
வந்தனர்—சிலர்—முந்தவே-வந்து
இணைதனத்துதொனும்பினைரெத்தினக்கால்கொம்பு
இருத்தினர்—சனி—பொருத்தினர்
வச்சிரத்துதொனும்பச்சைமரகதத்தை
மருவினர்—சிலர்—திரிவினர்—நல்ல
அச்சிலேவார்த்தாப்போலிச்சையாயேமேலே
அமர்த்தினர்—பந்த-லுயர்த்தினர்
மன்னவர்கள்வந்துஉன்னதத்தைக்கண்டு
மகிழ்ந்தன-ரவர்கள்-புகழ்ந்தனர்—இந்த
அன்னவர்களிருக்கநன்மாடகூடங்கள்
அமைத்தனர்—மேடை—சமைத்தனர்
வாளமட்டோங்கிடநிமேல்மணமுர
சேற்றினர்—அணி-சாற்றினர்—இப்போ
மாணமுடனேவந்தாற்றினிலுயர்ந்தவரே
வருகுவீர்—மொழி-தருகுவீர்
வங்காளதேசத்துதச்சிங்களநாட்டோரே
வருகுவீர்—[illegible]-தருகுவீர்—கட்.

மந்திரிமார்களெல்லாம் மங்களமுடிக்கிறார்
வாருங்கள்-வந்து-பாருங்கள்
பலவகைவிபரமாய்செகமெங்குமதியவே
மாட்டினார்-மொழி-கோட்டினார்
தெய்வீகதீபனவெகுவகைவேகமாமலர்
தாவினார்-வந்து-மேவினார்
மாடத்திலும்புதுகூடங்களெங்களும்
வந்து-புகுந்து-லெங்கெங்கும்-அப்போ
கோடம்பரமாள் நாடப்புகேற்றவர்க்
கோதினார்-பல-சேதியும்

பொது-விருத்தம்.

பறைசாற்றச்சின்னகருள்ளோர்கேட்டு
பரிந்துமகிழ்ந்தேதெருக்கள்மாடகூடம்
சரிபெறவேபந்தல்தோரணங்கள்கட்டி
தனியலரைத்தூக்கிசித்திரத்தாவளைமைத்து
அரண்மனையில்மணவறையுமழகாச்செய்து
அதற்குரியகுணப்புலவர்களுக்காக்கி
நிரைநிரையாய்ச்செய்திருக்கும்வைபவத்தை
நேர்பருவீரமைச்சருக்குநிகழ்த்துவாரே

வசனம்.

அதோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் பட்டணத்திலுள்ள தெருவீதிகள்முதலான மேல்மாடகூடங்களிலும் அரண்மனை அந்தப்புரத்திலும் மணவறைப்பந்தல்பூவினாலலங்கரித்தும் செய்தசித்திரங்கள்முதலிய அனேகவிபவங்களுடன் அமைத்திருப்பதைப் பருவீரராசனுக்குரிய மந்திரிக்குச்சொல்லுகிறவிதங்காண்க.

இராசமந்திரிக்குச்சொல்

அவர்பறைசாற்றுவிக்குச்சொல்-விருத்தம்.

வளையுள்ளமந்திரிகேளாய் மணமனைஞ்செய்வதாலிந்
நகருள்ளோர்வெப்பையாவும் நாடிவேவ்வுகச்செய்வாய்
அகம்புகழரசனேநீ அப்படிச்செய்வேனென்று
தகும்வீரர்பறைசாற்றென்னைத்தடிசாக்கினபோலேசெய்வேன்

வசனம்.

கேளாயென்மைமந்திரி தாஞ்சேனைநாதவப்புத்திரியாகிய மிகர் பானுக்கு இப்போதுவிவாகமென்னுமங்கலியாணஞ்செய்யவேண்டியிருப்பதால் இந்நகரத்துள்ளோர்களும் அன்னியதேசத்தரசர் முதலானபேர்களும் காஜி-சந்தீபு-வெப்பைய ஆலிம் இவர்களெல்லாம் மணவறைப்பந்தலுக்குவரும்படியாய்ச்செய்வியமந்திரியே.



மந்திரிவசனம்.

அப்படியேசெய்விக்கிறேன் சிரோமணியானதவுலத்தே(ம-ப்பை-வி சொ-வ-ம்) அதோஷேனாப்பறைசாற்றும்விதனே பருவீரராசாவுடையமக ள்மிகர்பானுக்கும் அவருடனேதாக்குஞ்செய்து மசலாவுக்கும் பொருள் சொன்ன அப்பாசுமன்னவருக்கும் நிக்காமுடிப்பிக்கப்போகிறதால் யாவ ர்களாரும்மணவறையில்வரும்படியாய் பறைசாற்றினாரும்பிள்ளாய்(பண் சொ-வ-ம்) அப்படியேதெரியப்படுத்திவருகிறேன் சிரோமணியாகியமந் திரியே

பறைசாற்றுகிற-தரு-ஆனந்தக்களிப்பு-இ-ம-புன்னாகவராளி

அந்தணர்பறைபடிப்பவன்-நன்று
பதிந்திடவேயார்க்குஞ்சொலிப்படிப்பவன்
மந்திரிசொல்வினைப்போற்றி-நல்ல
மணிமுரசானதையானைமேலேற்றி
தந்திரமாய்ப்பறைசாற்றி-சின்த்
தனிநகர்தெருவெல்லாம்நான்மலர்தூற்றி அந்த
அந்நகரிலுள்ளோரறிந்திட்டார்-வந்த
அரசர்களெல்லோருமதைத்தெரிந்திட்டார்
நன்னயகுணமுள்ளோர்புகழ்ந்திட்டார்-சுற்று
நாட்டிலுள்ளோர்களுமாடிமகிழ்ந்திட்டார் அந்த
சாற்றிடவேகூடிவந்தனர்-மணம்
தன்னையேநாடி ஞானந்தனர்
மாற்றும்விநோதங்கண்டுமகிழ்ந்தனர்-அந்த
மணப்பந்தல்தனில்மகிழ்வாய்நிறைந்தனர் அந்த

பொது-விருத்தம்.

நகரெங்கும்பறைகள்சாற்றும்நன்மொழிகேட்டோரெல்லாம்
மகிமைசேர்மிகர்பானுக்குமப்பாசுக்குந்தானமுடிப்பதற்கு
அகம்புகழ்பருவீரேந்திரனவையில்மந்திரிரூம
நகுமணப்பந்தல்தன்னில்நாடியும்வந்தாரே

இதுவுமது-விருத்தம்.

அந்தமுளபந்தல்தனிலெல்லவருஞ்சேர்ந்திடவே
இந்தபருவீரெல்லோருக்குமரியாதைசெய்து
பந்தவாசர்களிருக்கும்பாவனைபோலிருக்கச்சொல்லச்
சிந்தைமகிழ்ந்திருக்கஜெயவப்பாசும்வந்திருந்தார்

வசனம்.

அதோதெப்படியென்றால் முரசடிப்போன் நகர்முழுவதும் மணத் தைக்குறித்துச்சொல்லிமுரசடிக்கவே அந்நகரத்திலும் நாட்டிலு முள்ள யாவர்களாரும் பிரதேசத்திலுள்ள ராசாக்களும் ஆலிம் — வெப்பை-
யே

(மணக்கிருமணவறைப்பந்தலில்வந்தசேர பருவிராசனும் அவர்மந்திரி முதலியபேர்களும் இந்தப்பந்தலில்வந்து இராசன்யாவத்திராளுக்கு மரியாதைசெய்து அவரவர்களிருக்கும்படியாகிய கிரமப்பிரகாரம் இருக்கச்சொல்ல அவர்களப்படியிருக்கையில் அந்தயான்தேசத்தையாண்ட அக மமதசாபுத்திரன் அப்பாசென்பவர் மிகர்பானைமணஞ்செய்வதற்காக மணவறைப்பந்தலின்மத்தியிலிருக்கும்நாகநத்தில்வந்திருக்கஇனிமேல்நடக்கப்போகிறவிதங்காண்க.

கலியாணத்-தரு-இ-ம்-ராட்டை-அடதாளம்.

மன்னவனும்பருவிராசன்மனமதுதான்மகிழ
நன்னயமதாகவெல்லோருநாடிமனமகிழ்வாய்

எண்டிசையோர்போற்றும்அப்பாசென்னும்அரசருக்கும்
வண்டுறைமலர்சூடும்மிகர்பான்மாதுமின்னாள்தமக்கும்

வந்தசுதிஅத்திபுஆலிமகிழ்வுளவெப்பைகளும்
சிந்தைமகிழ்வாகமார்க்கப்படிசிறப்பாய்மணமுடித்தார்

நிக்காமுடிந்தபின்புகல்லெரியாப்பாத்திகாவோதி
அக்கனிடந்தனிலேயெல்லவருமன்பாய்த்துவாக்கேட்டு

மன்னனப்பாசரைப்பருவிர்மகளிருக்குமறையில்
அந்நேரமேயழைத்துமிகர்பானவளருகிலிருத்தி

கையதனைப்பிடித்து-இருவரும்நீடூழிவாழ்கவென்று
மைதையலர்கள்வாழ்த்த-மற்றும்-தோழியர்கள்போற்ற

ஒண்டொடிமாதியர்கள்-ஆலத்தி-உகப்புடனேந்திநிற்க
அன்றுஅப்பாசுமன்னன்-மிகர்பான்-அகமகிழ்ந்தேயிருக்க

வந்தஅரசருக்கும்-சின-மாககருள்ளவர்க்கும்
சிந்தைகளிகூர்ந்து-காஜியெப்பை-ஜெபஆலிம்கத்திபுக்கும்

சிக்கன்பருவிரும்-ஒசிவனம்-அப்பாசுவேகொடுத்து
அக்கத்தாம்பூலமுடன்-வெகுமதி-தரிதமாய்த்தான்கொடுக்க

வந்தவரெல்லோரும்-அவரவர்-வாழ்மனைபோய்ச்சேர்ந்தார்
அந்தப்பருவிரும்-மனைவியும்-அகமகிழ்ந்தேயிருந்தார்

பொதுகட்டளைக்கலித்துறை.

மன்னனப்பாசுமாதுமிகர்பானும்
மனமகிழ்ந்துமருவிச்சுகிக்கையில்
அன்னைதந்தையிருவரையுஞ்சிந்தை
அரசன்தன்னிடம்விட்டாதுரமாய்



இன்னங்கன்னனிற்காணுமிருப்பது
எற்குமோஇறையோனுக்கென்றெண்ணியே
தன்னுடன்வரலாறுமுழுமையும்
தையலர்க்குரைத்தேயின்னுஞ்சொல்லுவார்

வசனம்.

இந்தப்பிரகாரம் அப்பாசுக்குமிகர்பானுக்கும் நிக்காமுடிந்தபின் பருவிராசன்சகலமானபேர்களுக்கும் உணவுமுதலாகியதாம்பூலங்கொடுத்து காஜிமுதலியபேர்களுக்கும் வெகுமானமுதலியதுமளிக்க அவர்களிடத்திற்குப்போய் மகிழ்ச்சியோடிருக்கப் பெண்ணுமாப்பிள்ளையும் ஆறுமாதம்வரையில் ஒன்றுக்கொன்றுபிரியாவிடையா யிருக்கையில் அப்பாசென்பவர்தந்தைதாயைவிட்டு நாளாகிப்போச்சுதே நமதுநகரமும்போய்ச்சேரவேணுமேயென்றுதன்னிடவரலாறனைத்தும் மனைவிமிகர்பானுக்குச்சொல்லித் தன்னூருக்குப்போகப்பிரயாணப்படுகிறதற்காகமனைவிக்குச்சொல்லுகிறவிதங்காண்க.

அப்பாசு-மிகர்பானுக்குச்சொல்-விருத்தந்தரு

என்னிடமனதுக்கேற்றவத்திவழிமிகர்பானேகேள்
அன்னைதந்தையரைவிட்டுஅறுமாதமானதாலே
உன்னிடதந்தைதாய்க்குவுகப்புடன்சொல்லிக்கொண்டு
பொன்னமைபாய்விடைகொடுக்கப்

போவோம்வாராய்பெண்மயிலேநாம்
போவோம்வாராய்

போவோம்வாவென்றன்பூமியதனையாள
புவ்யமளிதர்வாழ்த்தபுகழ்சர்கள்போற்ற — போவோம்

அன்னமேயென்மனதாகியசொர்ணமே
அநிதிக்கிரமதாயிவ்வளிகர்தனைவிட்டுப் — போவோம்

தந்தைதாயிருக்கும்தனிநகர்தனிற்சேர்ந்து
தானவர்களைக்கூடித்தனியரசாளவே — போவோம்

பொதுவிருத்தம்.

இந்தவிதமப்பாசுசொல்லும்போது எழில்மிகுபானுகவனிசைக்கேட்டுத் தந்தைபருவிர்தனக்குமகளுஞ்சொல்லத் தாய்கேட்டுமயங்கிப் பின்னிருவர்தேர்ந்து, அந்தமாய்ப்பணிபொருள்கள்வரிசையாக அனேகபரிகரிகளிபாவிரிந்து, விந்தையொடுவிடைகொடுக்கப்பெற்றுக்கொண்டு மேழுகர்தனைவிட்டுச்செல்கின்றாரே

வசனம்.

அதோதெப்படியென்றால் அப்பாசுமனைவியைப்பார்த்து ஓமயிலுவளே என்தந்தைதாயைக்கூட்டி என்நகரம்போய் அரசாளவேண்டியதனையால் உன்தாய்தந்தையிடத்தில் சொல்லிவாவென்ன அப்படி

போகன்றைதாயிடத்திற்சொல்ல அவர்கள்கேட்டுவருந்தி முற்றுப்பிக்கும சங்கேசர்க்கு இரதகசதுரகபதாதியென்னும் நால்வகைச்சேனையையும் அனேகப்பொருள்முதலியபணிகளையும் தாதிகளையும் வரிசையாக இனுங் கொடுத்து விடையுங்கொடுக்க இவைகளையெல்லாம் பெற்றுக்கொண்ட அப்பாகமன்னனும் மிகர்பானும் மற்றபாலத்திரர்களும் அந்நகரைவிட்டுத் தன்னகருக்குச்செல்லுகிறவிதங்காண்க.

அப்பாகவழிநடக்கிற—தரு—இ—ம—ஆனந்தபைரவி—ரூபகதாளம்.

வெற்றிப்புரவிமேலப்பாகமன்னனுமேறினர்—அப்போ
சித்தமகிழ்வாய்மிகர்பான்முத்துப்பல்லக்கேறினன்
நால்வகைச்சேனையும்ரதகசதுரகமுந்துமுகில வழி
எல்லாய்நடக்கக்கண்டோன்றோடியில்வந்தாழிலே.
சினக்கரிகடெருப்புநடந்துநடந்தனர்—அன்று
கானகம் காண்டிக்கரிபமலையையுங்கடந்தனர்
கடந்திடும்போதிலோர்கனகமயுச்சரைக்கண்டார்—இரவு
அடர்ந்ததாலிங்கிருந்தெல்லோருநாளைச்செல்வோமென்றார்
வந்திடுஞ்சேனையுமன்னனுமங்கேயிருந்திட—அப்போ
பந்தயிருள்நீங்கிப்பானுவும்வந்தேபொருந்திட
விடிந்தேகெழுந்துவிரைவாய்ச்செல்வோமெனநப்பினர்—அங்கு
கடிதம்போட்டவினைறைக்கண்டுமிகர்பானுக்குச்செப்பினர்
சொல்லிடக்கேட்டுமனைவியும்ராசனும்புல்லைமயில்—முன்
அல்லற்பட்டுவந்தருங்பாதையுங்கடந்துசெல்லுகையில்
சிந்துநகர்தனைமுந்தித்தெரிந்திடப்பார்த்தனர்—அப்போ
அந்தநகரோருமாசனிப்படைகண்டுவேர்த்தனர்

பொது—விருத்தம்.

அப்பாகசேனையோடுமந்நகர்க்கேகும்போது
செப்பும்தாபீதாரசன்சேர்ந்திடும்தளத்தைக்கண்டு
ஒப்பிலான்றோசேவென்று ஒருதூதையனுப்பிக்கேட்க
தப்பிலாவகம்மதின்றன்றனையனென்றறிவித்தானே

இதுவுமது.

ஆதலால் முறைக்கக்கேட்டகோன்றல்தாபீதாரசன்
பேதகமிலாமகிழ்ந்தபெருக்கமாயெதிரேசென்று
நீதமாயழைத்துத்தந்தைதாயிலாவீட்டிற்சேர்க்க
விதமாய்ச்சென்றுவந்தவிப்பாகஞானத்திருந்தார்

வசனம்.

அகோதேப்படியென்றால் அப்பாகமன்னனும் மிகர்பானும்நால் வகைச்சேனைகளுமுச்சினமாக்கவர விட்டுப்பிரயாணப்பட்டுக் காடு—செடி—மலை—வனம்—வனாந்தரங்களையும் தங்கவேண்டிய இடங்களிலேயும் தங்கிமுன்னவதிப்பட்டுப்போன பாலைகளையெல்லாம் தொலைந்து சிந்துதேசம் வந்துசேர அந்நகரையாளும் தாபீதாசன்கண்டு பகைவரோ வென்று



ஞாதனையனுப்பிக்கேட்க அவர்கள்வந்தவர் அகம்மதாசாவென்றுசொல்ல அரசன்கேட்டுநால்வகைச்சேனைகளுடனே எதிர்சென்றுபோய் அழைத்துக் கொண்டு அகம்மதாசாவும்அவர்மனைவியு மிருக்கிற அந்தப்புரத்திற்குப் போய்ச்சேர அவர்கள்புதல்வனைக்கண்டுதழுவிப் பின்புதாபீதாசனும் அப்பாகம் அவர்தந்தைதாயும் ஒன்றுக்கொன்றுஇவர்களைவிட்டுப்போனநாள் முதல்வந்தவரையிலும் நடந்தசெய்திகளைச்சாங்கோபாங்கமாய்ச்சொல்லிக்கொண்டிருக்கையில்இனிநடக்கிறவிதங்காண்க

அப்பாகும்-தாபீதுமன்னனுஞ்சொல்-விருத்தம்.

கடம்புபதாபீதேகேள்தாய்தந்தையுமதிடத்தில்
அடமானம்வைத்தபொன்னையளிப்பேனுன்வாங்கிக்கொள்வீர்
நடப்பரிநடத்தும்ராசேநவில்வதுமழகதாமோ
இடம்பொருளேவலெல்லாமும்மிடசொந்தம்தானே

வசனம்.

கேளும் என்தந்தைதாயைவைத்துஆதரித்து எனக்கும்உதவிசெய்த தாபீதாசரே முன்உம்மிடத்திலன்னையிதாவை அடவுவைத்து வாங்கிப் போனபொன்னைத்தருகிறேன்வாங்கிக்கொள்ளுமன்னரே.

தாபீதுசொல்வசனம்.

கேளும்இராசராசர்களும் நாளும்துதிக்கும்படியான சிம்மபெருமே இந்நகரமும் சகலபொருள்களும் படைமுதலியநாளும் உம்முடையசொந்தமேயொழியவேறல்ல ஆனால்நான் தெரியாமற்செய்த அபசாரத்தைப் பொறுத்துக்காப்பாற்றவேணும்ராசசிகாமணிகளே

பொது-விருத்தம்

அன்றுதாபீதாசன்வந்தபேர்க்குமந்நகரிலுள்ள மனுவானபேர்க்கும், நின்றுசளிகூர்ந்திடவேவிருந்தளித்துச்செயலப்பாகக்குமவர் தந்தைதாய்க்கும், நன்றுவிடைகொடுத்தனுப்பவதனைப்பெற்று நான்குவகைச்சேனையொடும்நகருக்கேக, வென்றிபதாய்சசெல்கையில்முன்விழுந்துசோர்ந்தவிடமதனிற்போயிறங்கிவிடுதிசெய்தார்

இதுவுமது.

விடுதிசெய்துவனலருந்திவிடிந்தபின்புவெய்யசாமதனிலோர்பள்ளி கட்டிப், படியிலுளநகரமெல்லாம்தோற்கச்செய்யும்படியாகவோர்நகரம்தனையுண்டாக்கி, அடைவுபெறமனிதர்களைக்குடியுமேற்றி யந்நகர்க்குவெர்ருவர்தனையரசனாக்கி, விடியுமுன்னேநகரைவிட்டுப்பதாதிருமுவீரைந்த்த மாநகர்க்குமேவினரே

வசனம்.

அகோதேப்படியென்றால்சிந்துதேசத்தை ஆளும்தாபீதாசன் அகமதாசாவினுடையபுதல்வன் அப்பாகுக்கும் அவரோடுகூடவந்தநால்வகைச்சேனைகளுக்கும் அந்நகரத்திலுள்ளஅனைவர்களுக்கும் அறுவகைச்சுவைபோசனிருந்தளித்து அவர்களுக்குவிடைகொடுக்க அவர்கள்தனசேகரமாய் முன்வந்தவழியேநடக்கையில் முன்வருகையில் அப்பாகதவழி

யிருந்த இடமாகிய பாலைநிலத்திலிறக்கிக் கூடாரமடித்து யிவ்விரண்டாகிய ஒர்பள்ளியுங்கட்டி எங்களூர்களும் கேரோவென்றெண்ணும்படியாக ஒருபுதுநகருமுண்டுபண்ணி அதில்மனிதர்களைக்குடியேற்றி அந்நகரிலொருவரையரசனுக்கவைத்து அதைவிட்டுப்பிரயாணமாகித்தமதுஅந்தமாநகரத்துக்கடுத்தமைதானத்திற்கூடாரமடித்திருக்கையில் இனிநடக்கிறதிதங்காண்க.

## பொது—விருத்தம்.

மேலியநகரடுத்துவெளியினிலிருக்கும்போது
காலியபரையாளுந்தன்மந்திரிதருமோர்க்கும்
வேலுதனையனப்பனிரைவுடனவர்க்குச்சொல்ல
காவுமந்திரியாருஞ்சதுரியில்வந்தானப்பார்

## இதுவுமது

கன்னியேமந்திரியாரங்கணதுசெப்பப்போற்றிப்
பண்டுகதுசாமைக்கண்பார்த்தியனப்பாசேயும்
நன்றதாயழைத்துக்கொண்டுநகர்வலஞ்சுற்றிவந்து
அன்பரவன்றனிப்பிற்சேர்ந்துஅகமகிழ்ந்திருக்கவப்போ.

## இதுவுமது.

அந்தமாநகரைச்சார்ந்தஅரசர்க்குத்தூதனப்ப
பந்தமாயரசர்கேட்டுப்பதறிகளுகூழுந்து
வந்தோராசரெல்லாம்மன்னகமதுசாவுக்குச்
சொந்தமாய்ப்பட்டங்கட்டுஞ்சுபமதைச்சொல்லுவோமே.

## வசனம்.

அகோதெப்படியென்றால் அகம்மதுசாவும்அவர்புதல்வன் அப்பாசும் அந்தமாநகருக்கடுத்த வெளியிலிருந்துமந்திரிக்கும் அவ்வூராருக்கும் ஒருதூதனையனுப்பத்தூதன்போய்ச்சொல்ல அவ்வூராரும் மந்திரியுமெதிர்வந்தழைத்து நகரைவலம்வந்து அந்தப்புரத்திற்போயிருந்து தமதுநகரைச்சேர்ந்த ராசாக்களுக்கெல்லாம் தூதனுப்ப அவர்கள்கேட்டுஅவரவர்கள் தன்சேனைகளுடனே அந்தமாநகரமதுக்குச்சேர்ந்து அகமதுசாவையும்அப்பாசையுங்கண்டுஅடிபணிந்து தாழ்ச்சியுடனிருந்து அகம்மதுசாவுக்குப்பட்டங்கட்டுகிறவிதங்காண்க.

## பொது—விருத்தம்.

உக்கிரமுடனுடைதரித்துவுற்றதோளசிப்புட்டி
முகப்பித்தினிலங்கச்செய்புமுத்தாரப்பணிகள்பூட்டி
மகப்பிரதம்அகமதுசாமந்திரியருடந்தன்னை
செகப்பிரகாசமர்ச்சிரசினின்மணிமிட்டாரே



பட்டாபிஷேகஞ்செய்கிற—தரு—இ—ம—உசேனி—ஆதிதாளம்

## பல்லவி.

பட்டாபிஷேகஞ்சூட்டினார்அகம்மதுசாவுக்குப் பட்டா

## அநுபல்லவி.

அட்டதிசையும்போற்றும்அரசரெவரும்போற்ற
பட்டவர்த்தனர்வேதப்பண்டிதருங்கோசேத்தப் பட்டா

## சரணங்கள்.

அட்டூர்படையிலங்க—இட்டஅம்மன்னர்கலங்க
பட்டருஞ்சபைதுலங்க—வெட்டருமன்னவர்மார்பில்
அணிந்தநவமணி—புனைந்தமகுடனை
வணங்கராசர்கள்—இணங்குசபைவந்து
அன்னால்தனைத்துதித்துஅரசர்நிறைகுவித்து
அரியசிம்மாதனத்தில்வரிசையாய்த்தாமமர்த்தி பட்டா

சந்திரனுதையமென்னஇந்திரனுமீடாவென்ன
வந்தோரெவருந்தன்னஅந்நகர்முழுதும்
அந்தரமேபெரிகைதிந்திமிமென
மூர்த்தியவாத்தியத்தொந்தொந்தொமென
சந்ததுராசர்மிகசிந்தையிற்களிகூற
வல்லவர்களுமேற்றஅல்லவர்களும்போற்ற பட்டா

மங்கையர்கவரிபோடநங்கவாணக்களிகூட
நங்கையர்நடமாடபொங்குசுடலைவே
வங்கர்மாடர்கலிங்கர்களுடர்
சிங்களர்கொங்கணர்செங்குளபேர்களும்
வந்தகமதுசாவைவாழ்த்தசிந்தையிற்களித்துப்போற்ற
வல்லசெங்கோலேந்தியெல்லோர்களையுங்காக்கப் பட்டா

## பொதுவிருத்தம்.

நபம்வரமகுடமுடிபுனைந்ததற்பின்
நற்கொடைபிரவலர்க்கீந்து
விபனுளதேசவிசாரணைசெய்து
மேதினியதனிற்செங்கோலைச்
செபமுடனுண்டுதோமுன்னோர்கள்
செழிப்புடன்வாழ்ந்துகொண்டிருக்க
தபவகமதுசாதனையனப்பாசும்
தையலரோமெல்வாழ்ந்திருந்தார்

வசனம்.

அகோதெப்படியென்றால் அகம்மதுசாவுக்கு அந்தமாங்கனை இரண்டாவதுபட்டமாள்வதற்குச்சகலதேசமன்னர்மன்னவர்களெல்லாம் குழச் செங்கோல்கையிலேந்தி ஏகச்சக்கராதிபதியாயிருந்து தனதுமனைவியும்புதல்வனாகிய அப்பாசுமன்னனும் அவர்மனையாள் மிகர்பானென்னும்பெண்ணும் நீதியோடரசாண்டு நினைறிசெலுத்தி யாதொருகுறையுமில்லாமல் மங்களகரமாய்வாழ்ந்திருந்தார்களென்றறிவீராகவும்

வாழி-விருத்தம்.

ஆதிபிறகுல்காலியார்களுடன்வாழி
அசுஹாபிமார்களும்அசனுசைனும்வாழி
வேதவர்கள்மாதவர்கள்மெய்யோர்கள்வாழி
வேந்தரகமதுசாவுமனைவியரும்வாழி
நீதிசேரப்பாசுமன்னனும்வாழி
நிகரிலாமிகர்பானும்நீதியுடன்வாழி
ஆதியருளால்ஞானமசலாவின்தன்னை
யாவருமகிழ்ந்திடவேநாடகமாய்ச்சொன்ன
கோதிலாசாமநாதபுரத்தில்வாழுங்
குணமுள-ப-வெ-முகம்மதிபுருகிம்வாழி
தீதிலாநெல்வேலிநகரமதில்வாழுஞ்
செயமேவுவங்காளமுகம்மதுராவுத்தர்
காதலனபகுதண்ணராவுத்தர்வாழி
கற்றவர்கள்மற்றவர்கள்கருதியச்சிட்ட
சோதிதவழொற்றியூர்தனில்வாழ்வேளாளச்
சுமுகனும்பாசுராமப்பிரபுவாழியவே

ஆமீன் ஆமீன் யாறப்பில்ஆலமீன்.

அப்பாசு நாடகம்

முற்றிற்று.

—